www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 11 | ஒக்டோபர் 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 73

# பேச்சுவார்த்தை ஆரம்பிக்க ஜனாதிபதி இழுத்தடிப்பு

# வாழ்க்கைச் செலவு வானத்தை நோக்கி உயர்வு!

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா 59வது ஐ.நா சபைக் கூட்டத்தில் உரையாற்றினார். அதன் பின் உலகத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். அத்துடன் ஊடகங்களுக்கு பேட்டிகளும் வழங்கினார். அப்பொழுதெல்லாம் அவர் கூறியவற்றின் மையத் தொனிப்பொருளாக அமைந்திருந்தது சமாதானமும் அதற்கான பேச்சுவார்த்தை பற்றியதாகும். இனிமேல் இலங்கையில் யுத்தம் இடம் பெற வாய்ப்பில்லை என்றும் இரு தரப்பும் அதில் உறுதியாக இருப்பதாகவும் கூறிய ஜனாதிபதி பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக் கப்பட்டு சமாதானம் நிரந்தரமாக நிலை நாட்டப்படும் என்றும் கூறியிருந்தார்.

இவற்றை அவதானித்த போது 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை' என்ற பழமொழி தான் நினைவிற்கு வந்தது. ஏனெனில் நேரத்திற்கு நேரம் மாற்றி மாற்றிப் பேசுவதில் ஏற்கனவே ஜனாதிபதியின் மீது நம்பகத்தன்மை அற்ற நிலையே இருந்து வந்தது. இப்பொழுதும் உலக சமூகத்தின் முன்பாக ஒன்றைக் கூறி விட்டு இங்கு வந்து பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க உரிய நடவடிக்கை எடுக்காது அதனை இழுத்தடித்துச் செல்லுவதற்கான முயற்சிகளிலேயே இறங்கியிருக்கிறார்.

இன்றைய உடனடித் தேவையும் முயற்சியும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதும் முன்னெடுப்பதுமாகும். அவ்வாறு பேச்சுவார்த்தைக்குரிய ஒரு வரைபாக புலிகள் ஏற்கனவே முன்வைத்த இடைக்கால நிர்வாக கட்டமைப்பிற்கான யோசனைகள் இருக்கின்றன. அதனை வைத்து பேச்சுவார்த்தை மேசைக்கு வரப் புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது. அதனை அவர்கள் நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் அரசாங்கத்திற்கும் வெளி உலகிற்கும் வெளிப்படுத்தி நிற்கின்றனர். பேச்சுவார்த்தைக்கு மறுப்பு என்ற நிலைப்பாட்டில் புலிகள் இயக்கம் இப்பொழுது இல்லை.

இந்த நிலையில் இன்றைய ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் முன்னாலேயே பேச்சுவார்த்தையைத் தொடக்கும் பாரிய பொறுப்பு உள்ளது. ஆனால் அதனை துணிவுடனும் தூரநோக்குடனும்

## அரசாங்கம் திண்டாட்டம் ஜே.வி.பி திணறுகிறது


செய்யாது ஜனாதிபதி இழுத்தடித்துச் செல்வதிலேயே முனைப்பாக இருக்கிறார். அதன் ஒரு அம்சமாகவே சகல பாராளுமன்றக் கட்சிகள் மத அமைப்புகள், சிவில் சமூக நிறுவனங் கள் என்பனவற்றை உள் ளடக்கிய அரசியல் ஆலோசனைச் சபை என்ற ஒன்றை அமைப்பதற்கு முயன்று வருகிறார்.

இந்த ஆலோசனைச் சபை அர்த்தமற்ற ஒன்றாகவே அமைந்து கொள்ளும். இது முந்தியகால சர்வகட்சி மாநாடு வட்டமேசை மாநாடு போன்ற வெற்றுப் பேச்சுக்களுக்கான ஒன்றாகவே அமைந்து கொள்ளும். இந்த ஆலோசனைச் சபைக்கு பிரதான எதிர்க்கட்சியான யூ.என்.பி.யும் தமிழர் கூட்டமைப்பும் மறுத்த விட்டன. தீவிர இனவாதம் பேசிவரும் ஜே.வி.பி. யும் ஜாதிக ஹெல உறுமயவும் உள்ளடங்கும் அரசியல் ஆலோசனை சபையினால் உருப்படியான தீர்மானங்களை எவ்வாறு எடுக்கமுடியும். அப்படித் தீர்மானித்தாலும் புலிகள் இயக்கத் துடன் அவற்றை வைத்துப் பேச முடியுமா? குறைந்த பட்சத் தீர்வைத் தானும் பெற இயலுமா?

ஜனாதிபதிக்கு ஜே.வி.பி. யைத்தாண்டிச் சென்று பேச்சுவார்த்தைக்குச் செல்லும் துணிவு சற்றேனும் கிடையாது. அதே வேளை முன்பு சமாதானத்திற்கான யுத்தம் என்றவாறு அரசியல் தீர்வுக் கான யுத்தம் என்ற

தொடர்ச்சி 12ம் பக்கம்





## நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படுமா? கோரிக்கைகளும் போராட்டங்களும் நியாயமானவை!

எழுபது வீத சம்பள உயர்வு பற்றி தேர்தல் காலத்தில் கூறி வந்த ஐ.ம.சு. முன்னணியினர் பதவிக்கு வந்த பின் ஐம்பது வீதம் சம்பள உயர்வு என்று பேச ஆரம்பித்தனர். மூன்று மாதத்தில் வழங்குவோம் எனத் தேர்தல் மேடைகளில் முழங்கிய அவர்கள் வரவு செலவுத்திட்டம் வரை பொறுத்திருக்குமாறு கேட்டு வருகிறார்கள். அவ்வாறு வரவு செலவுத் திட்டத்தில் எத்தனை வீதமான சம்பள உயர்வு அதிகரிக்கப்படும் என்பது தெரியவில்லை. தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு போதுமான சம்பள உயர்வுகிடைக்குமா என்பதே தொழிலாளர்கள் ஊழியர்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும்.

இந்நிலையில் ஏற்கனவே தொழிலாளர்கள் ஊழியர்கள் தங்களது கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம், மறியல், எதிர்ப்பு, ஆர்ப்பாட்டம், அடையாள பகிஸ்கரிப்பு என்ற வடிவங்களில் போராட ஆரம்பித்து விட்டார்கள். சுகாதாரத்துறை ஊழியர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து பணிநிறுத்தப் போராட்டத்தை நடாத்தினர். கடந்த மூன்று வாரங்களுக்கு மேல் பல்கலைக் கழகங்களின் கல்வி சாரா ஊழியர்கள் நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்தம் செய்து வந்தனர். பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தனியார்மயப்படுத்தலை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். புகையிரத தொழிற்சங்கங்கள் புகையிரதப் போக்குவரத்து தனியார் மயப்படுத்தும் உள்ளார்ந்த நடவடிக்கைகளை அவதானித்து அதிகார சபையாக மாற்றப்பட்டமையைக் கைவிடக் கோரியும் ஏனைய கோரிக்கைகளை முன்வைத்தும் போராட்டத்தில் இறங்க தயாராகி வருகிறார்கள்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக் வழங்கிவந்த ஆகக்குறைந்த சம்பளத்திற்கான கூட்டு ஒப்பந்தம் முடிவடைந்து மூன்று மாதங்கள் சென்ற பின்பும் சம்பள உயர்வு பற்றி எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதேவேளை அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பு மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் மிகக்கடும் தாக்கத்தையும் ஏற்படுத்தி உள்ளது. அதனால் சம்பள உயர்வுக்காக அவர்கள் போராட வேண்டியவர்களாகி உள்ளனர்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

## இ.தொ.கா.வின் மற்றொரு காட்டிக்கொடுப்பு மேல்கொத்மலை திட்டத்திற்கு சம்மதம்

மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பை தெரிவித்து வந்தது இ.தொ.கா தற்போது சம்மதத்தை தெரிவித்துள்ளதாக அறியமுடிகிறது.

சில மாற்றங்களுடன் மே.கொ.திட்டத்தை நடைமுறைப்படுத்த இ.தொ.கா. இணக்கம் தெரிவித்ததாக மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந் தெரிவித்துள்ளார். அதாவது டெவன்,பூனா, றம்பொடை நீர்வீழ்ச்சிகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் மேல்கொத்மலை திட்டத்தை அமுல்படுத்த இ.தொ.கா அரசாங்கத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து அரசாங்கம் மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தையும் நுரைச்சோலை அனல்மின் நிலைய திட்டத்தையும் கெரவலப்பிட்டிய மின் நிலைய திட்டத்தையும் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது. இலங்கை பொறியியலாளார்கள் நிறுவனம் அரசாங்கத்தை மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொண்டதை அடுத்து மேற்படி திட்டங்களை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக் கைகள்ள எடுத்து வருகிறது.

மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தினால் ஏற்படவுள்ள சூழலியல் பாதிப்பு காரணமாக இலங்கை மின்சார சபை சமர்ப்பித்த மாற்றுத் திட்டமான யொக்ஸ்போர்ட் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக இ.தொ.கா அறிவித்துள்ளது. மே.கொ. திட்டத்தின்படி தலவாக்கொல்லையில் அமையவிருந்த மின் நிலையம் யொக்ஸ்போட் திட்டத்தின்படி சென்-கிளையர் நீர்வீழ்ச்சிக்கும் டெவன் நீர்விழ்ச்சிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் அமைக்கப்படாலம் என கூறப்பட்டுள்ளது. இதைத்தவிர யொகஸ்போட் திட்டம் என்பது மேல் கொத்மலை திட்டத்தை அப்படியே நடைமுறைப்படுத்த இடமளிக்கிறது. யொக்ஸ்ட் போட் திட்டம் என்பதுஇன்னொருவகையில் மேல் கொத் மலை திட்டத்தை நடைமுறைப் படுத்துவதாகவே இருக்கும். அதனை இ.தொ.கா ஏற்றுக் கொண்டமை என்பது மேல்கொத்மலை திட்டத்தை ஏற்றுக் கொண்டேதே ஆகும். இ.தொ.கா. பிரமுகர்களுக்கு மே.கொ.திட்ட ஒப்பந்த வேலைகள் கிடைக்கவில்லை என்பதாலும் ம.ம.மு அத்திட்டத்தை ஆதரிப்பதாலும் மக்கள் அத்திட்டத்தை எதிர்ப்பதாலுமே இ.தொ.கா தலைமை அதனை எதிர்ப்பது போல் இவ்வளவு காலமும் பாசாங்கு செய்து வந்தது.

இ.தொ.கா வின் எதிர்ப்பு என்பது நிச்சயமற்றது என்பதையும், அது எக்கட்டத்திலும் அதன் எதிர்ப்பை கைவிட்டு மக்களின் எதிர்ப்பு போராட்டத்தை காட்டிக்கொடுக்கலாம் என்பதை நாம் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

மே.கொ.ம. திட்டத்திற்கான மாற்றுத் திட்டமான பாதிப்புக்குறைந்த யொப்ஸ்போர்ட் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த விருப்பதாகவே அதனை ஏற்றுக் கொண்டதாக இ.தொ.கா தலைமை கூறப்போகிறது. இதனை மக்கள் ஏற்கமாட்டார்கள் மேல்கொத்மலைத்திட்டத்தை முற்றாக வாபஸ் பெறப் படவேண்டும் என்பதனை வலியுறுத்தியே மக்கள் போராடி வருகின்றனர். மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் அதனையே முன்வைத்து போராட்டங்களுக்கு தலைமை தாங்கி அவற்றை வழிநடத்தி வருகிறது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மலையக வெகுஜனப் போராட்டத்தால் வீதிப் புனரமைப்பு செய்யப்பட்டது

தொழிற்சங்கத் தலைமைகள், அரசியல்வாதிகள் எனப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் அமைச்சர்கள் மட்டுமன்றி அவர்களது எடுபிடிகளாலும் செய்யமுடியாது இருந்து வந்த மக்கள் பிரச்சினைகளை வெகுஜனப் போராட்டத்தால் சாதிக்க முடியும் என்பதை மலையகத்தில் அவ்வப்போது நிரூபிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

நுவரேலியாவில் இருந்து கந்தப்பொல ஊடாக ஹைபோரஸ்ட் செல்லும் நீண்ட வீதிப்போக்குவரத்திற்கு மிக முக்கிய வீதியாகும். அவ்வீதியின் புறூக்சைட் சந்தியில் இருந்து ஹைபோரஸ்ட் வரையான பதினைந்து கி.மீ. நீள வீதி கடந்த பல வருடங்களாக எவ்வித புனரமைப்பும் இன்றி மோசமான நிலையில் இருந்து வந்தது. மக்கள் போக்குவரத்து வாகனங்களும் மரக்கறி ஏற்றிச்செல்லும் வாகனங்களும் ஊர்ந்து செல்லுமளவிற்கு குண்டும் குழிகளுமாகவே இருந்து வந்தன. மக்கள் நடந்து செல்வது கூட சித்திரவதை தருவதாகவே இருந்தும் வந்தன. இதனால் தனியார் வாகனங்கள் தமது கட்டணங்களை அதிகரித்து வசூலித்தும் வந்தன. மேலும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் கடுமையான இன்னல்களை அனுபவித்தனர். இத்தகைய வீதிச்சீர்கேடு பற்றியும் போக்குவரத்து கட்டண அதிகரிப்புப் பற்றியும் முறைப்பாடுகள் எழுதி அனுப்பியும் எதுவுமே நடக்கவில்லை.

எனவேதான் மக்களை அணிதிரட்டி வெகுஜனப் போராட்டத்தில் ஈடுபடுவதென மக்கள் தீர்மானிக்க வேண்டிய நிலைக்கு வந்தனர். இந்த வெகுஜனப் போராட்டத்திற்கு செயல் வடிவமும் தலைமையும் கொடுக்க புதிய ஜனநாயக கட்சியின் மலையகக் குழுவும் ராகலை- ஹைபோரஸ்ட் கிளைகளும் முன்வந்தன. இவ் வருடம் மே மாத முற்பகுதியில் நுவரேலியா–ஹைபோரஸ்ட்–ராகலை ஆகிய பிரதேசங்களை இணைக்கும் பிரதான சந்தியான புறூக்சைட் சந்தியை மறித்து வீதி மறியல் போராட்டத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

இவ்வீதி மறியல் போராட்டத்தின் ஆரம்பத்தில் ஐந்நூறு பேர் வரையில் திரண்டிருந்தனர். ஆனால் போராட்டம் தொடங்கியதும் அதனைப்பற்றிக் கேள்விப்பட்டு தொழிலாளர்கள் பல பக்கங்களில் இருந்தும் திரள ஆரம்பித்தனர். ஒரு மணி நேரத்தில் மூவாயிரத்திற்கு அதிகமானோர் திரண்டனர். தடியடி நடாத்தவும் கண்ணீர்ப்புகை பிரயோகிக்கவும் இறுதியில் துப்பாக்கிச்சூடு நடாத்தவும் கூடிய ஆயத்தங்களுடன் பொலீஸ் படை அணி வகுத்து வந்து மேலிட உத்தரவுடன் இவ்வெகுஜனப் போராட்டத்தை தடுத்துக் கலைக்கக் காத்து நின்றது.

ஆனால் மக்கள் எதற்கும் அஞ்சாது தமது வீதி மறியல் போராட்டத்தில் உறுதியாக இருந்தனர். கோஷங்கள் எழுப்பி தமது கோரிக்கைகளை வற்புறுத்தி நின்றனர். இவ்வீதி மறியல் போராட்டம் பற்றி அறிந்த நுவரேலியா அரசாங்க அதிபர் மறியல் போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வந்து மக்கள் வற்புறுத்திய கோரிக்கைகள் பற்றி அதற்கு தலைமை தாங்கியவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வீதிப் புனரமைப்பைத் தொடங்கி விரைவில் முடிப்பதாகவும் உறுதியளித்துக் கொண்டார். போக்குவரத்துக் கட்டணத்தை குறைப்பது பற்றியும் பேசுவதாக உறுதி கூறினார். ஆதலால் வீதி மறியல் போராட்டத் தைக் கைவிடும்படி வேண்டியும் கொண்டார்.

அரசாங்க அதிபரின் உறுதியினை ஏற்று மேற்படி வீதிமறியல் வெகுஜனப் போராட்டத்தை நிறுத்துவதென முடிவு செய்யப்பட்டது. மூன்று மணி நேரமாக நடைபெற்ற வெற்றிகரமான இப்போராட்ட முடிவில் புதிய ஜனநாயக கட்சியின் மலையகச் செயலாளர் தோழர் ச.பன்னீர் செல்வம் உணர்வுடன் கூடிய உரையொன்றை ஆற்றினார். மக்கள் சக்திக்குக் கிடைத்த வெற்றியை மேலும் பாதுகாத்து முன்னெடுக்க தொடர்ந்தும் அநீதிகள் சமூக நீதி மறுப்புக்களுக்குப் புரட்சிகர வெகுஜனப் போராட்டத்தின் அவசியம் பற்றியும் தனதுரையில் எடுத்துக் கூறினார்.

இவ்வெகுஜனப் போராட்டத்தைத் தொடர்ந்து மேற்படி புறூக்சைட் - ஹைபோரஸ்ட் வீதி தற்போது அரசாங்க அதிபர் உறுதியளிக்கப்பட்டவாறு புனரமைக்கப்பட்டு வருகின்றது. வீதியின் பெரும்பகுதி புனரமைக்கப்பட்டுவிட்டது. எஞ்சிய பகுதிக்கான புனரமைப்புத் தொடர்கிறது. அதேவேளை தனியார் வாகனத்திற்கான ராகலை- ஹைபோரஸ்ட் போக்குவரத்துக் கட்டணம் இருபது ரூபாயில் இருந்து பதினாறு ரூபாவாகவும் குறைக்கப்பட்டது.

மக்கள் அணி திரளும் வெகுஜனப் போராட்டங்களினால் மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும் என்பதற்கு இப்போராட்டம் ஒரு சமகால மலையக உதாரணமாகிறது.

- ஆர். கேசவன் -
இராகலை

# மலையக அரசியல் வாதிகள் காடைத்தனம்

மலையக தொழிற்சங்கவாதியும், எழுத்தாளருமான சி.வே.ராமையா தாக்கப்பட்டுள்ளார். அவரை எழுத வேண்டாம் என்று எச்சரித்தே தாக்கியுள்ளனர். தாக்குதலினால் படுகாயதமடைந்த ராமையாராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

அவர் இ.தொ.கா வின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தார். ஆறுமுகன் தொண்டமானின் தலைமைத்துவத்துடன் முரண்பட்டுக் கொண்ட அவர் தொடர்ச்சியாக அவருக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தார். இ.தொ.கா தலைமைத்துவத்திற்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து கட்டுரைகளை எழுதிவந்தார். அதனால் கோபமடைந்த இ.தொ.கா வினர் அவரை தொடர்ந்தும் எச்சரித்து வந்துள்ளனர்.

வத்தளை பகுதியிலுள்ள அவரது இல்லத்திற்கு சென்று அவரை வெளியே அழைத்துச் சென்று தாக்கியுள்ளனர். தாக்கியவர்கள் தாக்கிவிட்டு முச்சக்கர வண்டியில் சென்றுள்ளனர்.

தாக்கியவர்களுடன் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரை போன்ற ஒருவரைக் கண்டதாக சி.வே.ராமையா கூறியிருக்கிறார்.

அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததால் அவர் அத்தாக்குதல் பற்றி பொலிசில் முறைப்பாடு செய்யவில்லை. ஊடகங்களின் மூலாமாக அவர் தாக்கப்பட்டமை பகிரங்கப்பட்டது. அதற்கு பிறகு அவர் தெரிவித்த கருத்துக்காளிலிருந்து அவரை இ.தொ.கா வினர் தாக்கியுள்ளனர் என்பது தெரியவருகிறது. இராமையாவும் இ.தொ.காவின் பம்மாத்துக்களுக்கும் , துரோகங்களுக்கும் ஒரு காலத்தில் துணைபோனவர்தான். அதன் பிரதி பலன் அவரையும் விட்டுவைக்கவில்லை.

இருந்தபோதும் இ.தொ.கா மீது அவர் முன்வைத்த விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. அவரின் கருத்துச் சுதந்திரமும், விமர்சனம் செய்யும் உரிமையும், எழுத்து சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டியவை. அவற்றுக்கு எதிராக எவரும் செயற்பட முடியாது.

அவரை தாக்கியதன் மூலம் மலையகத்தமிழ் மக்களின் கருத்து சுதந்திரம் அச்சுறுத்தப்பட்டுள்ளது. மலையக அரசியலில் அடாவடித்தனம் தலைதூக்கியுள்ளது.

இந்த அடாவடித்தனங்களை அனுமதிக்க முடியாது. மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்கும் அனைவரும் ஐக்கியப்பட்டு ராமையாவிற்கு புரியப்பட்ட காடைத்தனத்தை கண்டிப்பதுடன், தாக்கியவர்களுக்கு தகுந்த பாடத்தை புகட்டவும் வேண்டும்.

# சந்திரிகாவின் தந்திரோபாயம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்க அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஐ.நா சபையின் 59வது அமர்வின் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்த கருத்துக்களுடன் முரண்பாடான கருத்துக்களை தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதாவது பயங்கரவாதத்தை ஆயுதநடவடிக்கையினாலேயே (பலாத்காரத்தினாலேயே) முறியடிக்க வேண்டும் என்று புஷ் கூறியதற்கு மாறாக கருத்து தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்திற்கு அடிப்படையான காரணங்களை அறிந்து அரசியல்ரீதியாக பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்க வேண்டும். தீர்க்க முடியாவிட்டால் இறுதி நடவடிக்கையாகவே பலாத்காரத்தினை பிரயோகிக்க வேண்டும் என்றும் அதனால் புஷ்ஷின் கருத்துடன் முரண்படுவதாகவும் ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் நடைபெற்ற நிகழ்வுளுக்காக தான் வருந்துவதாகவும் ஈராகிற்கு இலங்கையிலிருந்து படைகளை அனுப்பி வைக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இக்கருத்துக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரானவை என்று நம்பிவிடத்தேவை இல்லை. தான் ஒரு நியாயமான ஜனாதிபதி என்றும் தான் பேச்சுவார்த்தை நடத்தியே பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்ற வழிமுறையை கொண்டிருப்பதாகவும் வெளி யுலகத்திற்கு காட்டுவதற்கான தந்திரோபாயமே இதுவாகும்.

இவர்தான் முன்பு இலங்கையில் ''சமாதானத்திற்கான'' யுத்தத்தை நடத்தியவர் என்பதை யாரும் மறந்து விடமாட்டார்கள். விடுதலை புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயார் என்று கூறிவந்த போதும் அவசியமான இடைக்கால நிர்வாகம் பற்றி பேச விரும்பவில்லை என்றும் இப்போது கூறியுள்ளார் சந்திரிக்கா உள் நாட்டில் பேசும் போதே காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றுமாகப் பேசுபவர் உலக அரங்கில் மட்டும் ஒரேவிதமாகப்பேசுவார் என எப்படி எதிர்பார்க்க முடியும்.

# நாலு நடக்கும் நற்குணன் உலகிலே

## பழைய ராசா நல்ல ராசா

ஒரு ஊரிலே கொடிய அரசன் இருந்தான். மக்கள் அவனை அறவே வெறுத்தார்கள். அவன் சாகும் போது இவ்வளவு தூரம் கெட்ட பேர் சம்பாதித்து விட்டேனே என்று வருந்தி, மகனை அழைத்து எப்படியாவது தனக்கு நல்லபேர் வாங்கித் தர வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். மகனும் அப்படியே செய்வதாக வாக்களித்தான். தகப்பனை விடப் பன்மடங்கு கொடியவனாக அவன் ஆண்டான். அதனால் மக்கள் பழைய ராசா நல்ல ராசா என்று தகப்பனைப் பற்றி நல்லபடி பேசினார்கள்.

சீதாராம் யெச்சூரி இந்தியா திரும்பிய பிறகு என்ன சொன்னாரோ தெரியாது பிரகாஷ் கராத் இங்கு வந்து தேசிய இனப்பிரச்சனை பற்றிப் பேசியபோது மூன்றாமுலக நாடுகட்குச் சுயநிர்ணயக் கோட்பாடு பொருந்தாது என்று சொன்னதைக் கேட்ட பிறகு அதைப்பற்றி எதுவுமே பேசாத யெச்சூரி பரவாயில்லை என்று தோன்றியது.

சீரழிந்த சி.பி.எம்.மே உனக்குச் செங்கொடி ஒரு கேடா!

## தன் முதுகு ஒரு போதும் தனக்கே தெரியாது

அண்மையில், தமிழக எழுத்தாளர் சுந்தர ராமசாமி குடும்பத்தினர் நடத்துகிற 'காலச்சுவடு' ஒரு ''பெரியார் சிறப்பிதழ்'' வெளியிட்டது. அதில் எழுதிய ரவிக்குமார் என்கிற "தலித்தியவாதி" பெரியாரின் இளமைக்கால நடத்தையை மிகவும் ஆசார ரீதியான கண்ணோட்டத்தில் விமர்சித்தும் பெரியாரின் இரண்டாவது திருமணம் பற்றித் தனது விளக்கத்தை முன்வைத்தும் எழுதியிருந்தார். இதே ரவிக்குமார் சிலி தந்த உலகக் கவி பப்லோ நெருடாவின் இளமைக்காலப் பாலியல் நடத்தையை விலாவாரியாக விவரித்து எழுதினார். இது மக்களது கவனத்தைத் திசை திருப்பும் தேவையா? அல்லது தங்களது சொந்த நடத்தையை நியாயப்படுத்தும் தேவையா?

இதேவிதமாக மாஓ பற்றியும் மாக்ஸ் பற்றியும் யமுனா ராஜேந்திரன் என்பவர் முன்பு காலச்சுவட்டில் எழுதினார். அதைப் பற்றித் தனிப்பட்ட முறையில் கோவப்பட்ட தமிழக அரசியல் விமர்சகர் எஸ்.வி.ராஜதுரை, எதையுமே கண்டித்து எழுதவில்லை. வேறெவரோ தான் கண்டித்து எழுத நேர்ந்தது. (இப்போது, ராஜேந்திரனை ராஜதுரை ஸ்தாலினிய விரோத மாக்ஸியவாதியென்று ஏ.ஜே.கனகரத்தினாவுக்கு சமதையாக வைத்து மெச்சியுள்ளது அவரது யோக்கியத்தின்அளவுகோல்). அண்மையில், லெனின் மேகநோய் காரணமாகவே மரித்தார் என்று ஒரு சியோனியவாதி கண்டு பிடித்ததை முழுப்பக்கக் கட்டுரையாக ஒரு ஈழத் தமிழ்ச் செய்தி ஏடு வெளியிட்டது. லெனினின் சாவு கொலை முயற்சி ஒன்றில் பட்ட காயத்தின் விளைவாக அவரது உடல்நலம் குன்றியதாலே நிகழ்ந்தது என்பது உலகறிந்த கதை. இந்தப் புனைவை நமது தமிழ் நாளேடு ஏற்பது ஏன்?

சுந்தர ராமசாமி தனது 'நண்பர்கள்' என்று கூறிக் கொள்ளும் ப.ஜீவானந்தம் பற்றியும் கிருஷ்னன் நம்பி பற்றியும் நூல்கள் எழுதும் போது அவர்களது ''பாலியல் பலவீனங்கள்'' பற்றி எழுதுகிறார். ஜீவா மீது அவருக்கு அரசியல் பகைமை கிருஷ்ணன் நம்பி மீது பின்னாளில் தனிப்பட்ட கசப்பு. அவர்களை 'ஒழுக்கக் கேடானவர்கள்' என்று காட்டிப்பழி வாங்க முயல்கிறார் ராமசாமி. ஜீவா எந்த இடத்திலும் தனது கட்சிப் பதவியையோ அரசியல் செல்வாக்கையோ பாவித்து அல்லது யாருக்காவது பொய் வாக்குறுதி கொடுத்து ஏய்த்துத் தன் ஆசையைத் தீர்த்தாரென்றால் அது தவறு. ஜீவா மீது சு.ரா. முன்வைக்கிற ''பலவீனம்'' என்ற குற்றச்சாட்டை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மகேந்திரனும் "பலவீனம்" என்ற அடிப்படையில் மறுக்க முற்பட்ட விவாதம் சென்ற ஆண்டு தீரா நதியில் இடம்பெற்றது. இருவருமே நிலவுடமைச் சமூக மேட்டுக்குடி ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில் தான் ஜீவாவை மதிப்பிட முயன்றுள்ளனர்.

நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் ஒருவர் நேர்மையாகவும் பிறரை வஞ்சிக்காமலும் நடந்தாரா என்பது தான். தவறாக எவரும் நடந்திருந்தாலும் அவரது பங்களிப்புக்களில் மேலோங்கி நிற்பவை நல்ல அம்சங்களா அல்லாதனவா என்பது தான் முக்கியமானது.

கிளர்ச்சியாளர் எல்லோர் மீதும் ஒழுக்கக் கேட்டுக் கரிபூசுகிற தேவை முதலாளியத்தின் எடுபிடிக்கு அவசியமானது தான். அவர்களது அளவு கோல்களை ஏற்று விடை எழுத வேண்டிய தேவை நமக்கில்லை. ஆயினும் நோக்கங்களை அம்பலப்படுத்தியாக வேண்டும்.

## மீன் பிடித் தொழிலுக்கு புதைகுழி வெட்டப்படுகிறது

சேது சமுத்திரத் திட்டத்திற்கு இந்திய மத்திய அரசு பச்சைக் கொடி காட்டிவிட்டது. தமிழக அரசு ஒரு ஆலோசணையை முன்வைத்தால் அதை நடைமுறைப்படுத்தக் கப்பல்த்துறை அமைச்சு உடன்பாடு தெரிவித்திருக்கிறது.

சேது சமுத்திரத் திட்டத்தின் கீழ் இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரினை ஆழப்படுத்தப்படும். இதனால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படும் என்று தமிழக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். வட இலங்கை மீனவர்களது நிலையையும் தமிழக மீனவர்களது நிலையை ஒத்ததே. எனினும் அமைச்சர் டி.ஆர்.பாலு பாதிப்பு இல்லை என அறிவித்திருக்கிறார். இவர் ஒரு கப்பல் நிறுவன முதலாளி என்றும் கூறப்படுகிறது. நிச்சயமாக மீனவர்களைவிட அதிகமாக மீன்பிடித் தொழில் பற்றி அமைச்சர்களுக்கும் அவர்களது நிபுணர்கட்கும் தெரியும் என்று சிலர் நம்பலாம்.

சேது சமுத்திரத் திட்டம் இரு கரைகளிலும் வாழ்வோரது மீன்பிடித் தொழிலைப் பாதிப்பது பற்றி நமக்கு ஐயம் வேண்டியதில்லை. ஆனாலும் இலங்கை அரசாங்கம் கவலைப்பட வேண்டிய ஒரு விடயமும் உண்டு. இத்திட்டத்தின் விளைவாக கப்பல்கள் கொழும்பைத் தவிர்த்துத் தென்னிந்தியத் துறைமுகங்களை நாடும் நிலைமை உருவாகும். அந்த இழப்பைச் சமாளிப்பதாயின் வட இலங்கையில் ஒரு பெரிய துறைமுகத்தை நிறுவ வேண்டிவரும். இன்றைய போர்ச் சூழலும் பொருளாதார நிலைமையும் மட்டுமன்றி பேரினவாத நிலைப்பாடும் இடமளிக்காது.

சேது சமுத்திரத் திட்டத்தின் ஒரு நன்மையாகச் "சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைக்கிற திட்டம் கைவிடப்படலாம். ஆயினும், இந்தியாவின் பொருளாதாரக் இடுக்கிப் பிடியில் இலங்கை நெரிபடுவது தவிர்க்க இயலாதது.

இது பற்றித் தமிழ்த் தேசிய இனத் தலைவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? இந்தியாவுக்கு ஜே போடுகிற ஜே.வி.பியும் பிற பேரினவாதிகளும் என்ன சொல்லப் போகிறார்கள்?

இந் நீரினை இரண்டு நாடுகட்கிடையிலானது. ஒன்றின் பொருளாதாரத்தை மற்றது பாதிக்கும் முறையிலான திட்டம் எதுவும் சர்வதேச் சட்டத்துக்கமைய இருக்க வேண்டும். அது பற்றி நமது ஆட்சியாளர்கள் எதுவும் செய்வார்களா? கண்டனமோ எதிர்ப்போ காட்டத்தயாரா?.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஜே.வி.பி யின் அரசியல் முட்டாள் தனத்தால்

## ஐக்கிய தேசியக் கட்சி தன்னைப்பலப்படுத்துகிறது

ஜே.வி.பி. அப்பட்டமாகவே பேரின வாதம் பேசி அதன் மூலம் பாராளு மன்ற அரசியல் ஆதாயம் பெற்று வரும் ஒரு கட்சி என்பது பகிரங்க மானதாகும். அதேவேளை நாட்டின் தேசிய பொருளாதார நலன்கள் தொழிலாளர் கோரிக்கைகள் மாணவர்களின் பிரச்சினைகள் இளைஞர்-யுவதிகள் மீதான அக்கறைகள் என்றவாறும் தனது அரசியல் கொள்கை முழக்கங்களில் கூறி வந்தது. தாராளமயம் தனியார் மயம் உலக மயமாதலையும் எதிர்ப்பது போலவும் காட்டி வந்தது.


மேற் கூறியவற்றின் சார்பாகவும் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்தும் ஜே.வி.பி பொதுசன ஐக்கிய முன்னணி காலத்திலும் அதன் பின் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியிலும் வீதியில் இறங்கி பெரும் அமளிதுமளி நடாத்தி வந்தது. மறியல் ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல்கள் என முன்னால் இருந்தும் பின்னால் இருந்தும் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தங்களைப் பலமாக்கிக் கொண்டனர். ஜே.வி.பி.யின் வளர்ச்சி இளையதலை முறையினரிடையேயும் அதன் ஊடாக மக்கள் மத்தியிலும் ஒருவித இடதுசாரி மயையைத் தோற்று வித்தது.

பழைய இடதுசாரிகள் பலமிழந்து நிறம் மங்கிப் போன நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி.யை அணைத்து அதனுடன் ஐக்கியப்பட்டு கடந்த தேர்தலில் வெற்றியும் கண்டனர். ஜே.வி.பி. க்கு எதிர்பார்த்ததையும் விடக் கூடுதல் பாராளுமன்ற ஆசனங்கள் கிடைத்தன. நான்கு அமைச்சுகளும் பிரதியமைச்சுக்களும் கிடைத்தன.

ஆனால் இன்றைய ஐ.ம.சு. முன்னணி ஆட்சியில் இந்த ஜே.வி.பி. யால் மக்கள் சார்பாக எதனைச் சாதிக்கமுடிந்தது. விலை உயர்வு களையும் கட்டண அதிகரிப்புக் களையும் கண்டும் காணாது போன்று இந்த ஜே.வி.பி. வீரர்கள் இருந்து வருகிறார்கள். வீதிகளிலும் மேடைகளிலும் வீர முழக்கங்கள் செய்து மக்களுக்காகப் போராட நின்ற இந்த சிகப்புத் துணி போர்த்து வலம் வந்தவர்கள் இன்று அந்தப் போர்வையைத் தூர வீசி விட்டு பாராளுமன்ற சுகம் அனுபவிக் கின்றார்கள். இப்போது அவர்களிடம் சிகப்பு நிறம் காணப்படுவதில்லை.

நாங்கள் விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்துவோம் என்று வாக் குறுதி அளிக்கவில்லையே என்றும் உற்பத்தி பெருகவேண்டுமானால் விலையேற்றத்தை பொறுத்துக் கொள்ள வேண்டும் எனவும் உபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அது மட்டுமன்றி விலை அதிகரிப்புக்கும் தாராளமயத்திற்கும் தனியார் மயத்திற்கும் காரண கர்த்தாக்களாக இருந்து வரும் உலக வங்கி சர்வதேச நாயணய நிதியம் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றுடன் பேசவும் சமரசம் காணவும் தொடங்கி விட்டார்கள் இந்த ஜே.வி.பி .காரர்கள். உதாரணத்திற்கு ஒருவிடயத்தைக் காணலாம். அண்மையில் ஜே.வி.பி. யின் நுகேகொட தலைமைய கத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் மூத்த வதிவிடப் பிரதிநிதி ஜேர்மி கார்ற்ற ருக்கும் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சா, கலாசார அமைச்சர் விஜித ஹேரத்துக்குமிடையிலான பேச்சுவார்த்தை இடம் பெற்றது. இதில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரிதிநிதி தமது நோக்கங்களை விளக்கிக் கூறி உதவி ஆலோசனை களையும் முன்வைத்தார். பதிலுக்கு தேசிய நலன்களைப் பாதிக்காத உதவிகளைத்தாம் வரவேற்பதாகவும் புலிகளுக்கு நேரடியாக உதவிகள் செய்யப்படுவதை எதிர்ப்பதாகவும் ஜே.வி.பி. யினர் கூறிக் கொண்டனர்.

ஜே.வி.பி.யின் பாராளுமன்ற சந்தர்ப்ப வாத அரசியலில் எதையும் இழக்க வும் தயார். எவரிடமிருந்து எதையும் பெறவும் தயார். ஆனால் புலிகள்



விரோத தமிழர் விரோத நிலைப்பாடு மட்டும் தமக்கு இறுதிவரை உதவக் கூடிய தொன்று என்ற நம்பிக்கை யிலே இருந்தும் வருகின்றனர்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் பிரசார இலக்கு ஜே.வி.பி மீதே குறிவைத்து முன்னேடுக்கப் படுகிறது. மக்களை ஏமாற்றிய ஜே.வி.பி இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்வுக்குப் பின்பும் ஆட்சியில் எந்த யோக்கியதையுடன் இருந்து வருகிறது என்பதே யூஎன்.பி யின் கேள்வியாக உள்ளது. இதற்கு பதிலிறுக்க முடியாது ஜே.வி.பி தடுமாறி மௌனம் சாதிக்கிறது. யூஎன்.பி ஏதோ மக்களுக்கு சார் பான கட்சியல்ல. தனது ஆட்சிக் காலத்தில் விலைகளை அதிகரிக் காத கட்சியும் அல்ல. ஆனால் இன்றைய சந்தர்ப்பத்தை அது நன்கு பயன்படுத்தி வீதியில் இறங்கி மக்கள் சார்பாக குரல் வைத்து அழுகிறது. அதனால் மக்கள் இவர்க ளைவிட அவர்கள் பரவாயில் லைத்தானே என்ற பழைய பல்லவிக்கு ஆமாம் போட ஆரம்பித்துள்ளனர்.

ஜே.வி.பி யின் இயலாமையும் சமாதானத்திற்கு எதிரான முட்டாள் தனமான பேரினவாதம் கிளப்பும் அரசியலும் யூஎன்.பி க்கு சாதாகமாகி அக்கட்சியைப் பலப்படுத்துவதாகவே அமைந்து வருகிறது. யூஎன்.பி யைப் அவ்வக் காலங்களில் பலவீனத்தி லிருந்து பலமடையச் செய்ததில் பழைய இடதுசாரிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து நின்று செய்து வந்த கங்கரியத் தையே இடப்போது பேரினவாதம் பேசி பாராளுமன்ற பிழைப்பு அரசியல் நடாத்தும் ஜே.வி.பி. யும் செய்து வருகிறது.

# "பயங்கரவாதிகள்" பட்டியலிலிருந்து தோழர் ஜோசே மரிய சிசோனின் பெயர் நீக்கப்பட்டது.

பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக தலைவரும் பிலிப்பைன்ஸ் தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர்களில் ஒருவரும் பிலிப் பைன்ஸ் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்திய பி.தே.ஜ.முன்னணி யின் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவருமான பேராசிரியர் தோழர் ஜொசே மரிய சிசோன் நெதர்லாந்தில் அரசியல் புகலிடம் அளிக்கப்பட்டிருந்தார். பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி (PCP) பிலிப்பைன்ஸ் தேசிய ஜனநாயக முன்னணி (NDF) என்பவற்றை பயங்கரவாத அமைப்பு களாக ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருந்ததுடன் தோழர் சிசோனின் பெயரை பயங்கரவாதி கள் என்ற பட்டியலில் உள்ளடக்கியும் இருந்தது. 2000ம் ஆண்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் பிலிப்பை ன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி, புதிய மக்கள் இராணுவம் ஆகியவற்றை பயங்கர வாத இயக்கங்களாக பிரகடனப் படுத்தியது. அதனை அடுத்து ஐரோப்பிய ஒன்றியமும் தடை செய்தது. அதனால் அவருக்குப் புகலிடம் அளித்திருந்த நெதர்லாந்து அவரின் நடமாட்டத்தை வரை யறுத்தது. அவரது அரசியல் ரீதியான நடவடிக்கைகளை தடை செய்தது. அவரின் தனிப்பட்ட வங்கிக்கணக்கையும் தடைசெய்தது. அவர் கைது செய்யப்பட்டு பிலிப்பை ன்ஸ் அடக்கு முறை ஆட்சியாளர் களிடம் ஒப்படைக்கப்பட்டுவிடலாம் என்ற அச்சம் நிலவியது.

ஐரோப்பாவிலிருக்கும் பிலிப்பைன்ஸ் மக்களும் மனித உரிமைகள் அமைப்புகளும் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அமைப்புகளும் தொடர்ச்சியாக செய்து வந்த போராட்டங்களின் விளைவாகவே அண்மையில் தோழர் சிசோனின் பெயரை பயங்கரவாதிகள் என்ற பட்டியலிருந்து ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியுள்ளது. இது பிலிப்பீனஸ் மக்களுக்கும் அவர்களுக்கு ஆதரவு வழங்கிய ஐரோப்பிய அமைப்புகள் மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

தோழர் சிசோன் பிலிப்பைன்சின் புத்திஜீவி ஆவார். அவர் ஆங்கில இலக்கியப் பேராசிரியர் . அவர் 1968 இலிருந்து 1977 வரை பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்தார். 1977ல் பிலிப்பைன்ஸ் அரச படைகளால் கைது செய்யப் பட்டு 1986 வரை தடுப்புக் காவலில்



வைக்கப்பட்டிருந்தார். அவர் தடுப்புக் காவலில் இருக்கும் போது கொடு மையாக சித்திரவதை செய்யப் பட்டார். அவரின் சகோதரர் காணாமல் போகுமாறு ஆக்கப் பட்டார்.

அவர் தடுப்புக்காவலிருந்து விடுதலை செய்யப்பட்ட பின் பரந்த ஐக்கிய முன்னணியின் அடிப்படையிலான 'மக்கள் கட்சியை' அமைப்பதற்கு பாடுபட்டார். அவர் 1986ல் பிலிப்பை ன்சை விட்டு வெளியேறி பி.க. கட்சியின் சர்வதேச விவகாரங்களில் ஈடுபட்டார். 1987முதல் நெதர்லாந்தில் இருந்து வருகிறார்.

பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான பி.தே.ஜ முன்னணி யின் சர்வதேச காரியாலயம் நெதர்லாந்தில் இயங்கி வருகிறது.

அதற்கு பொறுப்பாக தோழர் சிசோன் இருந்து வந்தார். 1990 இலிருந்து பி.தே.ஜ. முன்னணிக்கும் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்குமிடை யிலான பேச்சுவார்த்தையில் பி.தே.ஜ.மு இன் பேச்சுவார்த்தைக் குழுவிற்கு தலைமை தாங்கி வந்தார்.

1970 களிலும் 1980களிலும் 8000 இற்கு மேற்பட்ட கிராமங்களில் பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி கட்டுப்பாட்டை செலுத்தியதுடன் அவற்றை விடுதலைப் பிரதேசமாக கொண்டியங்கியது. பிலிப்பைன்ஸில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொம்மைகளின் ஆட்சியே தொடர்ந்து நடந்து வருகிறது. அவ் வாட்சியினரின் அடக்கு முறை களினாலும், என்.ஜி.ஓக்களின் சதித்திட்ட சீரழிவுகளினாலும் பி.க.கட்சி பல பிளவுகளுக்குள் ளானது. எனினும் இன்றும் பி.க.கட்சி யும், புதிய மக்கள் இராணுவமும் அங்கு பலமாகவே இருக்கின்றன. அவற்றினை உள்ளடக்கிய பரந்த ஐக்கிய முன்னணியே பி.தே.ஜ. முன்னணி (NDF) ஆகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், பிலிப்பைன்ஸ் முதலாளி வர்க்கத்திற்கு எதிராகவும் போராடி வரும் வீரமிக்க பிலிப்பைன்ஸ் மக்களுக்கு பி.தே.ஐ.மு. தலைமை கொடுத்துவருகிறது. 1899ல் பிலிப்பை ன்சை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆக்கிரமித்ததிலிருந்து பிலிப்பைன்ஸ் மக்களை அடக்கி ஒடுக்கி வருகிறது. அங்கு அமெரிக்க படைத்தளங்கள் இருக்கின்றன. மார்க்கோஸ் என்ற கொடுங்கோன்மை ஆட்சியாளன் மக்கள் கிளர்ச்சியினால் நாட்டை விட்டு துரத்தி அடிக்கப்பட்டாலும் இன்னும் அங்கு அமெரிக்க ஆதரவுடன் இராணுவ அடக்கு முறைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

பலவிதமான சீரமைப்புகள் செய்யப் பட்டு பி.க.கட்சி மீண்டும் பலமாக இயங்குகிறது. இந்நிலையில் தோழர் சிசோனின் பெயரை பயங்கரவாதி கள் என்ற பட்டியலிலிருந்து ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியுள்ளமை பட்டாளி வர்க்கத்தின் தலைமையி லான பிலிப் பைன்ஸ் மக்களின் புரட்சி வெற்றிப் பாதையில் மேலும் முன்னேறு வதற்கு உந்துதலை வழங்கியுள்ளது.

# தேசிய இனப்பிரச்சனையை மழுப்பி

## அடக்கி வாசித்த இந்திய மாக்ஸியவாதி

**(சீதாராம் யெச்சூரியின் தோழர் பொன்.கந்தையா நினைவுப் பேருரை பற்றிய ஒரு மதிப்பீடு)**

2004 ஓகஸ்ற் 8ம் நாள் கொழும்பில் 'உலகமயமாக்கல் யுகத்தில் சோஷலிஸம்' என்ற தலைப்பில் இந்திய மாக்ஸிய கம்யூனிஸ்ற் கட்சியின் (சி.பி.எம்) தலைவர்களுள் ஒருவரான சீதாராம் யெச்சூரி உரையாற்றினார். அவரது ஆங்கில உரையின் பிரதிகள் விநியோகிக்கப் பட்டிருந்தன. வட இலங்கை பொது வுடமை இயக்கத்தின் முன்னோடி களுள் ஒருவரும் வடக்கு-கிழக்கி லிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரே பொது வுடமைக்கட்சி பாராளுமன்ற உறுப் பினரும் என்ற வகையில் தோழர் கந்தையாவை நினைவுகூரும் போது அவரது தகுதிக்கும் நிலைப்பட்டுக் கும் ஏற்றவிதமான ஒரு நினைவுப் பேருரை அமைவது முக்கியமானது. தன்னை ஒரு கம்யூனிஸ்ற் கட்சி என அறிவித்துக் கொள்ளுகிற சி.பி.எம் இந்தியாவின் மிக வலிய இடதுசாரிக் கட்சி. எனவே அதன் தலைவர் களுள் ஒருவரான யெச்சூரியின் உரைபற்றி மிகுந்த எதிர்பார்ப்புக்கள் இருந்தன.

சி.பி.எம் ஒரு திரிபுவாதக் கட்சியாக வும் பாராளுமன்றக் கட்சியாகவும் இருந்தாலும் ஒடுக்கு முறைக்கும் மேலாதிக்கத்துக்கும் எதிரான சிந்தனைகள் அதனிடம் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு சி.பி.எம் பற்றிய விமர்சனக் கண்ணோட்டமுடைய வர்களிற் பலரிடமும் இருந்தது. சி.பி.எம் இன்னமும் கொள்கை யளவில் ஆயுதமேந்திய புரட்சியை நிராகரிக்கவில்லை என்பதும் கவனிக்க வேண்டிய விடயமாகும். எனவே யெச்சூரியின் உரையைக் கேட்கப் போனோர் ஒரளவு எதிர் பார்ப்புக்களுடனேயே போனார்கள்.

தோழர் கந்தையாவின் அரசியல் வாழ்க்கைக் குறிப்புக்களின் முடிவில், உலகமயமாக்கலின் யுகத்தில் சோஷலிஸத்தை எவ்வாறு முன்னெ டுப்பது என்ற வினாவுக்கு விடை தேடும் நோக்கிலும் அது தொடர்பில் முதலாளிய உலக மயமாக்கலின் நிலைப்பு, 20ம் நூற்றாண்டின் சோஷலிஸத்தின் பாடங்கள், சீன சோஷலிஸ நிர்மாணம் பற்றி மதிப்பிடும் ஒரு முயற்சி , இன்றைய நிலையில் கம்யூனிஸ்டுக்கள் கடைப்பிடிக்க வேண்டிய தந்திரோபாய வழிமுறை என்பன பற்றியும் தான் பேசுவதாக அவர் அறிவித்தார்.

உலகமயமாக்கல் பற்றிய அவரது விவரணம் இன்று இடதுசாரி களல்லாத பல சீர்திருத்தவாதிகள் கூட ஏற்றுக்கொள்கிற உண்மை கட்கு அப்பால் அதிக தூரம் போக வில்லை. உலகமயமாக்கல் மூலம் ஏகாதிபத்தியம் தனது பொருளா தாரச் சுரண்டலை உச்சப்படுத்தித் தனது மேலாதிக்கத்தை நிலை நிறுத்தப்பார்க்கிறது என்பதும் அதற்காக அது எந்த அழிவு நடவடிக்கையை மேற்கொள்ளவும் கூசாது எனவும் அவர் விளக்கினார். ஏகாதிபத்தியம் தனது நெருக்கடியின் விளைவாகவே உலகின் பெரும் பாலன அடிமைப்படுத்துகிற முயற்சி யில் முனைப்பாக உள்ளது எனவும் மனித இனத்தின் தெரிவு சோஷலிஸத்துக்கும் காட்டு மிராண்டித்தனத்துக்குமிடையிலானது என்றும் அவர் வற்புறுத்தினார்.

அடுத்து அவர் சோஷலிஸத்துக்கான போராட்டத்திற்கு வரலாற்றினின்று கற்க வேண்டிய தேவை தொடர்பாக சோவியத் யூனியனின் 70 வருட சோஷலிஸம் பற்றியும் சீனாவின் சமகால சோஷலிஸம் பற்றியும் சுருக்கமாக ஆராய்வதற்கு முற்பட்டார். சோஷலிஸத்தின் சாதனைகள் என்று விண்வெளிக்கு ஒரு நாயையும் பின்பு ஒரு மனிதனையும் அனுப்பியது உட்பட்ட பல விடயங்களையுங் குறிப்பிட்டார். சோஷலிஸம் வரலாறு பற்றிய அவரது தெளிவின்மை இதன் பின்பு தெளிவாகத் தொடங்கியது.

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# இ.தொ.கா - அரசில் இணைந்தமைக்கு உண்மைக் காரணம் என்ன?

ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்திற்கு இ.தொ.கா. நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக கூறி அரசுடன் இணைந்து கொண்டுள்ளது. இ.தொ.காவின் 8 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐ.தே.கட்சியின் பட்டியலில் போட்டியிட்டு வென்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இ.தொ.கா, ஐ.தே.கட்சியுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இ.தொ.கா உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சுதந்திரமாக இயங்கலாம். அந்த அடிப்படையில் இ.தொ.கா அரசாங்கத்துடன் இணைந்தமைக்கு சட்டரீதியான நியாயம் கற்பிக்கப்படலாம்.

இ.தொ.கா அரசாங்கத்துடன் இணைந்ததற்கான உண்மையான காரணங்களை அறிந்து கொள்வதன் மூலம் இ.தொ.கா வின் மக்கள் விரோத நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ள முடியும். 'ஐ.ம.சு.மு. அரசாங்கம் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையை கூட கொண்டிருக்காதபடியால் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாதிருக்கிறது. அரசாங்கம் சமாதான முயற்சியை முன்னெடுக்கவும், புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை தொடங்கவும் அரசாங்கத்திற்கு பெரும்பான்மை பலத்தை கொடுப்பதற்காகவே அரசாங்கத்துடன் இணைவதாக இ.தொ.கா. தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இ.தொ.கா. அரசாங்கத்துடன் இணைவதால் மலையகத் தமிழ் மக்களுக்கு ஏற்படவுள்ள நன்மை என்ன என்று பல முனைகளிலும் கேள்விகள் எழுப்பப்பட்டன. அதனை தொடர்ந்து மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசாங்கத்திடம் 14 அம்ச கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக இ.தொ.கா. தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அந்த 14 அம்சங்கள் எவை என்பது பற்றி ஒரு இ.தொ.கா. தலைவர் வெளியிடுவதிலிருந்து இன்னொரு தலைவரின் கருத்து மாறுபட்டதாகவே இருக்கிறது. எனவே இ.தொ.கா. தலைவர்களுக்கிடையேயே அரசாங்கத்திடம் இ.தொ.கா. தலைமை சமர்ப்பித்ததாக கூறப்படும் 14 அம்சக் கோரிக்கைகள் பற்றிய தெளிவு இல்லை என்பது மட்டுமன்றி அவை நேர்மையுடன் சமர்ப்பிக்கப்



பட்டதா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இ.தொ.கா. தலைவர்கள் கூறிவரும் 14 அம்ச கோரிக்கைகள் குறித்து அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது அப்படி எந்த யோசனைகளையும் இ.தொ.கா அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவில்லை என்று பதிலளித்துள்ளார். அவர் தான் இ.தொ.கா அரசாங்க உறவிற்கு தரகராக இருந்தார். அவரே 14 அம்சக் கோரிக்கை எதனையும் இ.தொ.கா சமர்ப்பிக்கவில்லை என்ற அவரின் கூற்றை நம்பாமல் விடமுடியாது.

அப்படியானால் இ.தொ.கா 14 அம்ச கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை. 14 அம்ச கோரிக்கைகளை சமர்ப்பித்துதான் இ.தொ.கா. அரசாங்கத்துடன் இணைந்ததாக இ.தொ.கா. தலைவர்கள் கூறியதில் எவ்வித உண்மையும் இல்லை. சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் அரசாங்கம் கவனஞ் செலுத்தப் போவதில்லை. புலிகள் இயக்கத்தின் இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை நடத்த அரசாங்கம் விரும்பவில்லை என்று ஜனாதிபதி வெளிப்படையாக கூறியுள்ளார்.

இந்நிலையில் அரசாங்கத்திற்கு கொடுத்த ஆதரவை இ.தொ.கா. வாபஸ் பெற்றுக் கொள்ளுமா?

## தொழிலாளர்களுக்கு துரோகம் தலைவர்களுக்கு சன்மானம்

இ.தொ.கா. நிதிச் செயலாளர் மு.சிவலிங்கம் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகவும் பிரதித் தலைவர் எம்.எஸ். செல்லச்சாமி தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராகவும் அமர்ந்தும் விட்டனர். இந்நிலையில் கொடுத்த ஆதரவை வாபஸ் பெறுவது என்பது நடக்கப் போகிற காரியமல்ல.

இ.தொ.கா தலைவரும், பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் அமைச்சு பதவியை எடுத்துக் கொள்ளாததை பெருந்தன்மை என்றும் சிலர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் உண்மையில் நடந்ததென்ன?

அவர் முன்பு வகித்த வீடமைப்பு, நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் வடிகால் அமைச்சுப் பொறுப்பை கேட்டுள்ளார். நீர்வழங்கல் சபையின் நடவடிக்கைகளை கணினி மயப்படுத்த அவர் அமைச்சராக இருந்த போது இந்திய ஐ.ரி. கம்பனி ஒன்றுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை அமுல்படுத்தி பாரிய கமிஷன் பெறுவதற்காகவே அவ்வமைச்சை கேட்டுள்ளார். அத்திட்டத்தின் மொத்தச் செலவு 7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அத்திட்டத்தினை 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் செய்து முடிக்கலாம் என்று கூறி ஜனாதிபதி சந்திரிக்கா முன்பு அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தார். அதனால் அது அமுல்படுத்தப்படவில்லை. மீண்டும் அதற்கு பொறுப்பான அமைச்சராக பொறுப்பேற்று அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆறுமுகன் எண்ணியிருந்தார். அவ்வமைச்சிற்கு தற்போது பொறுப்பாக இருக்கும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அவ் அமைச்சை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. அதனாலேயே ஆறுமுகனுக்கு அந்த அமைச்சு கிடைக்காமல் இருந்து வருகிறது. அந்த அமைச்சு தனக்கு கிடைக்கும் வரை ஆறுமுகன் 'உறுமீனுக்காக' காத்திருக்கிறார். இது தான் நிபந்தனை இல்லாத ஆதரவின் மர்மம்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்த போது ஆறுமுகன் தொண்டமான் மலையக அபிவிருத்திக்கான திட்டங்களை முன்னெடுக்கவில்லை என்று பரவலாக குற்றஞ் சாட்டப்பட்டார். அவரது அமைச்சின் செயலாளராக இருந்து முரண்பாடு காரணமாக வெளியேறிய கலாநிதி இராமானுஜம் ஆறுமுகன் தொண்டமான் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்த போது மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளவில்லை என்று பகிரங்கமாகவே குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஐ.ம.சு. முன்னணி அரசாங்கம் பதவியேற்றவுடன் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட சி.பி.ரட்ணாயக்க பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதாகவும் மூவாயிரம் மலையக இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதாகவும் உறுதியளித்து சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். (அதன் உண்மைத்தன்மை கேள்விக்குரியதே) இதனால் இ.தொ.கா. மீது மக்கள் மேலும் அதிருப்தியடைந்தனர். வேலையற்ற மலையக யுவதிகளும், இளைஞர்களும் சி.பி.ரட்ணாயக்காவை நோக்கி படை எடுத்தனர்.

இதனால் இ.தொ.கா. அதனது நிலைமையை தற்காத்துக் கொள்வதற்காக அரசாங்கத்துடன் சேர்ந்ததுடன் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சையும் பிரதியமைச்சையும் எடுத்துக் கொண்டது.

ஐ.தே.க பட்டியலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு 8 ஆசனங்களை பெற்றுக் கொண்ட இ.தொ.கா, ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டமை தார்மீகரீதியாக நியாயமற்றது என்று கூறப்பட்ட போதும், இ.தொ.கா, ஐ.தே.கட்சியுடன் இணைந்திருந்தால் என்ன? ஐ.ம.சு முன்னணியுடன் இணைந்திருந்தால் என்ன? இரண்டும் ஒன்றே. இரண்டு முதலாளித்துவ, பேரினவாத கட்சிகளில் எதனுடன் சேர்ந்தால் தான் என்ன? விளைவு ஒன்றுதான்! மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு துணை போவதைவிட வேறெதனையும் சாதித்துக் கொள்ள முடியாது. மலையகத்தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்கவும் முடியாமல், அழிவுநிறைந்த மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தையும் தடுத்து நிறுத்தவும் முடியாமல் உள்ள நிலையில் இ.தொ.கா அரசாங்கத்துடன் சேர்ந்தால் என்ன? எதிர்க்கட்சியில் சேர்ந்தால் என்ன?

இ.தொ.கா எந்த முடிவை எடுத்தாலும் அதன் தலைமையினுடைய முதலாளித்துவ ஆதிக்க அரசியல் அக்கறைகளுக்கு சாதகமாகவே இருக்கும். அதற்கு அப்பால் மலையகத் தேசிய இனத்திற்கோ தோட்டத் தொழிலாளி வர்க்கத்திற்கோ நன்மை தருவதாக இருக்க மாட்டாது என்பதை சிந்திக்க முயலும் மலையக மக்கள் விளங்கிக் கொள்வதே முக்கியமானதாகும்.

- அழகேசன் -

# மாணிக்கல் அகழ்வதற்கு கம்பெனிகளுக்கு அனுமதி தோட்டங்களை அழிக்க வழிவகுக்கும்

பெருந்தோட்டங்களில் மாணிக்கக் கற்களை அகழ்வதற்கான அனுமதியை வழங்க முடியும் என்று சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார். பெருந்தோட்டங்களை 50வருட குத்தகைக்கு எடுத்துள்ள தனியார் கம்பெனிகள் பெருந்தோட்ட நிலத்திற்கு அடியில் இருக்கும் கனியங்களை எடுத்துக் கொள்ள சட்டப்படி உரிமை உடையனவா என்ற சர்ச்சை நீண்டகாலமாக நிலவிவந்தது பெருந்தோட்ட நிலத்திற்கு அடியில் இருக்கும் கனியங்களை குறிப்பாக மாணிக்கக் கற்களை அகழ்ந்து எடுத்துக் கொள்ளும் உரிமை இருப்பதாக சட்டமா அதிபர் அரசிற்கு சட்ட ஆலோசனை வழங்கியுள்ளார். அதன்படி இலங்கை மாணிக்கக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கு தோட்டக்கம்பெனிகள் தகுதியுடையவையாகின்றன. அக்கூட்டுத்தாபனங்களிடமிருந்து அனுமதி பத்திரங்களை பெற்றுகொண்டு தோட்டக் கம்பெனிகள் அவற்றின் கட்டுப்பாட்டிற்குள் வரும் தோட்டக் காணிகளில் தாராளமாக மாணிக்கக்கல் அகழ்வுகளை மேற்கொள்ள முடியும்.

பெருந்தோட்டங்களில் மாணிக்கக்கல் அகழ்வுகளை மேற்கொள்ளும்போது தேயிலை றப்பர் செய்கை பாதிக்கப்படுவதுடன் நிலத்திற்கு பெரும்பாதிப்பு ஏற்படுமென்பதாலும் மண்சரிவு, நில நடுக்கம், வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுமென்றும் தொழிலாளர்கள் போராட்டங்களை நடத்தி வந்தனர். இராகலை, பொகவந்தலாவை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்படவிருந்த அகழ்வுகள் வெகுஜனப் போராட்டங்களினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. இப்போராட்டங்களில் புதிய ஜனநாயக கட்சி முக்கிய பங்குவகித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பெருந்தோட்டக்கம்பெனிகள் தோட்ட நிலத்தில் மாணிக்கக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கான ஏலக்கோரல்களை செய்து மாணிக்கக்கல் அகழ்வுகளை மேற்கொள்வதற்கான அனுமதியை வெளியாருக்கு (மாணிக்கக்கல் வியாபாரிகளுக்கு) கொடுத்து வந்தது. அவ்வாறான அகழ்வுகளால் தோட்டப்பொருளாதாரம் பாதிக்கப்படுவதுடன் சூழலியல் பாதிப்பும் ஏற்படும். அத்துடன் தோட்டங்களுக்குள் வெளியார் வருகின்றபோது தோட்டப்புறங்களில் சமூக பண்பாட்டுப் பாதிப்புக்களும் ஏற்படும் என்பதையும் சுட்டிக்காட்டியே எதிர்ப்பியக்கங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பெருந்தோட்டக் கம்பெனிகளுக்கு நிலத்திற்கு அடியிலுள்ள வளங்களைப் பெற்றுக்கொள்ள சட்டரீதியான உரிமை இல்லை என்பதாலும் மாணிக்கக்கல் அகழ்வுகளை மேற்கொள்ள முடியாது என்றும் எதிர்ப்பியக்கங்களினூடாகத் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு சட்டநடவடிக்கைகள் இல்லையா என்பது பற்றி ஆராய்ந்து சிபாரிசுகளையும் ஆலோசனைகளையும் சட்டமா அதிபரிடம் கோரப்பட்டிருந்தது பெருந்தோட்ட குத்தகை உடன்படிக்கையில் அவை பற்றி வெளிப்படையாக கூறப்படாவிட்டிலும் தோட்டங்கள் நீண்டகால குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருப்பதால் நிலத்திற்கடியிலுள்ள கனியங்களை பெற்றுக்கொள்ளவும் தோட்டக்கம்பனிகளுக்கு சட்டப்படி உரிமை இருப்பதாக சட்டமா அதிபர் ஆலோசனை கூறியுள்ளார். மாணிக்கக்கல் அகழ்விற்கு தேவையான நிபந்தனைகளுடன் தோட்டக் கம்பெனிகளுக்கு இலங்கை மாணிக்கக்கல் கூட்டுத்தாபனம் அனுமதிப்பத்திரங்களை வழங்க முடியும் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் இந்த ஆலோசனையுடன் மாணிக்கக்கல் அகழ்விற்கு எதிரான வெகுஜனப் போராட்டங்களின் நியாயங்கள் மறுக்கப்பட்டுள்ளன பெருந்தோட்டக் கம்பெனிகள் ஏதேச்சதிகாரமாக அவற்றின் சுரண்டலை (மண்ணையும், கல்லையும் நீரையும் கூட) மேற்கொள்ள இடமளிக்கிறது.

இந்த யோசனையுடன் தோட்டக் காணிகளின் மீது தோட்டக் கம்பெனிகளுக்கு குத்தகைக்காலத்தில் கட்டுப்பாடற்ற பூரணமான உரிமை கிடைக்கிறது. அக்கம்பெனிகள் அவற்றுக்கு வேண்டியபடி தோட்டக் காணிகளை பாவிக்க முடியும்.

தோட்டக்கம்பெனிகளுக்கு சட்டப்படி உரிமை இருப்பதாக கூறப்பட்டாலும் தோட்டத்தொழிலாளர்களின் இருப்பு தோட்டப்பெருளாதாரம் தோட்ட நிலப்பாதுகாப்பிற்கு மேலாக ஒரு சட்ட உரிமையை தோட்டக்கம்பெனிகளுக்கு இருக்க முடியாது. நில அகழ்வை சட்ட உரிமைக்கு மட்டும் வரையறுக்கப்படமுடியாது.

பெருந்தோட்டங்களில் மாணிக்கக்கல் அகழ்விற்கு எதிரான போராட்டங்களின் நியாயப்பாட்டை ஏற்காமல் விட முடியாது. எனவே அப்போராட்டங்கள் தொடரவே செய்யும். பொதுநலனை மீறி ஒரு ஒப்பந்த உரிமை மேலானதாகிவிட முடியாது.

தோட்டக்கம்பெனிகளுக்கு அதிக சுரண்டலுக்கு வழிவகுக்கும் விடயங்களுக்கு சட்ட ஆலோசனை வழங்கும் சட்டமா அதிபர் தோட்டத் தொழிலாளர்களின் விடயத்திலும் கவனம் செலுத்துவாரா?

கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகியும் இன்னும் புதுப்பிக்கப்படாமல் இருப்பதுற்கும் சம்பளஉயர்வு வழங்கப்படாமல் இருப்பதும் தோட்டக்கம்பெனிகளின் சட்டரீதியான உரிமையா? தொழிலாளர்களின் இருப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்துவதும் சட்டரீதியான உரிமையா?சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பது உண்மையா?

# பெ.சந்திரசேகரத்தின் வீராவேசம் தோ.தொழிலாளர் மீது பாசமா?

ம.மமு.தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரம் மலையகத் தொழிலாளர்களின் மீது மிகவும் அக்கறை கொண்டவர் என்பதை காட்டுவதற்கு பல விதமான முயற்சிகளை அவர் மேற்கொண்டு வருகிறார். பத்திரிகைகளில் பறக்கும் அறிக்கைகளை காணமுடிகிறது. தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் உணர்ச்சிகளைத் தூண்டுமாறு பேசுகிறார். தொலைக்காட்சி நிகழ்வொன்றில் தோன்றிய அவர் பெருந்தோட்டக்கம்பெனிகள் கொள்ளை லாபம் சம்பாதித்துக் கொண்டிருப்பதை பல புள்ளி விபரங்களை முன்வைத்து எடுத்துக் காட்டினார். தொழிலாளர்களுக்கு மிகவும் குறைவான கூலி வழங்கப்படுவதையும் எடுத்துக்காட்டினார்.

தோட்டக் கம்பெனிகளின் வெற்று நியாயங்களை முறியடிக்கும் வகையில் கருத்துக்களை முன்வைப்பது நல்லதுதான். ஆனால் தொழிலாளர்களை ஏமாற்றும் நோக்குடன் அக்கருத்துக்களை அவர் முன்வைக்கிறாரா? என்பது தான் நமது கவலை. அவர் மாகாணசபை உறுப்பினராக இருந்தவர்.

தொடர்ச்சி 10ம் பக்கம்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 11 ஒக்டோபர் 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 73

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117, 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## ஜனாதிபதியின் ஐ.நா.உரையும் பேச்சுவார்த்தைக்கு மறுப்பும்

கடந்த மாதம் 21ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் 59வது பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிக்காகுமாரணதுங்க பண்டாரநாயக்க உரையாற்றினார்.அவ்வுரையிலும் ஊடகத்திற்கான பேட்டிகளிலும் அவர் குறிப்பிட்ட விடயங்களுக்கு மாறான கருத்துக்களை அவர் எதிர்வரும் காலங்களில் தெரிவிக்கமாட்டார் என்பதற்கு எவ்வித உத்தரவாதங்களும் இல்லை. எனினும் சர்வதேச சமூகம் என்று சொல்லப்படுகின்ற நாடுகளுக்கு முன்னனால் அவர் இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அவரது அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி சற்று தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார். அதாவது வடக்கு கிழக்கில்இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்பவில்லை என்றும் இறுதி தீர்வு பற்றி பேச்சுவார்த்தை நடத்தவே விருப்பம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அளித்த பேட்டிகளிலேயே அவர் இவ்வாறு விபரமாக தெரிவித்துள்ளார்.

தமிழீழ' விடுதலைப் புலிகள் இயக்கம் ஐ.தே.மு. அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருந்த இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று ஆரம்பம்தொட்டு கூறிவந்தார்.அந்த யோசனைகளின் அடிப்படையில் இடைக்கால நிர்வாக அதிகாரசபையை ஐ.தே.கட்சி கொடுக்கப்போகிறதென்றும் அதனால் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியே பாராளுமன்றத்தை கலைத்து விட்டு கடந்த ஏப்ரல் மாதம் பாராளுமன்றத் தேர்தலை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதங்களில் இடைக்கிடையே இடைக்கால நிர்வாகம் பற்றி புலிகள் இயக்கத்துடன் பேச ஜனாதிபதி விரும்பம் கொண்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. அதைவிடவும் புலிகள் இயக்கத்தின் இடைக்கால யோசனைகளுக்குப் பதிலாக ஜனாதிபதியும் அரசாங்கமும் சில யோசனைகளை முன்வைக்க விரும்புவதாகவும் செய்திகள் வெளிவந்தன.

இனப்பிரச்சனைக்கு போரின் மூலமன்றி பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வு காணப்படுமென்றும் அரசாங்கம் பேசத்தயாராகத்தான் இருக்கின்றது. என்றும் ஆனால் புலிகள் இயக்கம்தான் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கிறது என்றும் ஜனாதிபதி சந்திரிக்கா ஐ.நா.சபையில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார். அதற்கு பிறகு ஊடகவியலாளர்களுக்கு கொடுத்த பேட்டியின்போதே அவரது அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் பற்றி பேச விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அது சமர்ப்பித்த யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை நடத்தத் தயார் என்று தொடர்ந்து கூறிவருகிறது. ஐ.தே.கட்சி ஆட்சியிலிருந்தபோது அந்த இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகளின் அடிப்படையில் பேசத்தயார் என்று கூறிக்கொண்டு காலத்தை கடத்தியது. ஜனாதிபதி சந்திரிகாவும், ஐ.ம.சு.முன்னணியும் புலிகள் இயக்கம் சமர்ப்பித்த யோசனைகளின் அடிப்படையில் பேசத்தயாராக இருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்த போது அவை உறுதியான முடிவுகளாகத் தெரியவில்லை. ஐ.ம.சு.முன்னணியின் பங்காளி கட்சியான ஜே.வி.வி புலிகள் இயக்கத்துடன் பேச்ச வார்த்தையை நடத்தக் கூடாது என்று கூறிவந்தது. இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தக் கூடாது என்றும் நோர்வே அனுசரனையாளராக இருக்க கூடாது என்று கூறி பிரச்சாரங்களை செய்துவருகின்றது.

சில வாரங்களுக்கு முன்பு ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் புலிகளின் யோசனைக்கு பதிலாக இன்னொரு யோசனையை சமர்ப்பிக்கவிருப்பதாக கூறப்பட்டது. அதற்கு பதிலளித்த த.ஈ.வி.பு. இயக்க அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவ்வாறான யோசனை அரசாங்கம் முன்வைக்கும் தேவை எழவில்லை என்றும் அதனால் தாம் அதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் தெரிவித்திருந்ததார்.தாங்கள் சமர்ப்பித்த யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்துப்படுமானால் அப்போது அரசாங்கம் அதனுடைய யோசனைகளை தெரிவிக்கலாம் என்றும் கூறியிருந்தார் த.ஈ.வி.பு .இயக்கம் பேசத்தயார் என்றும் அரசாங்கமே பேசுவதற்கு தயக்கம் காட்டுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதிலிருந்து த.ஈ.வி.பு இயக்கித்தின் இடைக்கால யோசனைகளின் அடிப்படையில் அரசாங்கம் பேசத்தயக்கம் காட்டுவதனாலேயே பேச்சுவார்த்தை தொடங்கப்படவில்லை என்பது தெளிவானதே. இருந்தபோதும் த.ஈ.வி.பு விட்டுக் கொடுப்புகளை செய்து பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை விட்டிருந்தது அமெரிக்காவும் அதே நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள புதியவர் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படாமைக்கு புலிகள் இயக்கமே காரணம் என்று தெரிவித்திருந்தார். இடைக்கால நிர்வாக ஏற்பாடு அவசியமற்றதென கருதுவதாக இந்திய அரசாங்கமும் அண்மையில் அறிவித்திருந்தது.

எனவே இடைக்கால நிர்வாக அதிகாரசபை பற்றிய த.ஈ.வி.பு இயக்கத்தின் யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஐ.ம.சு.மு. அரசாங்கமும் அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும் இந்திய மேலாதிக்கமும் தடையாக இருந்துவருகின்றன என்பது தெளிவு.

ஐ.நா. சபை கூட்டத்தில் பேசும்போது ஜனாதிபதி சந்திரிகா புலிகள் இயக்கமே கடந்த 18 மாதங்களாக பேச்சுவர்த்தையிலிருந்து விலகி நிற்பதாகவும் தனது அரசாங்கம் பேசத்தயாராக இருப்பதாகவும் சர்வதேச சமூகத்தை தவறாக சிந்திக்கச் செய்யும் வகையில் பேசினார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தையிலிருந்து புலிகள் இயக்கம் விலகிக் கொண்டமைக்கு நியாயமான காரணம் இருந்தது அதற்கு பிறகு இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் பல விடயங்கள் நடந்தேறின. அன்றைய ஐ.தே.மு அரசாங்கம் வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான இரண்டு யோசனைகளை முன்வைத்தது. புலிகள் இயக்கம் பதில் யோசனையை முன்வைத்தது. அதனடிப்படையில் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு ஐ.தே.மு .அரசாங்கம் பெயரளவில் தானும் இணக்கம் தெரிவித்திருந்தது.

ஆனால் தற்போது ஐ.நா.சபை கூட்டத்தொடரை அடுத்து ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த கருத்துக்களிலிருந்து ஜனாதிபதியோ ஐ.சு.ம.முன்னணியோ இடைக்கால நிர்வாகம் பற்றி பேசத்தயாரில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அப்படியானால் அடுத்த நகர்வும் நடவடிக்கையும் என்ன?

- ஆசிரியர் குழு -

# அமெரிக்க இந்திய ஆளும் வர்க்க அரவணைப்புடன்
# தேசிய இனப் பிரச்சினையை தீர்க்க இயலாது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை அமெரிக்கா இந்தியா ஆகியவற்றின் ஆதரவு ஆலோசனை அரவணைப்பு இன்றித் தீர்க்க முடியாது என்று அவ்வப்போது ஊடகங்களின் ஊடே பரப்புரை செய்யப்பட்டு வருவதைக் காண்கின்றோம். ஆளும் வர்க்கத் தரப்பு சக்திகளிடமிருந்தும் மேட்டுக்குடி அரசியல் ஆதிக்கப் பிரதிநிதிகளிடமிருந்தும் இத்தகைய கருத்துக் கண்ணோட்டம் முன்வைக்கப்படுகின்றது. இதனை சில கல்வியாளர்கள் அறிவு ஜீவிகள் என்போர் கூலிக்கு மாரடிக்கும் விதமாக விதந்துரைத்து வரவும் செய்கின்றனர்.

இவ்வாறு இவர்கள் அமெரிக்க இந்திய ஆதரவு ஆலோசனை வழிகாட்டல் அரவணைப்புக்கு தத்தமது உள்ளார்ந்த நிலைப்பாடுகளைக் காரணங்களாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நியாயப்படுத்தலாகக் கூறும் போது அமெரிக்கா இன்று உலக அளவில் தனிப் பெரும் வல்லரசு என்றும் இந்தியா பிராந்தியளவில் சக்திமிக்க வல்லரசாக இருந்து வருகிறது என்றும் கூறி ஒரு சிறிய பலமற்ற நமது இலங்கையில் இவர்களைக் கடந்து நின்று தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க இயலாது என்றும் கூறி வருகின்றனர். இத்தகையோர் சிங்கள தமிழ் தரப்பில் மட்டுமன்றி முஸ்லீம் மலையகப் புத்திஜீவிகளிலும் காணப்படுகின்றனர்.

அமெரிக்காவின் இந்தியாவின் தயவையும் அழுத்தங்களையும் அவற்றுக்கு அப்பாலான தலையீட்டையும் விரும்பும் இத்தகையோர் முழு நாடும் மக்களும் தேசிய இனங்களும் உழைக்கும் மக்களும் சமத்துவமாகவும் சுபீட்சமாகவும் சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்ற பெரும் அவாவுடன் கோரி நிற்கவில்லை. சிங்களப் பேரினவாத சக்திகள் தேசிய இனங்களைக் குறிப்பாக சுயநிர்ணய உரிமைக்கான தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்கு அமெரிக்க இந்திய அரவணப்பைக் கோருகிறார்கள். தமிழர் தரப்பிலே பேரினவாத ஒடுக்கு முறையில் இருந்து விடுபடுவதற்கும் அப்பால் தனித் தமிழீழத்தை தோற்றுவிப்பதற்கான ஆதரவை வேண்டி நிற்கிறார்கள். முஸ்லீம் தலைமைகளும் மலையகத் தலைமைகளும் தத்தமது மக்களின் தனித்துவங்களின் பெயரால் தத்தமது அரசியல் ஆதிக்கப் பிடிகளை வலுப்படுத்தி நிலை நிறுத்த அமெரிக்க இந்திய ஆதரவைப் பெற்றுக் கொள்ளவே முயலுகின்றனர்.

உண்மையில் இத்தகைய அமெரிக்க இந்திய ஆதரவு அரவணைப்பு வழிகாட்டல் என்னும் கருத்துக்கள் யாரிடமிருந்து வருகின்றன. சாதாரண சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத்தமிழ் உழைக்கும் மக்களிடமிருந்து வருவதில்லை. பதிலுக்கு இம் மக்கள் மத்தியில் சகல வாய்ப்பு வசதி சொத்து சுகங்களுடன் இருந்து வரும் அரசியல் பிரதிநிதித்துவ சக்திகளிடமிருந்தே வருகின்றன. இவர்களுடன் தற்போது சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்ற பெயரில் அரசு சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோரும் இணைந்து காணப்படுகின்றனர். ஒட்டு மொத்தத்தில் இவர்கள் யாவரும் அமெரிக்க இந்தியத் தலையீட்டை வெவ்வேறு அளவுகளிலும் தத்தமது சொந்த விருப்பு வெறுப்பு நோக்கங்களிலுமே எதிர்பார்க்கின்றனர்.

இத்தகைய எதிர்ப்பார்ப்பானது தற்செயலான தொன்றல்ல. இதற்கு வரலாற்று ரீதியான கருத்தியல் தொடர்ச்சி இருந்து வந்திருக்கிறது. வளம்மிக்க இந்நாட்டையும் மக்களையும் அந்நிய கொலனித்துவவாதிகளுக்கு காட்டிக் கொடுத்து அவர்களிடம் சன்மானம் சொத்து சுகம் பட்டம் பதவி பெற்று வாழ்ந்து வந்த நிலவுடமை வழிவந்த முதலாளித்துவ மேட்டுக்குடி சக்திகள் தான் இன்று ஆட்சி அதிகாரத்திலும் வாழ்க்கை நிலையிலும் மேலே இருக்கின்றனர். அவர்கள் தான் ஆளுவோராகவும் சிவில் சமூகம் என்ற பெயரில் சுகபோக கருத்தியல் ஆதிக்கமுடையோராகவும் இருந்து வருகிறார்கள். இவர்களைத் தான் சகலவகை ஊடகங்களும் முன்னிலைப்படுத்தி அவர்களது ஆளும் வர்க்க சார்பு கருத்துரைகளைப் பரப்புரை செய்தும் வருகின்றன.

கொலனித்துவத்திற்கு எதிராகவும் அதன்பின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் மக்கள் அணிதிரட்டப்பட்ட ஒரு வெகுஜனப் போராட்டப் பாரம்பரியம் இந்நாட்டில் பெரியளவில் தானும் இடம் பெறவில்லை. அத்தகைய ஒரு போராட்டத்தின் ஊடாக இந்நாட்டின் சுதந்திரம் உழைக்கும் மக்களின் கைகளுக்கு மக்களாட்சியாகக் கிடைத்திருந்தால் இன்றைய அவலநிலை நாட்டிற்கும் மக்களுக்கும் தோன்றியிருக்க சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது. இந்நாட்டு மக்கள் மத்தியில் அரும்பியிருந்த சிநேகித முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாகி வளர்ந்திருக்கவும் இடமேற்பட்டிருக்காது.

**- வெகுஜனன் -**

**இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத் தியம் இறமை என்று பேசுகின்ற அதே ஆளும் வர்க்க அரசியல் கனவான்கள் தான் அரசாங்கத் தரப்பிலும் எதிர்ப்பிலும் இருந்து கொண்டு அமெரிக்க இந்திய ஆதரவையும் அரவணைப்பையும் கோருகிறார்கள்.**

இந்நாட்டு மக்கள் கொலனித்துவத்திற்கு வரலாற்றில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கடும் எதிர்ப்பைக் காட்டி வந்திருக்கிறார்கள். அதே போன்று ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆரம்பநிலைப் போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறார்கள்.

ஆனால் நிலவுடமை சொத்து சுகம் படைத்தவர்களின் காட்டிக் கொடுப்பால் அந்நியர்களின் காலடிகளில் மண்டியிட்டு வந்ததால் பரந்த வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் குறிப்பிட்டளவுக்கு முன்செல்ல இடதுசாரிகள் பெரும் பங்களிப்பை வழங்கி வந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத்தியம் இறமை என்று பேசுகின்ற அதே ஆளும் வர்க்க அரசியல் கனவான்கள் தான் அரசாங்கத் தரப்பிலும் எதிர்ப்பிலும் இருந்து கொண்டு அமெரிக்க இந்திய ஆதரவையும் அரவணைப்பையும் கோருகிறார்கள். ஆனால் அமெரிக்காவும் இந்தியாவும் இதுவரை இலங்கை இனப்பிரச்சினையில் நடந்து கொண்ட கேடுகெட்ட அணுகு முறைகளைச் சீர்தூக்கிப் பார்த்தால் அவற்றின் மறைக்கப்பட்டிருக்கும் சுயரூபங்களைக் கண்டு கொள்ள முடியும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அந்நியத் தலையீடோ ஆலோசனை வழிகாட்டலோ இன்றி நியாயமான தீர்வை உள்நாட்டிலேயே கண்டு கொள்ள முடியும். பேரினவாத நிலைப்பாட்டிற்கு அப்பால் தேசிய இனங்களின் வரலாற்று ரீதியான இருப்பையும் வளர்ச்சியையும் ஏற்றுக் கொண்டு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வுகளைக் கண்டுகொள்ள இயலும். உயர்வர்க்க நலன்கள் பெரும் தேசிய இன ஆதிக்கம் , ஆட்சி அதிகாரம் என்பனவற்றை முதன்மைப்படுத்தும் போது ஒரு பரந்த நோக்கிலான தீர்வுத்திட்ட முயற்சிக்கு வருவது என்பது அந்த வர்க்க சக்திகளுக்கு இயலாத ஒன்றேயாகும். அதன் காரணமாகவே தேசிய இனப்பிரச்சினைக்கு தூர நோக்கின்றி நாட்டையும் மக்களையும் பற்றிய அக்கறையின்றி அமெரிக்காவையும் இந்தியாவையும் ஆளும் வர்க்கத்தினர் கூவி அழைக்க முற்பட்டுள்ளனர்.

மூன்றாம் உலக நாடுகளில் இன மத மொழி பிரதேச முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாகவும் ஒடுக்கு முறைகளாகவும் வளர்ந்தும் வளரக்கப்பட்டும் வந்துள்ளன. சில நாடுகள் தூரநோக்குடன் அந்நிய சக்திகளின் அரவணைப்புகள் இன்றியே தமது பிரச்சினைகளைத் தீர்த்திருக்கின்றன. ஆனால் சில நாடுகளில் அவை பகைநிலை ஒடுக்குமுறையாகி யுத்தங்களாகி நிற்கின்றன. நமது நாடு அதற்கொரு சமகால உதாரணமாகும்.

பௌத்தசிங்கள பேரினவாதத் தரப்பில் அமெரிக்க இந்திய ஆதரவையும் அரவணைப்பையும் வேண்டிய நிற்போரது நோக்கம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தையும் புலிகள் இயக்கத்தையும் அழித்தொழிப்பதற்காகவேயாகும். இதனை சிங்கள உழைக்கும் மக்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள இயலாது. குறுகிய நோக்கில் ஏற்றுக் கொண்டால் அதன் விளைவு பரநாசத்திலேயே சென்று முடியும்.

அதேவேளை ஒடுக்கப்படும் தமிழ்த் தேசியத்தின் பேரில் அமெரிக்க இந்திய ஆளும் வர்க்க ஆட்சிகளை வேண்டி நிற்பது கடந்த கால் நூற்றாண்டுகால சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்ட த்தை சீரழித்து சின்னாபின்னப்படுத்தி அழித்தொழிக்கவே வழி ஏற்படுத்துவதாகும்.

எனவே சிங்கள தமிழ்த் தரப்புகளிடமிருந்தும் சிவில் சமூகம் என்ற ஏகாதிபத்திய சக்திகளிடம் கைநீட்டிப் பணக் கட்டுக்கள் வாங்கிப் பணிவான சேவை செய்து வரும் அரச சார்பற்ற நிறுவனங்களோ இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு அமெரிக்காவிடமோ அன்றி இந்தியாவிடமோ ஆதரவு ஆலோசனை அரவணைப்புக் கோரி நிற்பது முழு நாட்டிற்கும் முழு மக்களுக்கும் செய்யப்படும் துரோகமாகவே அமைந்து கொள்ளும். நாட்டை நவகொலனித்துவ அடிமைத்தனச் சங்கிலிகளால் பிணைப்பதற்கு மேலும் வழி சமைப்பதாகவே ஆகிவிடும். நேரடியாகவே அந்நியத்தலையீடும் மீண்டும் ஒருபடை இறக்கமும் இடம்பெறவே செய்யும் என்பதை எளிதில் மறந்து விடக் கூடாது.

இத்தகைய நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லாதவாறு பேச்சுவார்த்தை மூலம் விட்டுக் கொடுப்பு புரிந்துணர்வு நியாயமான தீர்வு என்றும் அடிப்படையில் முன்செல்வதே சம்மந்தப்பட்ட தரப்பினர் முன்னால் உள்ள பெரும் கடமையாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தேசியத்தை வலுப்படுத்துவது பற்றி

- இமயவரம்பன் -

இன்றைய தமிழ்த் தேசியவாதம், தமிழ்ப் பேசும் மக்கள் என்ற அடையாளத்திலிருந்து விலகி இன்று வடக்கு-கிழக்குத் தமிழர் என்ற அடையாளத்தை ஏற்றுள்ளது. முஸ்லிம்கள் மீது இந்த அடையாளத்தை வலிந்து சுமத்தி அவர்களது தேவைகளைத் தமிழரது தேவைகளிலிருந்து வேறுபடுத்தி அறிய மறுத்ததன் விளைவாக, முஸ்லிம் தேசியவாதம் மேலும் வலுப்பெற்றது. அது அவ்வாறு வலுப்பெற்றதற்கான முழுக்காரணமும் தமிழ்த்தேசியவாதத் தலைமையின் தவறான அணுகுமுறையே என்பது பொருந்தாது. சிங்களப் பேரினவாதத்தின் தூண்டுதலின் பேரில் உருவான பகை முரண்பாடுகள் அண்மைக் காலத்தவை. கிழக்கு மாகாண முஸ்லிம் தலைமைகளின் பாராளுமன்ற அரசியல் சந்தர்ப்பவாதம் தமிழ்ப் பாராளுமன்ற அரசியல் தலைமைகளின் சந்தர்ப்பவாதத்தினளவு பழையது. எனினும், இன்றைய சூழலில் முஸ்லிம்கள் 'தமிழினம்' என்று கூறப்படுகிற அடையாளத்துக்குள் உட்படாதளவில், தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்குமான முரண்பாடு தமிழ்த் தேசியவாதத்தின் புற முரண்பாடாகவே கொள்ளப்பட வேண்டும்.

மலையகத் தமிழர்கள் புவியியல் அடிப்படையிலான பிரிவினாலும் மலையகத் தமிழரது வரலாற்றுப் பாரம்பரியம் வடக்குக் கிழக்கின் தமிழரது வரலாற்றுப் பாரம்பரியத்தினின்றும் அடிப்படையில் வேறுபடுவதாலும் ஒரு பொதுவான தேசிய அடையாளத்தை உருவாக்குவதில் பல சிரமங்கள் உள்ளன. இவற்றை மேலும் மோசமாக்குகிற விதமாக யாழ்ப்பாண உயர்சாதிச் செல்வந்தர்களது பிரதிநிதிகளாக இருந்த தமிழ்த் தேசியத் தலைவர்கள் மலையகத் தமிழரை இலங்கை வாழ் தமிழரின் ஒரு பகுதியினராகக் கொள்ளாதது அவர்களது சமூக நோக்குக்கு இயல்பானதே. அவர்களது யாழ்ப்பாண- மையங்கொண்ட பார்வை, சாதி அடிப்படையிலும் பிரதேச அடிப்படையிலும் பெருவாரியான தமிழர்களைப் பற்றிய அக்கறையற்றதும் அவர்களைத் தாழ்ந்தோராகத் கொண்டதுமாகவே இருந்தது. மலையகத் தமிழருடன் யாழ்ப்பாணத் தமிழ் அலுவலர்கள், ஆசிரியர்கள் போன்றோரது உறவு, ஏற்றத் தாழ்வான ஒன்றாகவும் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டதாகவுமே அமைவதற்கு யாழ்ப்பாணச் சாதிய அமைப்பு ஒரு பெரும் பங்களித்தது. 1947ம் ஆண்டுக்குப் பின்பு உருவான தமிழரசுக்கட்சி மலையகத் தமிழர் பற்றிச் சரியான கொள்கை ஒன்றைக் கொண்டிருந்தாலும், அதற்குரிய நடவடிக்கைக்ளை அது மேற்கொள்ளவில்லை. மலையகத் தலைமைகள் தொழிற் சங்கங்கள் மூலமும் தரகு அரசியல் மூலமும் மலையக மக்களின் பின்தங்கிய நிலையைத் தமக்குச் சாதகமாக்கித் தமது சுயநலனைப் பேணிக்கொண்டன.

மலையகத் தமிழ்த் தலைமைகட்கு மலையகம்- யாழ்ப்பாணம் என்ற பிளவை ஊக்குவிப்பது மிகவும் பொருத்தமாயிருந்தது. மலையகத்தில் உருவாகி வளர்ந்து வந்துள்ள நடுத்தர வர்க்கமும் புதிய புத்திஜீவிப் பரம்பரையும் இவ்வாறான முரண்பாட்டை ஒரு பிரதேசவாத நோக்கில் பேணுவதன் மூலம் தங்களை முன்னேற்றிக்கொள்ளலாம் என்றே பார்க்கின்றன. இப்போக்கு கடந்த இருபது, முப்பது ஆண்டுகளுள் வலுப்பெற்று வந்துள்ளதெனலாம். அதேவேளை, பேரினவாத ஒடுக்குமுறைக்கெதிராக மலையகத் தலைமைகளது செயலின்மை, மலையக இளைஞர்களில் ஒரு பகுதியினருக்கு விடுதலைப் புலிகளிடம் ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனினும், தமிழ் விடுதலை இயக்கங்கள் தமிழ்த் தேசிய இனமென அவர்கள் கூறுகிற மக்கள் தொகைக்குள் மலையகத் தமிழர் ஆக மிஞ்சினால் ஒரு வசதிக்காக உள்ளடக்கப்பட்டனரே ஒழிய ஒரு தெளிவான பார்வையின் அடிப்படையிலல்ல என்று துணிந்து கூறலாம். அவ்வாறே, மலையகத் தமிழரது தலைமைகளிலோ நடுத்தர வர்க்கத்தினது அணுகுமுறையிலோ என்ன விதமான மாற்றம் நிகழ்ந்தாலும், மலையக மக்களது

## தமிழ்த் தேசியத்தின் அக முரண்பாடுகள் அடையாளம் காணப்படுவது அவசியம்

வாழ்க்கைச் சூழலின் யதார்த்தம் இன்றை தமிழ்த் தேசிய அடையாளத்தினுள் அவர்களை உள்ளடக்க அனுமதியாது.

வடக்கு- கிழக்கிற்கு வெளியே வாழுகிற தமிழ் மக்களில் பெரியதொரு பகுதியினர் மிக நீண்டகாலமாகவே தத்தமது பிரதேசங்களில் வாழ்ந்து வருவோராவர். இவர்களிற் சில சமூகங்கள் வெவ்வேறு சூழ்நிலைகளில் தமது மொழி அடையாளத்தை மாற்றியுள்ளன. வடமேல் மாகாணத்தின் கரையோரப் பகுதியிலும் மேல்மாகாணத்தின் வட பகுதியிலும் இவ்வாறு நடந்துள்ளது. பிழைப்புக்காகத் தென்னிலங்கையில் குடியேறிய தமிழர்களிற் பெரியதொரு பகுதியினர் தமது மொழியடையாளத்தைத் தொடர்ந்தும் பேணி வந்தாலும் பலருக்குப் பழைய ஊர்களுடனான உறவு துண்டிக்கப்பட்டு நீண்டகாலமாகிவிட்டது. பிறரிடையிலும், பழைய ஊர்த்தொடர்புகள், எஞ்சியுள்ள சொத்துக்களும் பேரளவிலான உறவுகளுடனும் நின்றுவிடும் போக்கை நாம் காணலாம்.

தமிழ்த் தேசியவாதிகள் வடமேல் மாகாணத்தின் ஒரு பகுதியைத் தமிழ் ஈழத்தினுள் சேர்த்துக் கருதினாலும், அங்கு வாழும் மக்களின் இழந்த தமிழ் அடையாளம் மீட்டெடுக்கப் படுவது இப்போதைக்கு இயலுமான தல்ல. எஞ்சியுள்ள தமிழர்கள், எவ்வளவு தூரத்துக்குத் தம்மை வடக்குக் கிழக்கின் தமிழ்த் தேசிய இன அடையாளத்துக்குள் சேர்த்துக் கருத விரும்புவார்கள் என்பது இன்றளவில் ஐயமானதே. இன்று தமிழ்த் தேசிய அடையாளம், வடக்கு - கிழக்கைத் தமது மண்ணாகக் கருதி அங்கு வாழும் மக்களையும் போர்ச் சூழலாலும் பிற நெருக்கடிகளாலும் அங்கு வாழ இயலாது இருந்தாலும் வடக்கு- கிழக்கைத் தமது சொந்த மண்ணாகக் கருதும் மக்களையுமே உள்ளடக்க இயலும், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களில் இலங்கையிலும் இந்தியாவிலும் புலம்பெயர்ந்து வாழ்வோர் பெருமளவும் இந்த அடையாளத்திற்கு உட்படுவர். பிற நாடுகட்குப் புலம் பெயர்ந்தோர், உணர்வுத் தளத்தில் இலங்கைத் தமிழ் அடையாளம் பேணுமளவுக்கு அவர்களது வாழ்வின் யதார்த்த நிலை, அவர்களைத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பகுதியாகக் கொள்ள அனுமதிக்கமாட்டாது. எனினும், இன்றைய தேசிய இன விடுதலைப் போராட்டச் சூழலில், அவர்கள் தங்களை இலங்கையின் தமிழ்த் தேசிய இனத்தவராகக் கருதி வாழும் அளவுக்கு அவர்களுக்கு அந்த இன அடையாளத்திற்கான உரிமையுண்டு.

தமிழ்த் தேசிய இன அடையாளம் வடக்கு- கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களை உள்ளடக்குவ தென்றால் தமிழ்த் தேசிய இன அடையாளம் வலுப்படுத்தப்பட வேண்டும். அந்த அடையாளத்தை வலுப்படுத்துகிற முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும். குறிப்பாக, இன்று தமிழ்த் தேசிய இனமாக நடைமுறையில் காணப்படுகிற வழக்குக் - கிழக்கின் தமிழ் மக்களதும், அங்கிருந்து புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும், தமது தேசிய இன அடையாளத்தில் தெளிவாக உள்ள தமிழ் மக்களதும் அடையாளம் வலுப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறானஅடையாளப்படுத்தலை வலுப்படுத்துவதாயின் அடையாளப் படுத்தப்படும் மக்களைப் பிளவுபடுத்துகிற முரண்பாடுகளைச் சரிவரக் கையாள வேண்டும். இந்த அடையாளப்படுத்தலுக்காக சரியானதொரு அடிப்படையைத் தீர்மானிக்க வேண்டும்.

தமிழ்ப் பண்பாடு, மரபு, மொழி என்பன போன்ற அடையாளங்கள் வெவ்வேறு விதங்களில் வற்புறுத்தப் படுகின்றன. இங்கே எந்தவிதமான தமிழ்ப் பண்பாட்டு அடையாளம் என்ற கேள்விக்கான சரியான விடை, அந்த அடையாளம் தமிழ் மக்களை எவ்வளவு தூரம் ஒன்றுபடுத்தும் என்பதிலேயே தங்கியுள்ளது. மரபு என்பது வெறும் பழமைவாதமாக, தூய்மையானது எனக் கூறப்படும் ஒரு கற்பனையான மரபா, காலத்தையொட்டி மாற்றம் பெற்றுவரும் ஒன்றா என்ற கேள்விகளும் மரபிற்கும் சமூக நீதிக்குமிடையிலான உறவு பற்றிய கேள்விகளும் எழுகின்றன. மொழி பற்றிய விடயத்திலும் தமிழின் தூய்மை பற்றிய பார்வைக்கும் தமிழை மக்களின் அன்றாடவாழ்வின் ஒரு பகுதியாகக் கருதும் பார்வைக்கும் முரண்பாடுகள் உள்ளன. மேற்குறிப்பிட்ட விடயங்களையொட்டிச் சாதியம், ஆணாதிக்கம் என்பன உடனடியாக நமது கவனத்துக்கு வருகின்றன; இவற்றுக்கும் அப்பால் வர்க்க முரண்பாடும் பிரதேசவாதமும் மதமும் நம் கவனத்துக்குரிய முக்கிய முரண்பாடுகளாகவுள்ளன. இவை யாவும் பற்றிப் பேசுவது தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்துகிற காரியம் என்று சிலர் கூறுகின்றனர். தமிழரிடையே இப்போது சாதி வேறுபாடுகள் இல்லை என்றும் பெண் போராளிகள் உருவாகியுள்ள ஒரு சூழலில் ஆணாதிக்கம் பற்றிப் பேசுவது பொருத்தமற்றது என்றும் வர்க்கப் போராட்டத்துக்கு இன்று இடமில்லை என்றும் பிரதேசவாதம் ஒரு சிலரால் கிளப்பிவிடப்பட்டுள்ள புரளி மட்டுமே என்றும் மதங்களிடையே பகைமை இல்லை என்றும் அவர்களாற் பாவனை செய்ய முடிகிறது. உண்மையான நிலைமைகள் அப்படியில்லை. இது ஒருபுறமிருக்க, இன்னொரு புறம் மரபு, பண்பாடு என்ற பேர்களில் சாதிப் பாகுபாட்டையும் ஆணாதிக்கத்தையும் நியாயப்படுத்துகிற ஒரு போக்கையும் நாம் காணுகிறோம்.

வேறொரு பிரிவினர், மேற்குறிப்பிட்ட முரண்பாடுகள் யாவுமோ அல்லது சிலவோ இருப்பதை ஏற்றாலும் உடனடியாக நம் முன்னுள்ள விடுதலைப் போராட்டச் சூழலில் அவற்றை வற்புறுத்துவது விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் என்று கூறுவர். இங்கு, 'வற்புறுத்துவது' எனும்போது, குறிப்பிட்ட முரண்பாடுகளின் விளைவாக எழுகிற நெருக்கடிகளைத் தீர்க்கும் முயற்சிகளையும் இவர்கள் உள்ளடக்குகின்றனர்.

முதலில், முற்குறிப்பிட்ட முரண்பாடுகள் எதுவுமே தமிழரிடையே இல்லையா என்ற கேள்விக்கு வருவோம். சாதி அடையாளம் இன்னமும் உள்ளது. அதைச் சட்டமியற்றி மாற்ற இயலாது. ஒரு அடிப்படையான சமூகமாற்றத்தின் போக்கில் சாதி வேறுபாடுகள் நெகிழ்வடைய இடமுண்டு. ஆனாற், சாதி வேறுபாடுகட்கான பொருளாதார அடிப்படைகள் உள்ளவரை, அவற்றைக் களைய இயலாது. தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் இந்த அடையாள வேறுபாடுகள் வெறும் அடையாள வேறுபாடுகளாக மட்டும் இல்லை. இன்னமும் சமூக ஏற்றத் தாழ்வுகளைக் குறிக்கும் விதமாகத் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் நுழைய முடியாத கோவில்களும் பயன்படுத்த முடியாத பொது வசதிகளும் பாகுபாட்டுடன் நடத்தப்படும் பொது இடங்களும் உள்ளன. சில பாடசாலைகளில் இன்னமும் சாதிப் பாகுபாடு கடைப்பிடிக்கப்படுவதற்கான ஆதாரங்கள் பலவும் தெளிவாக இருந்து வருகின்றன.

பெண்கள் ஆயுதமேந்தினபோதும், பெண்களை அவமதிப்பதற்கு எதிரான சில முக்கியமான விதிகள் விடுதலைப் புலிகளால் இயற்றப்பட்டுள்ளபோதும், சீதனக் கொடுமை இன்னும் ஒழியவில்லை. ஆண்களுக்கு ஒரு விதமான ஒழுக்க விதிகளும் பெண்களுக்கு இன்னொரு விதமானவையும் தொடர்கின்றன. கற்பு, பெண்மை என்பன பற்றிய பழமைவாதச் சிந்தனைகள் இன்னமும் பெரும்பாலான பெண்களின் நடத்தையைக் கட்டுப்படுத்துகின்றன. பெண்களை இழிவுபடுத்தும் முறையிற் பேசுவதும் பால் அடிப்படையில் அவமதிப்பதும் தொடர்கின்றன. அனைத்தினும் மேலாகப், பெண்களை ஆண்களின் நுகர்வுக்கும் இனவிருத்திக்குமான கருவிகளாக நோக்குகிற பார்வை இன்றைய சூழலால் மேலும் மோசமாகியுள்ளன. இவற்றைப் பண்பாட்டின் பெயரிலான நடைமுறைகள் மேலும் வலுப்படுத்தி நிற்கின்றன.

தனியார் சொத்துடமை உள்ள சூழலில் வர்க்கங்கள் தவிர்க்க இயலாதன. இன்று வடக்குக் கிழக்கில் முதலாளிய உற்பத்திமுறை பெரிய அளவில் வளராததற்குப் போர்ச் சூழல் ஒரு முக்கிய காரணம். பெரு முதலாளிய உற்பத்தி நிறுவனங்கள் எனக் கூடியவை அயல் நாட்டினருடையனவாகவும் அரசுடைமையாகவுமே உள்ளன. தமிழ்த் தேசிய முதலாளியம் பின்தங்கிய நிலைமையில் இருந்தாலும், தொழிலாளி- முதலாளி உறவு, சுரண்டலின் அடிப்படையிலேயே உள்ளதால், ஊதியம், வேலைநேரம், தொழிலாளர் நலன் என்பன தொடர்பான முரண்பாடுகள் தொடர்ந்து தவிர்க்க இயலாதது. தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டச் சூழலில் இந்த விதமான முரண்பாடுகள் தென்னிலங்கையில் உள்ள அளவுக்குப் பரவலாக இல்லாததற்கு, முதலாளிய உற்பத்தியிலும் பொருளாதாரத்தினதும் பின்தங்கிய நிலை ஒரு முக்கிய காரணமாகிறது. எனினும் விவசாயத் துறையில் நிலவுடைமை யாளர்களுக்கும் கூலி உழைப் பாளர்கட்கும் இடையிலான முரண் பாடுகள் தொடர்கின்றன. இப்பொரு ளாதார முரண்பாடுகளிற் பலவற்றைப் பேசித்தீர்க்க வாய்ப்பு உண்டு. அதேவேளை, தேசிய முதலாளியத் தின் பலவீனத்தைப் பயன்படுத்தி அந்நிய மூலதன ஊடுருவல் தொடர்கிறது. போர் நிறுத்தச் சூழலைத் தமக்குச் சாதகமாக்கி அந்நிய மூலதனம் வேரூன்றும்போது, அந்நிய மூலதனத்துடனான முரண்பாடு ஒரு புறம் முதலாளியச் சுரண்டலுக்கு மாறாகவும் மறுபுறம் ஏகாதிபத்திய, அயல் மேலாதிக்க எதிர்ப்பு நோக்கிலும் அமையும்.

இன்றைய பொருளாதாரச் சூழலில் வணிகப் பொருளாதார செயற்பாடுகள் தொழில் உற்பத்தியிலும் முக்கியமான பங்கு வகிக்கின்றன. மக்களின் அத்தியாவசியத் தேவைகளை வழங்குவதில் கொள்ளை லாபமடிக்கும் வணிக முதலாளி வர்க்கத்திற்கும் பொதுமக்களுக்குமிடையிலுள்ள முரண்பாடும் இன்று ஒரு முக்கிய சமூக முரண்பாடாக உள்ளது.

தமிழ் மக்களிடையே இப்போது பிரதேசவாதம் இல்லை என்ற கருத்துத் தமிழரசுக்கட்சி கிழக்கில் வெற்றிபெற்ற காலத்திலிருந்தே சொல்லப்பட்டு வந்த ஒரு கதையாகும். பிரதேசவாதத்துக்குச் சாதகமாக இருந்து வந்த பல விடயங்கள் இன்று இல்லாது போய் விட்டன. ஆயினும், சில நடுத்தர வர்க்க நலன்கள் பிரதேசவாதத்தின் நிலைப்பை வேண்டி நிற்கின்றன. பணந் திரட்டும்

**யாழ்ப்பாண நிலவுடமை உயர்சாதி செல்வந்தர்களது பிரதிநிதிகளாக இருந்த தமிழ்த் தேசியத் தலைவர்கள் தாழ்த்தப்பட்டோர் முஸ்லீம்கள், மலையகத் தமிழர் பெண்கள் என்போரைத் தாழ்ந்தவர்களாகக் கருதும் யாழ்ப்பாண மையங்கொண்ட உயர் சாதியப் பார்வையுடையோராகவே இருந்தனர்.**

தொடர்ச்சி 7ம் பக்கம்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

தேசிய இனப் பிரச்சினையை உக்கிரமாக்கிய ஒரு காரணி 1970ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதியில் நிகழ்ந்த குழறுபடியாகும். தரப்படுத்தல் என்ற பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் நோக்கங்களும் விளைவுகளும் ஒருபுறமிருக்க அதை இயலுமாக்கிய சூழ்நிலைகள் மிகவும் கவனிக்கத்தக்கன.

1970ம் ஆண்டுசெப்றெம்பர் மாதம் பல்கலைக்கழக அனுமதி பற்றிய விவரங்கள் வெளிப்படுத்தப்பட முன்னரே சில தகவல்கள் கசியவிடப்பட்டுவிட்டன. அப்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே பொறியியல் பீடம் இருந்தது. அங்கு 150 மாணவர்களுக்கு மட்டுமே இடம் இருந்தது. கபொ.த. உயர் நிலைப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி, பொறியியல் பீட அனுமதி பெறத்தகுதி பெற்றோரில் 120க்கு மேற்பட்டோர் 80% தமிழ் மூலம் பரீட்சை எழுதியவர்களாவர். ஏற்கனவே தமிழரின் விகிதாசாரம் சனத் தொகை விகிதாசா ரத்திலும் அதிகம் என்று உள்ளே கனன்று கொண்டிருந்த படித்த நடுத்தர வர்க்கச் சிங்களவரிடையே, குறிப்பாகப் பேரினவாத அரசியற் கட்சிச் சார்புடையவர் களிடையே, இது சினத்தையுஞ் சந்தேகங்களையுங் கிளறிவிட்டது.

> **உயர் கல்வியில் நகரம் சார்ந்தோரின் பிள்ளைகள் விஞ்ஞானப் பாடங்களில் அதிக நாட்டம் காட்டினர். இதற்குப் பெற்றோரின் தூண்டுதலும் உயர் தொழில் பற்றிய எதிர்பார்ப்புகளும் முக்கிய பங்களித்தன**

சிங்கள மாணவர்களைவிடக் கூடிய விகிதத்தில் தமிழ் மாணவர்கள், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம் கொழும்பு நகரம் சார்ந்த மாணவர்கள் உயர்கல்விக்கு விஞ்ஞானப் பாடங்களையே நாடினர். அதிலும், கணிதம், பௌதிகம் என்பனவற்றை நாடினவர்களது விகிதாசாரம் இன்னும் அதிகம். இதற்குப் பாடசாலைகளில் இத்துறைகளில் இருந்த ஆசிரியர்களது தரம் கல்வி வசதிகள் என்பன போகப் பெற்றோரின் தூண்டுதலும் உயர் தொழில் பற்றிய எதிர்பார்ப்புகளும் முக்கிய பங்களித்தன.

பொறியியற் கல்விக்குப் பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களது தொகை 1960களில் 30%க்கு மேலாகவும் சில சமயம் 50% அளவிலும் இருந்துள்ளது. எனினும் 80% எளிதில் நம்பமுடியாதளவு அதிகமே. புள்ளிவிபர அடிப்படையில் இது ஏற்க இயலாத ஒரு தொகையல்ல. எனினும் இவ்வாறு நடப்பதற்கு வழமைக்குப் புறம்பான ஒரு காரணியும் உதவியது.

தனிப்பட்ட முறையில் ற்யூஷன் வைத்துக்கொள்வது 1960ம் ஆண்டிற்குப் பின்பு படிப்படியாக வளர்ந்து 1970 அளவில் கணிசமாக ஏற்புடைய ஒரு வழமையாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் சிறிய அள்விலான ற்யூட்டறிகள் செயற்படத் தொடங்கிவிட்டன. இதன் விளைவாகவும் பரீட்சைக்கென்றே கற்பிக்கிற பழக்கம் வலுப்பெற்றதாலும் கணிதப் பாடங்கள் இரண்டிலும்உயர் புள்ளிகளைப் பெறும் வாய்ப்பு அதிகமென்பதாலும் யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்களின் பெறுபேறுகள் முன்னைய வருடத்தை விடச் சிறப்பாக அமைந்தன. தெற்கே கொழும்பு தவிர்ந்த பகுதிகளில் ற்யூஷன் அதிகளவுக்குப் பரவாததற்குக் விஞ்ஞானப் பாடங்களைக் கற்பிக்கக் கூடியவர்கள் இல்லாமையும் ஒரு காரணமாகும்.

1970ம் ஆண்டுக்குரிய பெறுபேறுகள் பற்றிக் கிளப்பப்பட்ட புரளிகளில் ஒன்று தமிழில் எழுதப்பட்ட வினாத்தாள்களைத் திருத்தியவர்கள் வேண்டுமென்றே கூடியளவிற் புள்ளிகளை வழங்கினார்கள் என்பதாகும். வினாத்தாள்கள் கசியவிடப்பட்டன என்பது இன்னொன்று. இவற்றைப் பற்றிய முறையான விசாரணை எதுவும் நடக்க முன்னரே சிங்கள, ஆங்கில நாளேடுகள் மூலம் இவ்வாறான ஐயங்கள் சிங்கள மக்கள் மனதில் ஆழ விதைக்கப்பட்டன. இவற்றுக்கு உடந்தையாகச் சில பேரினவாதப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கருத்துக்களை வழங்கினர். இதைக் கண்டித்து முறையான விசாரணையின்றி எதையும் பேசுவது தவறு என்று கூறியசில பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கருத்துக்களை வழங்கினர். இதைக் கண்டித்து முறையான விசாரணையின்றி எதையும் பேசுவது தவறு என்று கூறிய சில பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இனத் துரோகிகள் என நிந்திக்கப்பட்டனர்.

இதன் பின்பு, அரசாங்கம் நியமித்த விசாரணைக்குழு, எந்தவிதமான குழறுபடிகளும் இல்லை என்று அறிவித்தபோதும், சந்தேகங்கள் தணியவில்லை. ஏனெனில், பேரினவாதிகளது தேவை நியாயமான அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதி என்பதல்ல. எப்படியாவது பிற சமூகத்தினருக்குக் கிடைப்பதைக் குறைப்பதிலேயே அவர்கள் குறியாக இருந்தனர். இவ்விடயத்தில், யூஎன்.பி. சார்பு ஏடுகள் விஷமத்தனமாகவே நடந்துகொண்டன என்பது தரப்படுத்தல் வருவதற்குச் சாதகமான விதமாகவே நடந்துகொண்டனர் என்பதும் முக்கியமானது. ஜே.வி.பி. சார்பானவர்களுடைய நிலைப்பாடும் இதே விதமாகவே அமைந்தது. ஸ்ரீ.சு.கட்சி அரசாங்கம் பேரினவாதிகட்கு வளைந்து கொடுக்கும் விதமாகவே, தரப்படுத்தலைப் புகுத்தியது என்றாலும் அதுபற்றிய தயக்கம் எதுவும் அதற்கு இருந்ததாகக் கூற முடியாது. சோவியத் சார்பு கம்யூனிஸ்ட்டுக் களும் பிளவுபடாத நிலை யி லிருந்த சமசமாஜக் கட்சி யும் தரப்படுத்தலை வெளிவெளியாகக் கண்டிக்கவில்லை.

தரப்படுத்தல் என்பது மிகவும் கொச்சையான ஒரு புள்ளிவிவரக் சேட்டையாகவே அமைந்தது. தமிழ் மூலம் பரீட்சைக்குத் தோற்றினோருடைய புள்ளிகளின் சராசரியும் பரம்பலும் சிங்கள மூலமும் ஆங்கில மூலம் தோற்றினோருடை யதை ஒத்ததாக அமையுமாறு ஒவ்வொரு பாடத்திற்குமான புள்ளிகள் மாற்றப்பட்டன. எதிர்பார்க்கக்கூடியவாறே இதன் விளைவாக, பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோரின் இன அடிப்படை யிலான விகாதா சாரம் பரீட்சைக்குத் தோற்றினோரின் விகிதாசாரத்துக்கு ஏறத்தாழ சமமா யிற்று. எனவே பொறியியலுக்கு அனுமதி பெற்ற தமிழ் மாணவர் களது தொகை 80மூ என்பதற்குப் பதிலாக 30%க்குக் கீழே இறங்கியது. இதன் விளைவாக யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களிடையே கொந்தளிப்பு நிலை ஏற்பட்டதும் அதைத் தமிழரசுக்கட்சியும் அதன் இளைஞர் அணியும் பயன்படுத்திய விதமும் வேறு விடயங்கள்.

> **1970பதுகளிலான கல்வித் தரப்படுத்தல் ஒரு பேரினவாத நடவடிக்கையாகும். இதனை ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கம் நடைமுறைப்படுத்திய போதிலும் யூ.என்.பி., ஜே.வி.பி. பேரினவாத ஏடுகள் வரவேற்றன.**

தமிழ் மாணவர்களின் கோபம் கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்முத்தின் திசையில் திரும்பியது. அமைச்சர் இந்தத் தருணத்தைப் பாவித்துத் தனக்கு வேண்டிய சில முஸ்லிம்களுக்கு உதவும் விதமாக அனுமதிக்கான விதிகட்குப் புறம்பாக முஸ்லிம் மாணவர்கள் சிலரை அப்போது மொறட்டுவ தொழில்நுட்பக் கல்வி நிறுவனமாக இருந்த இன்றைய பல்கலைக்கழகத்தின் டிப்ளோமா கல்விக்கு அனுமதி பெற வசதி செய்திருந்தார். இது மிக ஒழுங்கீனமானது என்றாலும் தரப்படுத்தல் என்பது அவரது தீர்மானத்தின்படி நடந்ததல்ல. அதற்கான பொறுப்பு முழு அரசாங்கத்தினதுமாகும். முஸ்லிம் விரோதக் கூச்சல்கள் தமிழ் மாணவர்களது கண்டன ஊர்வலத்தில் எழுந்தபோது யாழ்ப்பாணத்தின் மாக்ஸிய லெனினிய மாணவர்களது குறுக்கீட்டால் அவை மறிக்கப்பட்டன என்பது குறிப்பிட வேண்டிய விடயம்.

> **தரப்படுத்தல் பற்றி வர்க்க அடிப்படையிலோ சமூக நீதி என்ற ரீதியிலோ அன்றி தேசியவாத அரசியலின் தேவை அடிப்படையிலேயே நோக்கப்பட்டது.**

தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களது அதிருப்தி வேறு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற உணர்வு 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் விளைவாக வலுப்பெற்றதால் தரப்படுத்தலை நிறுத்திச் சிங்களப் பேரினவாதிகளைச் சினக்கச் செய்யாமல், பொறியியலுக்குப் பல்கலைக்கழக அனுமதி பெறும் தமிழ் மாணவர்களது தொகையையும் கூட்டித் தமிழ் மக்களிடையே உள்ள பிரதேச உணர்வுக்கும் இடமளிக்கும் விதமாக மாவட்ட அடிப்படையிலான அனுமதி முறை புகுத்தப்பட்டது. அத்துடன் 1974ல் மொறட்டுவை தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒரு பல்கலைக்கழக வளாகமாக்கப்பட்டது. அதையொட்டி, யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழக வளாகமும் நிறுவப்பட்டது.

தரப்படுத்தலோ மாவட்ட அடிப்படையிலான அனுமதியோ பின்தங்கிய நிலையிலுள்ள சமூகங்கட்கும் பிரதேசங்கட்கும் பாடசாலைகட்கும் பணவசதியற்ற மாணவர்கட்கும் வாய்ப்பளிக்கும் ஒரு சலுகையாக அமைந்திருந்தால் அது நமது கல்வித்துறையில் நடந்த ஒரு மிக முற்போக்கான விடயமாக இருந்திருக்கும். ஆனால் அது அப்படி நடக்கவில்லை. பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து வந்த வசதிபடைத்த குடும்பத்துப் பிள்ளைகள், உள்ளூர்ப் பாடசாலைகளில் தம்மைப் பதிந்து கொண்டு கொழும்பு,

**பேராசிரியர் சி. சிவசேகரம்**

யாழ்ப்பாணம் போன்று ற்யூட்டறி வசதியுள்ள இடங்களிலும் ற்யூசன் பெறக்கூடிய இடங்களிலும் கல்வியைப் பெற்றுத் தமது மாவட்டங்களிலேயே பரீட்சை எழுதி மாவட்ட அடிப்படையில் பல்கலைக்கழகம் புக இயலுமாயிற்று.

இந்த நிலையில் 1974ம் ஆண்டளவில் மேற்குறிப்பிட்டவாறு சமூக நீதிக்கான ஒரு தரப்படுத்தலை வற்புறுத்தியும் பேரினவாதத் தரப்படுத்தலை நிராகரித்தும் நான் எழுதிய ஒரு கட்டுரையை "ஜனவேகம்" என்கிற மாத ஏட்டுக்கு அனுப்புமாறு கேட்டார்கள். இந்த "ஜன வேகம்" என்பது "ஜனவேகய" என்ற பேரில் இயங்கி வந்த குழு ஒன்றின் தமிழ் ஏடாகும். இக்குழுவில் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் இருந்த இடதுசாரிகள் எனப்படும் குமார் ரூபசிங்ஹ, சேனக பண்டாரநாயக்க, சந்திரிகா பண்டாரநாயக்க என்போருக்கு ஒரு முக்கிய பங்கு இருந்தது. சமுத்திரன் என்ற பேரில் எழுதிவந்த சண்முகரத்தினத்துக்கும் அதில் செல்வாக்கு இருந்தது. எனது கட்டுரை தமிழில் வெளியானது. அது தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறானது (அப்போது தமிழர் ஐக்கிய முன்னணி உருவாகியிருந்தது) என்பதாலோ என்னவோ உடனடியாகவே அது தமிழில் வெளியிடப்பட்டது. எனினும் எனது கருத்துக்கள், அவை எங்கே அதிகம் பயன்பட்டிருக்குமோ, அங்கே பயன்படுமாறு, "ஜனவேகய" சிங்கள ஏட்டில் வெளிவரவில்லை.

அன்று 'நக்ஸலைற்றுக்கள்' என்று ஸ்ரீ.ல.சு.கட்சி வலதுசாரிகளால் அழைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட ஸ்ரீ.ல.சு.கட்சி இடது சாரிகளோ ஸ்ரீ.ல.சு. கட்சியுடன் கூட்டா ளிகளாகவோ உறுப் பினர்களாகவோ இருந்த எவருமே, தரப்படுத்தல் பற்றி வர்க்க அடிப்படை யிலோ சமூக நீதி என்ற அடிப்படையிலோ எந்தவிதமான தீர்வையும் முன்வைக்கவில்லை. தேசியவாத அரசியலின் அடிப்படையிலேயே தரப்படுத்தல் நோக்கப்பட்டது.

1970ம் ஆண்டு வரை விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகட்குப் பல்கலைக்கழக அனுமதிக்கு விஞ்ஞானபாடங்களுக்குச் செய்முறைப் பரீட்சை இருந்து வந்தது. பெரும்பாலான பாடசாலைகளில் விஞ்ஞான பாட ஆசிரியர்கள் இருந்தாலும் ஆய்வுகூட வசதிகள் இருக்கவில்லை. இது பலருக்கு, குறிப்பாகப் பெருவாரியான தென்னிலங்கைப் பாடசாலை மாணவர்கட்கு, ஒரு இடைஞ்சலாகவே இருந்தது. இந்தக்குறையை நீக்க எல்லாப் பாடசாலைகளிலும் விஞ்ஞான ஆய்வுகூடங்களை நிறுவித் தகுதிபெற்ற ஆசிரியர்களை நியமிப்பதற்குப் பதிலாக விஞ்ஞானச் செய்முறைப் பயிற்சிக்குக் குழி பறிக்கிற விதமாகவே அரசாங்கம் முடிவுகளை எடுத்தது.

முதலில் செய்முறைப் பரீட்சைகளை நடத்துவதன் சிரமத்தைக் காரணங்காட்டி வெறுமனே எழுத்துப் பரீட்சை மூலம் மாணவர்களது பெறுபேறுகள் தீர்மானிக்கப்பட்டன. இருந்தபோதும் செய்முறைப் பயிற்சிகள் செய்வதற்கான சான்றாகக் குறிப்புப் புத்தகங்கள் பரீட்சை மண்டபத்திற்குக் கொண்டுவந்து காட்டப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. போலியான குறிப்புப்புத்தகங்கள் மூலம் ஒருவர் செய்முறைப் பயிற்சிகளைச் செய்ததாக நிறுவ இயலுமாயிருந்தால் இந்த நடைமுறையின் விளைவாக விஞ்ஞானச் செய்முறைப் பயிற்சி புறக்கணிக்கப்பட்டது. இன்று ஆய்வுகூட வசதிகள் எதுவுமே ஆய்வுகூடமே இல்லாத பாடசாலைகளிலிருந்தும் மாணவர்கள் ஆய்வுகூடப் பயிற்சி பெற்றதாகப் பாவனை செய்யக்கூடியளவுக்கு நிலைமைகள் சீரழிந்துபோயின.

இங்கே செய்முறைப் பயிற்சி என்பது மேலை நாட்டில் வசதிபடைத்த பாடசாலைகளில் வழங்கப்படுகிற விதமான பயிற்சியாக இருக்கத் தேவையில்லை. பல்வேறு வகையான அளவுமுறைகள், பரிசோதனைகள், நிகழ்த்திக் காட்டுதல்கள், அவதான முறைகள் எல்லாமே எல்லாரும் பழக வேண்டியனவல்ல. சில அடிப்படையான அவசியமான விஞ்ஞான நடைமுறைகளை அதிக செலவில்லாமல் எளிய நடைமுறைமூலம் மாணவர்கட்குப் பயிற்றுவிக்க இயலும். இது பற்றி அண்மையில் அரசாங்கங்கள் கவனங்காட்டியுள்ளபோதும், இவ்வாறு விஞ்ஞானச் செய்முறை அறிவைப் பரவலாக்குவதற்கு மாணவர்களும், ஆசிரியர்களும் பெற்றோரும்கூட ஒத்துழைக்க வேண்டும். அதற்கு இன்றைய கல்வி பற்றிய அணுகுமுறை ஒரு பெரும் தடைக்கல்லாக உள்ளது.

நமது கல்வியின் இலக்கு உத்தியோகம். அதற்கான வழி உயர்கல்வி. அதைப்பெற பல்கலைக்கழக அனுமதித் தேர்வில் தேறவேண்டும். சிறப்பாகத் தேறும் வழி பரீட்சைக்காகப் பயிற்றுவிக்கப்படுவதே. இது இன்று முழுப் பாடசாலைக் கல்வியையும் பீடித்துள்ள நோய். இதினின்று மீளுவதானால் பரீட்சை முறை முற்றாக மாற்றியமைக்கப்படுவது அவசியமாகலாம்.

ற்யூட்டறிகளை முறியடித்துப் பாடசாலைக் கல்வியை மீளவும் நிலை நிறுத்துவதற்கு முழுச் சமூகமும் ஒத்துழையாவிடின், நாட்டின் கல்விமுறையைச் சீர்ப்படுத்துவது நடக்கக்கூடிய காரியமல்ல.

---

### தேசியத்...

6ம் பக்க தொடர்ச்சி

முயற்சிகளிலும் பதவிக்கும் அதிகாரத் துக்குமான போட்டிகளிலும் பிரதேச வாதத்தின் மூலம் சிலர் தங்களது வாய்ப்புக்களை மேம்படுத்த இயலு மாகிறது. கடந்த காலத்து முரண் பாடுகளின் விளை வாக நியாயமான சந்தேகங்களும் முற்றிலும் அகச்சார்பான கருத்துக் களும் மிக எளிதாகவே கிளறிவிடப் படக் கூடியன என்பதைக் 'கருணா அணியின்' செயற்பாடுகளின் மூலம் நாம் காண முடியுமாயிற்று. இந்த முரண்பாடுகள் கருணா அணியால் உருவாக்கப்பட்டவையல்ல. மாறாக, விடுதலைப் போராட்டத்தின் போக்கில் அதிகம் முனைப்புப் பெறாதிருந்த சில முரண்பாடுகள் போதியளவு கவனிப் பைப் பெறாததாலேயே தருணம் வாய்த்தபோது, கருணா அணியின ரால் அவற்றைப் பெரிதுபடுத்த முடிந்தது. இன்று மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கட்கு வெளியே வாழும் அப் பிரதேசத்தவர்கள் பிரதேச உணர்வைக் கூடுதலான அளவில் வெளிப்படுத்துவதை நாம் காணலாம்.

மதம் இன்று ஒரு மேலாதிக்க முரண்பாடாக இல்லாவிடினும் சைவ-கிறிஸ்தவ முரண்பாட்டுக்கு உயிரூட்டுகிறவிதமான செயல்கள் பலவும் நடைபெறுகின்றன. குறிப்பாக. இந்து தீவிரவாதம் இந்தியாவிலிருந்து ஊட்டம் பெற்று வருகிறது. இங்குள்ள உயர்வர்க்கத்தினர் சிங்கள பௌத்தத்துடன் சமரசம் செய்து முஸ்லிம்களையும் கிறிஸ்தவர் களையும் ஓரங்கட்டுகிற முயற்சி களில் மும்முரமாயுள்ளனர். மறுபுறம் புதிய கிறிஸ்தவ நிறுவனங்கள் மத மாற்றத்தில் முனைப்பாக உள்ளன. இவற்றில் பெரும்பகுதியானவை அமெரிக்க நிதியின் உதவியுடன் அரசியல் நோக்கங்கட்காகச் செயற்படுகிறவை.

இவற்றையெல்லாம் தமிழ்த் தேசியத்தின் அக முரண்பாடுகள் என்பதற்குள் சென்று பார்க்கும் போதே விடயங்களைத் தெளிவாகக் காண முடியும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவின் உதவியும் மிரட்டலும் அடிபணிந்து வரும் இலங்கையும்

இலங்கை துரிதகதியில் இந்தியாவின் ஒரு மாநிலமாகி விடுமோ என்ற அச்சம் தரும் சூழ்நிலை உருவாகி வருகின்றது. இதற்கான ஏற்பாடுகளை இரண்டு பிரதான ஆளும் வர்க்க அரசியற் கட்சிகளும் மட்டுமன்றி அப்பட்டமாகப் பேரின வாதம் பேசுகின்ற ஜே.வி.பி, சிஹல உறுமய மற்றும் தூய பௌத்த சிங்களம் பேசுகின்ற கனவான்களும் செய்து வருகின்றனர். ஏனைய அரசியற் கட்சிகள் சில இது தொடர்பில் மௌனம் சாதிக்கின்றன. ஒரு 'சில கட்சிகளும் அரசியல் பிரமுகர்களுமே தூர நோக்கில் இவ்விடயத்தை அணுகிச் சுட்டிக் காட்டி வருகின்றனர்.

புதிய ஜனநாயக் கட்சியானது இந்தியாவின் உள்நோக்கங்களை முன் கூட்டியே எதிர்வு கூறி மக்களுக்கு விளக்கமளித்து அறிவூட்ட முயற்சி செய்து வருகின்றது. அன்று இந்தியா இலங்கையின் ஆகாய எல்லையை அத்துமீறி உணவுப் பொட்டலங்களைப் போட்ட போது அதைப் பகிரங்கமாகக் கண்டித்த ஒரே கட்சி புதிய ஜனநாயகக் கட்சி. அவ்வேளை இந்திய வருகையை வரவேற்றவர்கள் பின்பு இந்தியப் படையினரின் அட்டூழியங்களை நிதர்சனமாகக் காண வேண்டி ஏற்பட்டது.


இன்று அரசாங்க கட்சியினர், எதிர்க்கட்சியினர், தமிழர்களின் பிரதிநிதிகள் எனப்பட்ட பா.உ.ளும் கூட இந்தியாவுக்கு காவடி எடுக்கின்றனர். ஏதோ ஒரு வகையில் இந்தியத் தலையீட்டை வரவேற்கின்றனர். அதற்காக என்ன விலை கொடுக்கப்படவேண்டும் என்பதை புது டில்லியே தீர்மானிக்கவுள்ளது. இந்தியாவுக்கு இலங்கை தொடர்பான நிகழ்ச்சி நிரல் வேறு. அதன் நிரலில் இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண உதவப் போவதாக பாசாங்கு செய்து கொண்டு இலங்கையைப் பொருளாதார ரீதியில் இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர துரித நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இலங்கை தற்போது பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. இது இலங்கைக்கு மட்டுமல்ல முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாத்துக் கொண்டு உலகமயத் தை ஏற்றுக் கொண்டு மக்கள் நலன் சார்ந்த தேசிய பொருளாதார நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியுமென அரசாங்கங்கள் மக்களை ஏமாற்ற முயலுகின்றன. ஆனால் அரசாங்கங்களின் செயற்பாடுகள் செல்வந்தர்களை மேலும் பெருச்செல்வந்தர்களாகவும் வறிய மக்களை மேலும் வறிய நிலைக்கும் தள்ளுவதாகவே அமைந்துவருகின்றன. உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பால் நெருக்கடிகள் மோசமடைந்துள்ளன. இந்த நிலைமையைப் பயன்படுத்தி பெரியநாடுகள் சிறிய நாடுகளை விழுங்குகின்றன. இலங்கையைப் பொறுத்தமட்டில் பேரினவாத யுத்தத்தினால் பொருளாதார நிலைமை மோசமடைந்துள்ளது. யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்துவதற்கு அரசாங்கத்திற்கு வளங்கள் போதாதுள்ளது. அதேவேளை தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் ஒரு தீர்வை முன்வைக்கவும் தயங்குகின்றார்கள்.

இவை மட்டுமல்ல. ஆண்டு இறுதியில் தைக்கப்பட்ட ஆடைகளுக்கான ஏற்றுமதிக் கோட்டா முறை நீக்கப்படவுள்ளதால் சிறிய ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் வேலையை இழக்க வேண்டிய நிலை உருவாகவுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் பெருமளவு அந்நியச் செலவாணியை இழக்க வேண்டிய நிலையும் உருவாகியுள்ளது.

இலங்கையின் அவல நிலையைப் புரிந்து கொண்ட இந்தியா இலங்கையை தன்வசமாக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. குறிப்பிட்ட உதவியும் மறைமுக மிரட்டலும் என்ற இரட்டைப் பாணியில் தற்போது அலுவல்கள் நடைபெறுகின்றன. இந்தியா இலங்கையை அவ்வப்போது மிரட்டித் தனது நலன்களைக் கவனித்து வருகின்றமைக்கு அண்மையில் இலங்கை ரெலிகொம் கேபிள்களை சேதப்படுத்திய விடயம் ஒரு உதாரணமாகும்




ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி இந்திய கப்பற் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 'நாகலாந்து அரசி' என்ற பெயரையுடைய கப்பல் கல்கிஸ்சைக்கு 9.27 கி.மீட்டர் தொலைவில் சிறீலங்கா ரெலிக்கொம்மின் கேபிளை நங்கூரம் போட்டு இழுத்ததன் மூலம் சேதப்படுத்திக் கொண்டது. இவ்வாறு ரெலிக்கொம் கேபிள் பழுதாக்கப்பட்ட சம்பவம் இலங்கையின் கடற்பரப்பிலேயே இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தை அடுத்து ரெலிகொம்மின் இன்டநெற் சேவை தடைப்பட்டது. ரெலிகொம்மின் மூலம் இன்ரநெற் சேவைகளைப் பெற்று வந்த பல நூறு நிறுவனங்கள் வங்கிகள் என்பன செயல் இழந்தன. ரெலிகொம்மை நம்பி இருந்த பல்வேறு நிறுவனங்களுக்கு ஏற்பட்ட இழப்பு பல கோடி ரூபாய்களாகும். அந்த இழப்பின் தொகை இதுவரை கணிப்பிடப்படவில்லை.

ரெலிகொம்மின் கடற்பகுதி கேபிள் பொறியியலாளர் அமரசிங்காவின் வேண்டு கோளுக்கிணங்க துறைமுக விமானத்துறை அமைச்சின் இயக்குனர் சாந்த வீரக்கூன் குறித்த கப்பலைத் தடுத்து கைது செய்யுமாறு உயர் நீதி மன்றை வேண்டிக் கொண்டார். அதன் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியா குறித்த கப்பலைத் தடுத்து நிறுத்த உத்தரவிட்டு செப்டம்பர் 6ம் திகதி விசாரணைக்காக கப்பலின் இலங்கை முகவர்களை நீதி மன்றிற்கு வருமாறும் கட்டளை பிறப்பித்தார்

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட கப்பலுக்குச் சொந்தமான நாட்டிற்கு அந்நாட்டின் தூதுவராலயம் மூலமாக அறிவிப்பது வழமை. இந்தச் சம்பவம் தொடர்பாக விளக்கம் ஒன்று இலங்கையில் உள்ள இந்திய தூதுவராலயத்திற்கு அறிவிக்கப்பட்டது. இந்தியத் தூதுவராலயமோ மிக வேகமாகச் செயல்பட்டது. மிரட்டினார்களா? அதட்டினார்களா? பேரம் பேசினார்களா? என்பது இது வரை வெளிவரவில்லை. ஆனால் ஏதோ ஒன்று நடந்திருக்க வேண்டும்.

ரெலிகொம் நிறுவனம் ஆகஸ்ட் 26ம் திகதி இந்தியக் கப்பலுக்கு எதிரான வழக்கைக் கைவிடுவதாக இயக்குனர் சபை தீர்மானித் துள்ளதாக சட்டப்பகுதி பொது முகாமையாளர் சொனாலி வீரக்கூன் அறிவித்தார். இந்த அறிவித்தலைத் தொடர்ந்து கேபிள் சம்பந்தமாக எதுவித தகவல்களையும் வெளியிடாது ரெலிகொம் மௌனமாகியது அரசாங்கமோ, அமைச்சரோ வாய் திறக்கவில்லை. இந்தக் கேபிள் சீர்குலைவால் ஐம்பது முதல் எண்பது இலட்சம் அமெரிக்க டொலர் நட்ட மேற்பட்டதாக உத்தேசமாக அறிய முடிகிறது. இந்தியா இத் தொகையை இழப்பீடு செய்யாவிடில் அதை எவ்வாறு ரெலிகொம் நிறுவனம் பெறப் போகிறது. எதற்கும் எமது லட்சக்கணக்கான ரெலிகொம் பாவனையாளர்களான மக்கள் இருக்கிறார்கள்தானே. இவை ஒரு புறமிருக்க இந்தியா தற்போது இலங்கையை மேலும் பொருளாதார ரீதியில் திட்டமிட்டுத் திருக முனைகிறது என்பது பகிரங்கம். இந்தியா கபடத்தனமாக இலங்கையின் எண்ணெய் வாயு தொழிற்துறையைப் படிப்படியாக தனது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறது.

எண்ணெய், பெற்றோலியம், வாயு தொழிற்துறையை இந்தியாவின் ஏகபோக ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர ஏற்கனவே திறைசேரிச் செயலாளர் கலாநிதி பீ.பி. ஜயசுந்தர கடந்த யூலை 5ம் திகதி இந்திய நிதிச் செயலாளர் ஸ்ரீ.டீ.சீ. குப்தாவுடன் மேற் கொண்ட உயர்மட்ட பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்டுள்ளமை அதிகம் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

**சிறிகரன்**

இந்தப் பேச்சுவார்த்தையின் போது இந்தியா 15 கோடி டொலர் பெறுமதிக்கான கொள்வனவுக் கடன் வழங்க உடன்பட்டது. அந்தக் கடனைக் கொண்டு இந்தியாவின் பொதுத்துறையில் உள்ள எண்ணெய்க் கம்பனிகளிடமிருந்து விலை ஒப்பந்த அடிப்படையில் பெற்றோலியப் பொருள்களை இலங்கை வாங்கும். இந்தக் கடனை ஏழுவருடத்தில் திருப்பிக்கொடுக்க வேண்டும். ஒரு வருட அவகாச காலமும் வழங்கப்படும். இந்த ஒப்பந்தத்தின் விளைவால் எதிர்காலத்தில் பெட்ரோலியப் பொருள்களின் விலை நிர்ணயம் விநியோகம் என்பவற்றை தீர்மானிப்பது புதுடில்லியாகவே இருக்கப்போகிறது. அதன் மூலம் மசகு எண்ணெய் இறக்குமதி, சத்திகரிப்பு தொழில், விநியோகம் யாவும் பாழ்பட்டுப்போகும். தொழிலாளர்கள் ஊழியர்கள் வீதிக்கு படிப்படியாக விரட்டப்படுவர். பதிலுக்கு இந்திய எண்ணெய்க் கம்பனி (IOC) இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திடம் சமர்ப்பித்த மானியக் கோரிக்கையான 140 கோடி ரூபாவை இலங்கை அரசு வழங்க ஆரம்பிக்கும். ஆனால் ஐ.ஓ.சி.யிடமிருந்து பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு வரவேண்டிய ஆயிரம் கோடி ரூபாவிற்கான மானியத் தொகையை எவ்வாறு அந்தக் கம்பனி கொடுக்கப்போகிறது தொடர்பாக எதுவித உத்தரவாதமும் வழங்கப்படவில்லை என்பது தான் ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது.

இலங்கையில் எண்ணெய், வாயு என்பன இருக்கிறதா என ஆராய்ச்சி செய்வதற்குரிய இடங்களை இந்திய எண்ணெய்-இயற்கை வாயு கம்பனிக்கு வழங்க வேண்டுமென்ற இந்திய அரசின் வற்புறுத்தலை சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என கலாநிதி ஜயசுந்தரா இணக்கம் தெரிவித்துள்ளார். இலங்கையின் எண்ணெய் விநியோகத்தில் மூன்றாவது தரப்பாக விரும்பம் தெரிவித்த பாரத் எண்ணெய் கம்பனி தொடர்பான தீர்மானத்தை விரைவுபடுத்தி மேற்கொள்வதற்கும் ஜயசுந்தரா சம்மதம் தெரிவித்துவிட்டார். மேலும் மிளகு செப்புக் கம்பிகள் என்பன இலங்கையின் உற்பத்திக்கு மேலாக ஏற்றுமதியாவதையும் திரு.குப்தா இலங்கைத்தரப்பிடம் முறையிட்டார். பிறநாடுகள் குறிப்பாக விவசாய உற்பத்திப் பொருள்களை இலங்கையின் ஊடாக ஏற்றுமதி செய்வதைத் தடுப்பதற்கு ஒத்துழைப்புத்தரப்படும் என இந்தியாவிற்கு கலாநிதி ஜயசுந்தரா உறுதிமொழி வழங்கியுள்ளார். வேறுவார்த்தையில் சொல்வதானால் இந்திய ஏற்றுமதிக்குப் போட்டியாக இலங்கை எதையும் செய்யக் கூடாது. இரு நாட்டு சுங்கப்பகுதியினரும் விரைவில் சந்தித்து மேற்கூறப்பட்ட விடயத்தை அமுல் நடத்துவதில் உள்ள சிக்கல்களைத் தீர்த்து வைப்பார்கள் என்றும் முடிவாகி உள்ளது. இலங்கையில் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் ஒப்பந்த அடிப்படையில் எதிர்காலத்தில் பெற்றோலியப் பொருள்களை வாங்க வேண்டுமென கட்டளை இடப்படுமென ஜயசுந்தரா இணங்கி கொண்டார். மேலெழுந்தவாரியாக ஒப்பந்த அடிப்படைக் கொள்வனவு நன்மையானதே. சிக்கல் எங்கெனில் இந்திய அரசுக்குச் சொந்தமான இந்திய எண்ணெய் கம்பனியிடமிருந்தே கொள்வனவு செய்ய வேண்டும் வேறு இந்தியக் கம்பனிகளிடமிருந்து நீண்ட கால ஒப்பந்தத்தில் கொள்வனவு செய்ய முடியாது. இந்தியாவுடன் ஜயசுந்தரா செய்து கொண்ட உடன் படிக்கை பற்றி பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலியா மெதகவுக்கு எதுவுமே தெரியாதெனத் தெரிவித்துள்ளார் என்பது தான் சிந்தனைக்குரியது.

இலங்கையில் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் 300 நிரப்பு விநியோக நிலையங்களில் 100 ஏற்கனவே (L.I.O.C) எல்.ஐ.ஓ.சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் 107 நிரப்பு விநியோக நிலையங்கள் மூன்றாவது வரவுள்ள கம்பனிக்கு கொடுபடவுள்ளது.

ஐ.ஓ.சியும், பெற்றோலியக் கூட்டுத் தாபனமும் மூன்றாந்தரப்பும் தலா 17மூ சில்லறை விநியோகத்தை மேற் கொள்ளும். சுமார் 50மூ சில்லறை விநியோகத்தை 600 முகவர்கள் மேற் கொள்கிறார்கள் ஐ.ஓ.சியும், மூன்றாந்தரப்பும் சேர்ந்து 35மூ விநியோகத்தில் ஈடுபடுவர். எதிர்காலத்தில் இந்த 600 முகவர் நிலையங்களையும் இந்த இரண்டு இந்தியக் கம்பனிகளும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிடும். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் 17மூ விநியோகம் மட்டுமே எஞ்சி இருக்கப் போகிறது.

இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அதன் நாற்பது வருடகால செயற்பாட்டின்போது ஒருவருடத்தவிர அனைத்து வருடகாலத்திலும் இலாபத்திலேயே இயங்கிவந்துள்ளது. மூன்றாந்தரப்பாக பாரத் எண்ணெய்க் கம்பனி புகுந்ததும் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் சந்தை 20மூ குறைந்துவிடும். ஏற்கனவே சீனன் குடா எண்ணெய் குதங்களை இந்திய எண்ணெய்க் கம்பனி- ஐ.ஓ.சீ-உடமை கொண்டுள்ளதால் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மூடும் அபாயத்தில் உள்ளன.

இலங்கையில் பத்தாயிரம் கோடி ரூபா புரள்வையுடைய ஒரே அரசாங்க பொது நிறுவனம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மட்டுமேயாகும்.

திறைசேரியும், ஏனைய அரச நிறுவனங்களும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஆயிரம் கோடிரூபாவைச் நிலுவையாகச் செலுத்த வேண்டியுள்ளது. பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் முழுக்கடனும் 2500 கோடி ரூபாவாகும்.

அதேவேளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திறைசேரிக்கு வரியாவும், தீர்வையாகவும் வருடந்தோறும் 2500 கோடி ரூபாவை கொடுத்து வந்துள்ளது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்தக் கொடுப்பனவு நிறுத்தப்படவோ நிலுவை வளர்க்கப்படவோ இல்லை என்பது கவனத்திற்குரியதாகும்.

2001ம் ஆண்டு திறைசேரி விலை அதிகரிப்பை அங்கிகரிக்காததால் கூட்டுத்தாபனத்திற்கு 1600 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டமை குறிப்பிடத் தக்கது. ஆனால் அதே ஆண்டு திறை சேரி கூட்டுத்தாபனத்திடமிருந்து 2250 கோடி ரூபாவை ஒரு சதமும் பிசகாமல் கறந்தெடுத்தது. 2004ம் ஆண்டிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபத்தில் இயங்கினால் என்ன நட்டத்தில் இயங்கினால் என்ன திறைசேரி 3000 கோடி ரூபாவை பெறப் போகிறது.

ஐ.ஓ.சி., **(I.O.C)** பீ.பி.எல் **(B.P.L)** ஆகிய இரண்டு இந்தியக் கம்பனிகளும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் அவற்றின் முதலீட்டை மீளப் பெற்றுவிடும். இந்தக் கம்பனிகளின் இலாபம் அமெரிக்க டொலர்களில் நாட்டைவிட்டு வெளியேறப் போகிறது. இத்தகைய தனியார் மயத்தின் மூலமான பொருளாதார நாசமும் அதன் ஊடான அரசியல் ஆதிக்கப்பிடியும் இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளின் கைகளுக்கே சென்றடைகின்றன என்ற உண்மையை நாடு மக்கள் நலன் சார்ந்து பேசும் எவரும் நிராகரிக்க மாட்டார்கள். ஆனால் நமது தமிழ்ப் பாராளுமன்ற கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு இவை எந்தளவுக்கு விளங்கும் அல்லது உறைக்கும் என்பதே கேள்வி. ஏனெனில் இந்த இந்திய ஆதிக்கத்தால் பாதிக்கப்படப் போவது இந்நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களே யாவர். தமிழர் தலைமைகளுக்கு மட்டுமன்றி சிங்கள ஆளும்வர்க்கத் தலைமைகளும் இந்திய மேலாதிக்க சுரண்டல் சக்திகளுக்கு முன்னால் மண்டியிட்டே நிற்கிறார்கள் என்பது காணக் கூடியதாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்




# இலங்கைத் தீவை அழிப்பதற்கான சேது சமுத்திரத்திட்டம்

ஏகாதிபத்திய மற்றும் முதலாளித்துவ நாடுகளின் பெரு லாபம் குவிக்கும் உற்பத்தி முறைமையாலும், அபிவிருத்தி பற்றிய மாயைகளாலும் புவிக்கோளத்திற்கே பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதை நாம் கண்டும் உணர்ந்தும் வருகின்றோம். ஓசோன் படை பாதிப்படைந்தமை, இதன் விளைவாக புவி வெப்பம் அதிகரித்து வருகின்றமை, முனைவுகளிலுள்ள பனிக்கட்டிகள், உருகுவதனால், கடல்மட்டம் படிப்படியாக அதிகரித்து வருகின்ற அபாயமும். நீர் மற்றும் வளி மாசடைமுவதனால் சகல உயிரின வாழ்வுக்கும், தாவரச் சூழலுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றன. இத்தகைய அபாயகரமான நிலமைகளிலிருந்து விடுபடுவதற்கும் புவிக்கோளத்தைப் பாதுகாப்பதற்கும் கடுமையான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய சூழலில் மேலும் இரண்டு அபாயகரமான திட்டங்கள், அபிவிருத்தி, போக்குவரத்து வசதி என்ற போர்வையில் முன்மொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவ் இருதிட்டங்களும் அமுல் செய்யப்படுமாயின் இந்திய இலங்கை நாட்டு மக்களும் மற்றும் உயிரின, தாவர சூழலும் பெருமளவு பாதிப்பை உடனடி விளைவுகளாக பெறுவது தவிர்க்கப்பட முடியாததாகிவிடும். நமது சூழலில் நீண்டகாலத்தில் புவிக்கோளத்தில் பல்வேறு அசமநிலைமைகளையும் இவ்வழிவுத் திட்டங்கள் ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் பற்றிய பாதிப்புகள் பற்றிப் பார்ப்பது அவசியமாகிறது.

இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து மன்னார் வளைகுடாவினூடாகப் பாக்கு நீரிணையைக் கடந்து வங்காள விரிகுடாவுக்கு பாரிய கப்பல்கள் சென்று வரக்கூடியதாக கடலுக்கடியில் பாரிய கால்வாய்யொன்றை அமைப்பதே சேது சமுத்திரத்திட்டத்தின் அடிப்படையாகும்.

மேற்படி கால்வாயினூடாக 3000 தொன் எடையுள்ள கப்பல்கள் செல்லக் கூடியதாக 50 கடல் மைல்கள் தூரத்திற்கு இக்கால்வாயை அமைப்பதற்கான ஒப்புதலை இந்திய அமைச்சரவை வழங்கியிருப்பதாக அறிய முடிகின்றது. இத்திட்டத்திற்கான அடிக்கல் அடுத்தவருடம் ஜனவரி முதலாம் திகதி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கினால் நடப்படும் என்பதுவும், இத்திட்டம் 2007ம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்படும் என்பதுவும் இந்திய அரசாங்கம் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் எத்தகைய ஈடுபாட்டைக் கொண்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

பாரிய கப்பல்கள் சென்றுவரக் கூடியதாக 128 மீற்றர் ஆழத்திற்கு கால்வாய் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை கப்பல் கம்பெனிகள் விடுத்துள்ளன. எவ்வாறாயினும் 107 மீற்றர் ஆழமும், 300 மீற்றர் அகலமும் கொண்டதாக கால்வாய் அமைக்கப்படும் என்பதை வரையறுக்கப்பட்ட சேதுசமுத்திர திட்டக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.





படம் 1

சேது சமுத்திரத்திட்டத்திற்கு ரூபா 5000 கோடி ஆரம்பச் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்குமாயின் இந்திய ஆளும் வர்க்கமும், பெரு முதலாளிகளும் எவ்வாறான பலனை எதிர்ப்பார்கள் என்பதை ஓரளவு தீர்மானித்துக் கொள்ள முடியும். அதே வேளையில் தமிழத்திலுள்ள திராவிடக் கட்சிகளான அ.தி.மு.கா, ம.தி.மு.கா ஆகியன ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என போட்டிப் போட்டுக் கொண்டு உரிமை பாராட்டுகின்றன. அதே வேளையில் தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள், சூழலியலாளர்கள் இத்திட்டத்தினால் ஏற்படப் போகும் பாதிப்புகளைச் சுட்டிக்காட்டி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதிலிருந்து மேற்படி திட்டம் தொடர்பாக சாதாரண மக்களுக்கும் ஆளும் இந்துத்துவ முதலாளித்துவ சக்திகளுக்கும் இரு வேறுபட்ட கருத்து நிலை நிலவுகின்றது என்பது தெளிவாகின்றது.

- சிவ. இராஜேந்திரன் -
சிரேஷ்ட விரிவுரையாளர் - ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி

அதேவேளையில் சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கை தீவுக்கு குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு, மன்னார் தீவு மற்றும் வன்னி நிலப்பரப்பின் வடபகுதி ஆகியவற்றுக்கு ஏற்படக் கூடிய புவியியல், சமூகவியல், அரசியல் மற்றும் பொருளாதார எதிர்விளைவுகள் குறித்து இலங்கை அரசாங்கத்திடமிருந்தோ அல்லது வடபகுதி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற அரசியலை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளாலோ தமிழ் ஈழ விடுதலைப்புலிகளாலோ உத்தியோகப் பூர்வமான கருத்துக்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய தொன்றாகும். சுற்றாடல் அக்கறையுடைய சிறு அமைப்புகள், பத்திரிகைகள் இத்திட்டத்தின் சூழலியல் பாதிப்புகள் குறித்து சிற்சில கருத்துக்களை வெளியிட்டுள்ளன. கடந்த 11ம் திகதி (11-09-2004) புதிய ஜனநாயகக் கட்சி தெகிவளை நகரசபை மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த அரசியல் கருத்தரங்கில் இத்திட்டத்தின் பாதிப்புகள் குறித்து பத்தனை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.இராஜேந்திரன் எடுத்துக் காட்டினார். எவ்வாறாயினும் பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய சேது சமுத்திரத்திட்டம் குறித்த விளக்கங்களை இலங்கை, இந்திய மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் ஆள்பல இறைமையில் அரசியல், பொருளாதார, சமூக, இராணுவ அடிப்படையில் மேலாதிக்கம் செலுத்திவரும் இந்தியா எவ்வாறாயினும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சி செய்யும், அதேவேளையில் சூழலியல் குறித்து கிஞ்சித்தும் அக்கறை கொள்ளாத இலங்கை அரசாங்கம் இத்திட்டத்தை ஆதரிப்பதன் மூலம் ஏதேனும் நிதி உதவியைப் பெற முடியுமா என்பதிலேலே அதிக நாட்டம் கொள்ளும் அதேவேளை இது 'வடபகுதி ' விவகாரமாக இருப்பதால் 'பயங்கரவாதிகளுக்கு' இரு கண்களும் போக வேண்டும் என்பதிலேயே ஈடுபாடு காட்டும் என்பதை மேல் கொத்மலைத் திட்டத்தில் காட்டும் அக்கறை நுரைச்சோலை விவகாரம் ஆகியவற்றின் ஊடே வெளிப்படுத்தியிருப்பதை காணலாம்.




படம் 3

### சேதுசமுத்திரத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய சூழலியல் பாதிப்புகள்

### சேது சமுத்திரத் திட்டம் அமுல்படுத்தப்படுமானால்...

1. தீவுப்பகுதிகள் மன்னார், மற்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சூழவுள்ள மணல்பரப்பு, வண்டல் மண் போன்றன வங்காளவிரிகுடா மற்றும் அராபியக் கடலினூடாக அசையும் நீரோட்டங்களால் வேகமாக அள்ளிச் செல்லப்படும். இதன் காரணமாக மேல் குறிப்பிடப்பட்ட பகுதிகள் கடல் நீரில் மூழ்கிவிடும்.

2. முல்லைத்தீவிலிருந்து புத்தளம் வரையில் கீறப்படும் ஒரு கோட்டுக்கு வடக்காக காணப்படும் பகுதி மயோசின் கால சுண்ணாம்பு படைகளைக் கொண்டுள்ளது. (பார்க்க படம் 2) இப்பிரதேசத்தின் வடமேற்கேயும், வடக்கிலும் ஆழமான கால்வாயை வெட்டுவதனால் பாறையமைப்பில் மாற்றங்கள் ஏற்படுவதோடு மழைநீரின் அழுத்தம், மற்றும் அரிப்பு காரணமாக சுண்ணாம்புக்கல் படை நொய்மை அடைவதோடு பாரிய இறக்கங்கள் ஏற்படும்.


3. மழைநீர். சிறுகுளங்கள் தரைக்கீழ் நீர் ஆகியவற்றின் அமுக்கம் வேறுபடுவதனாலும் சமநிலையில் மாற்றம் ஏற்படுவதனாலும் சுண்ணக் கற்களினூடாக கீழிறங்கும் நீர், பாறைப்படையை அரித்து கடலுக்குள் கொண்டு செல்லும்.

4. யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்ப்பரம்பலில் கடல் நீர் கலக்கும் அபாயம் ஏற்கனவே உணரப்பட்டிருக்கின்ற சூழலில் மேற்படி சேது சமுத்திரக் கால்வாய் அமைக்கப்படுமாயின் நிலக்கீழ் நீரோட்டம் மற்றும் மழைநீர் கடல்நீர் அடர்த்தி வேறுபாடு காரணமாக குடாநாட்டு நீர்ப்பரம்பல் மட்டுமன்றி முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், சிலாபம் உள்ளிட்ட வன்னிப் பெருநிலப்பரப்பில் காணப்படும் நீர் உப்பு நீராக மாறும்.

5. மூன்று கோடி ஆண்டுகளாக நிகழ்ந்த இரசாயன மற்றும் உயிரியல் தாவர மாற்றம் காரணமாக உருவாகிக் காணப்படும் செம்மண் மற்றும் ஆற்றுமண் படிப்படியாக கடலுக்குள் அரித்து செல்லப்படும். இதன் காரணமாக யாழ் குடாநாடு, மற்றும் பெருநிலப் பரப்பின் வடபகுதியில் காணப்படும் வளமான மண் அழியும். (பார்க்க படம்3)

6. கல்வியல், மண், நீர் ஆகியவற்றில் ஏற்படும் அசமநிலை காரணமாக இயற்கைத் தாவரப் பரம்பலில் தாக்கம் ஏற்படுவதோடு மண்வளமும் பாதிக்கப்படும்.

7. மேற்படி பாதிப்புகள் இந்தியாவின் தென்கிழக்குப் பகுதியிலும் ஏற்படும். குறிப்பாக காவேரிப்பள்ளம் இராமநாதபுரம் ராமேஸ்வரம் பட்டுக் கோட்டை போன்ற பகுதிகளில் சடுதியான பாதிப்புகள் நிகழும்.




படம் 2

### சேது சமுத்திரத்திட்டத்தால் ஏற்படக்கூடிய உயிரினச் சூழல் பாதிப்புகள்

1. மன்னார், யாழ் குடாநாட்டை சூழவுள்ள கடற்பரப்பு ஆழம் குறைந்தாகக் காணப்படுகின்ற அதே வேளை பேதுறு மற்றும் வோர்ஜ் மன்னார் கடலடித்தள மேடைகள், கடல்வாழ் உயிரினங்களின் பன்மையாக்கத்திற்கும் இருப்பிற்கும் அடிப்படையாக உள்ளன. இதற்கு வடக்கே பாரிய கால்வாய் அமைக்கப்படுவதனால் ஏற்படும் கடலடித்தள மாற்றங்கள் இவ்வுயிரினச் சூழலை மாற்றியமைக்கும். இதன் விளைவாக கடல்வளங்கள் அற்றுப் போகும்.

2. வங்காள விரிகுடா மற்றும் அரேபியக்கடல் பகுதியிலிருந்து வரக்கூடிய ஜெலிமீன்கள் கடல் வளங்களில் எதிரிடையான விளைவுகளை ஏற்படுத்தும்.

3. மணல் ஆற்றுமண் ஆகியவற்றுடன் கடல் தாவரங்கள் பிலாங்டன் போன்றவையும் அடித்து செல்லப்படுவதால் முருகைக் கற்களின் ஆக்கம் தடைப்படும். இருக்கின்ற முருகைக் கற்பார் சிதைவடைந்து அழியும்.

4. பாரிய கப்பல்களிலிருந்து கசியும் எண்ணெய், மற்றும் அதிர்வு காரணமாக நுண்ணுயிர்கள் சிறுமீன்கள் அழியும்.

5. மேற்படி விளைவுகளால் பருவத்தில் இப்பிரதேசத்திற்கு வரும் கொக்கு, நாரை போன்ற உயிரினங்கள் இடம் பெயரும்.

### இத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய சமூகப் பொருளாதார விளைவுகள்

1. மன்னார் தீவுப்பகுதி யாழ் குடா நாட்டு மீனவர்கள் பாதிப்படைவார்கள். யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்ததைப் போல தொழில் நிமித்தம் இப்பிரதேசத்தையிட்டு நகர்ந்து செல்ல வேண்டி ஏற்படும்.

2. யாழ்குடாநாட்டு விவசாயம் பாதிப்படைவதால் இம்மக்களும் இடம் பெயர நேரிடும். இதன் காரணமாக அங்குள்ள பொதுநிறுவனங்கள், தனியார் நிறுவனங்களும் தெற்கு நோக்கி இடம் பெயர்வது தவிர்க்க முடியாததாகி விடும்.

3. தற்போது வாரத்துக்கு மூன்று நாட்கள் மன்னார் மற்றும் வடபகுதி கடலில் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் இந்திய கடற்படையின் உதவியோடு இவ்வளங்கள் அழியும் வரை தொழிலில் ஈடுபடுவர்.

4. மன்னார் குடா மற்றும் குடா நாட்டிற்கு மேற்கே காணப்படும் எண்ணெய் வளங்கள் கசிவடைந்து கடல் நீருடன் கலக்கும் இதைவிட சேதுசமுத்திட்டம் அமுலாக்கப்படும்போது இந்திய கடற்படை இப்பிரதேசத்தில் நிரந்தரமான தளங்களை அமைக்க முற்படும் இதனால் இராணுவ தலையீடுகள், எல்லைப் பிரச்சினை, ஆக்கிரமிப்பு போன்ற அரசியல் இராணுவ பாதிப்புகளையும் வட புலத்து மக்கள் உட்பட இலங்கை மக்கள் அனைவரும் எதிர்நோக்க நேரிடும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கைலாசபதி மீதான அவதூறு பரப்புரைக்கு

## என்.கே.ரகுநாதன் பதில் சொல்கிறார்

முன்னோடி முற்போக்கு எழுத்தாளர் என்.கே.ரகுநாதன் "நிலவிலே பேசுவோம்'' என்ற சிறுகதை சாதியத்துக்கு எதிரான வலுவான ஒரு சாட்டையடி. அக்கதை நூல்வடிவு பெற்ற பின்பு அக்கதையில் குறிப்பிடப்படும் சாதி வெறியர் கைலாசபதி என்ற வதந்தி எஸ்.பொன்னுத்துரையால் முதலில் பரப்பப்பட்டு வந்தது. இக்கதையைப் பரப்ப மு. பொன்னம்பலம் முதல் அ.யேசுராசா வரையி லானவர்கள் கடுமையாக முயன்று வந்தார்கள். அண்மையில் பொன்னுத்துரையின் நூலுக்கு எழுதிய முன்னுரையில் கடைந் தெடுத்த மாக்ஸியவிரோதியான வெங்கட் சாமிநாதன் என்ற தமிழ் நாட்டு இலக்கிய உதிரி எழுதி யிருந்தார். ரகுநாதன் இக்கதை தொடங்கிய போதே இவ்வாறு கதை பரப்ப வேண்டாம் என்று தன்னிடம் விசாரித்தவர்களிடம் சொன்ன தாலும் சாமிநாதன் எழுதியது பற்றி அறிந்த பின்பு மீண்டும் உண்மை யைத் தெளிவுபடுத்துவது நல்லது என்று தினக்குரலில் 'பனுவல்' என்ற பகுதிக்கு எழுதிய கடிதம் 12-09-04 வார இதழில் வெளியானது.

டொமினிக் ஜீவா முதல் தமிழகத்து அ.மார்க்ஸ் போன்றவர்கள் மறைமுகமாக கைலாசபதி மீது சுமத்த முயன்றுவந்த சாதிய உணர்வுக் குற்றச் சாட்டுக்களையெல்லாம் தகர்த்து எறியும் விதமாக கைலாசபதியின் நடத்தைப்பற்றிய தனது தனிப்பட்ட அனுபவத்தையும் ரகுநாதன் எழுதியிருந்தார்.

ரகுநாதன் தனது கடிதத்தில் குறிப்பிட்ட முக்கிய ஒரு விடயம் கவனத்திற்குரியது. "கைலாசபதியை அவருடைய வீட்டில் சந்தித்தது 1962இல். என்னுடைய நிலவிலே பேசுவோம் சிறுகதைத் தொகுதி வெளிவந்ததும் 1962இல் தான். ஆனால் அந்தக் கதை 1951இல் சுதந்திரனில் பிரசுரமானது. சிறுகதைத் தொகுதியில் வெளிவந்த கதைகளினடியில் கதை பிரசுரமான ஆண்டுகளை இணைத்திருக் கிறேன். நிலவிலே பேசுவோம் கதையினடியில் 1951 என்று பிரசுரமாகி யுள்ளது. 40 ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வரும் ஒரு அபத்தப் பிரசாரத்திற்கு முத்தாய்ப்பு வைக்கப் படுகிறது'' இவ்வாறு என்.கே. ரகுநாதன் தெளிவுபடுத்தியுள்ளார்.

நெஞ்சில் கொஞ்ச நஞ்சமாவது நேர்மையிருந்தால், பொய்க் குற்றச்சாட்டைப் பரப்பி வந்த இந்த அப்பட்டமான மாக்ஸிய விரோதிகள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டு பகிரங்கமாக மன்னிப்புக் கோருவார்களா? அல்லது வழமைபோல தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று முரண்டு பிடிப்பார்களா?

இந்தக்குரல் ஒருபுறமிருக்க கைலாசபதி பற்றிய சாதிய அவதூறுகட்கு வலுவூட்டுகிற விதமாகக் கதை பரப்பி வந்தவரான டொமினிக் ஜீவா தன்னுடைய சுயபுராணத்தின் நடுவே தனது தவறுக்கு வருத்தம் தெரிவிப்பாரா? அது நடக்கவே நடக்காது. ஏனென்றால் இப்போது முற்போக்கு வேடதாரிகள் எல்லாரும் சுயலாபத்துக்காக முன்னாள் எதிரிகளோடு சமரசம் செய்வதில் அல்லவா கண்ணாகவும் கருத்தாகவும் இருக்கிறார்கள். பழைய நண்பர்கள் யார் என்ற நினைவே இவர்களிற் பலருக்கு இல்லை.

## என் கவிதை எங்கே போகிறது?

*பசித்திருக்கும் என் கவிதை*
*பகலவனை ஊடறுத்து*
*செவ்வாய்க்குச் செல்ல நினைக்கிறது*
*ஆனால் தாய் நிலம் படும் வேதனைகளில்*
*வேர்த்துப் போய் தேடல் தொடங்கியது*
*என் கவிதை.*

*தெருக்களின் தேசங்களில்*
*கடைத்தெரு இருப்பிடங்களில்*
*நெஞ்சும் கறையாகி நேசமும் கறையாகி*
*அசுத்தக் குளத்தில் அமிழ்த்தப்பட்டவர்களாய்*
*கஞ்சிக்கும் கூழுக்கும்*
*கடைத்தெருவெல்லாம் கையேந்தி*
*கனவான்களின் கடுகடுப்பிலும்*
*பிள்ளைகளை.......*
*பிச்சைப் பாத்திரங்களாக ஏந்தி*
*சந்திகள் தோறும் சந்ததி நடத்தும்*
*ஏழைகளைத் தேடி ......*

*மக்கள் வாக்குகளை வாங்கி*
*பொய் வாக்குறுதிகளை வாடிக்கையாக்கி*
*பாராளுமன்றத்தை கலவரமாக்கி*
*வாதங்களையே வாழ்க்கையாக்கி*
*நாட்டின் நலன் மறந்து*
*நாசத்துக்கே நாக்குச் சுழற்றும்*
*அழிவுக்குத் துணை போகும்*
*அரசியல்வாதிகளைத் தேடி..........*

*போர் மூண்டது*
*அதை நாம் வெறுத்தோம்*
*போர் முடிந்தது*
*அதை நாம் வரவேற்றோம்*
*தொடர்கிறது சமாதானம்*
*அதை நாம் ஆதரிக்கிறோம்*
*சடங்கே இன்னும் முடியவில்லை*
*ஆயுதங்களை இப்போதும் பயன்படுத்தும்*
*அயோக்கியர்களைத் தேடி....*

*சாதி என்பது*
*மனிதர்கள் உருவாக்கிய அகராதி*
*சாதிகளை எங்கே தேடமுடியும்*
*பணத்திலும் இல்லை*
*பரீட்சையிலும் இல்லை*
*சாதிகள் இல்லையென்ற*
*பாரதியின் சொல்லுக்கே சமாதி செய்யும்*
*தனவந்தர்களைத் தேடி ....*

*ரணப்பட்ட என் கவிதை*
*பேனாக்களில் ஏறி*
*பக்தாத் நோக்கிப் பயணிக்கிறது*
*ஆதிக்கப் போக்கை நாம்*
*எழுத்தால்தான் வெறுக்க முடியும்*
*ஆயுதங்களால் எதிர்க்க முடியும்*
*அமெரிக்க அணுவின்*
*ஆதிக்கங்களைத் தேடி......*

*காதலை காதலியுங்கள்*
*காத(லி) வணை(யை) யோ காதலிக்காதீர்கள்*
*அன்புக்கடலின் ஆழம் யாரும் கண்டதில்லை*
*தாடிக்குப் பின் தாவணியையும்*
*கண்ணீருக்குப் பின் கனவுகளையும் வைத்து*
*மௌன யாத்திரை செல்லும்*
*காதலர்களைத் தேடி.....*

*என் கவிதையின் தேடல்*
*இன்னும் முடியவில்லை தொடரும்*
*உலகம் சுற்றும்*
*முடிவில் மூர்ச்சையாகி*
*என்னிடம் திரும்பும் - அப்போது*
*இந்த உலகம் மாறிக் கொண்டிருக்கும்*

**- எஸ். எம். ஹசீர் -**
வவுனியா கல்வியியல் கல்லூரி

பெ.சந்திரசேகரம்..
4ம் பக்க தொடர்ச்சி.

1994 லிருந்து பாராளுமன்ற உறுப்பினா ராக இருந்து வருகிறார். அவர் பிரதியமைச்சராகவும், அமைச்சராகவும் இருந்தவர்.

இப்போது பாராளுமன்ற உறுப்பின ராக எதிர்கட்சி வரிசையில் இருந்து கொண்டு ஊடகங்களினுடாக தெரிவித்துவரும் கருத்துக்களை பிரதியமைச்சராகவும் அமைச் சராகவும் இருந்த போது கூற மறந்ததேன்? 1995 ஆண்டு அவர் பிரதியமைச்சராக இருந்தபோது சம்பள உயர்வு கோரி தோட்டத் தொழிலாளார்கள் நடத்திய போராட்டத்தை காட்டிக்கொடுத்த தேன்? இரண்டு வருடங்களுக்கு முன்பு அட்டன் மல்லிகைப்பூ சந்தியில் இ.தொ.கா. நடத்திய சத்தியாக் கிரகப் போராட்டத்தில் இணைந்து கொண்டு ஆறுமுகம் தொண்ட மானுடன் சேர்ந்து அப் போராட்டத் தையும் காட்டிக் கொடுத்ததேன்?

மலையகத் தமிழ் தேசிய இனத்தின் இருப்பிற்கும் சூழலுக்கும் பெரும் ஆபத்தான மேல்கொத்மலை நீர்த் தேக்கத் திட்டத்தை நடைமுறைப் படுத்த ஐ.தே.க. அரசாங்கத்திற்கு ஆதரவளித்ததேன்? இப்போதும் கூட அத்திட்டத்திற்கு ஆதரவாகவே இருந்து வருகிறார்.

தோட்டக் கம்பெனிகளுக்கு மிகவும் அனுசரனையான முதலாளித்துவ ஐ.தே.கட்சியின் கூட்டாளியாக இருந்து கொண்டு தோட்டத் தொழிலாளிகளுக்கு நியாயமான சம்பள உயர்வை கோரி உண்மை யான போராட்டத்தை அவரால் எப்படி நடத்த முடியும்? தொழிற்சங்க பாராளுமன்ற வாதிகளின் பம்மாத் துக்கள், மோசடிகள் ஊழல்கள் என்ப வற்றுக்கு அவர் அப்பாற்பட்டவராக இருப்பதாகத் தன்னை நீருபிக்க முடியுமா?

அவ்வாறிருக்கும்போது ஏன் இந்த வீராவேசம்? உணர்ச்சிமிக்க வசனங்கள்? எல்லாம் மக்களை ஏமாற்றும் வித்தைகள் தான். மலையக மக்களும் தோட்டத் தொழி லாளார்களும் சந்திர சேகரத்தின் பம்மாத்துக்களைக் கண்டு ஏமாந்த ஒரு காலம் இருந்தது. அது கடந்த காலமேயாகும்.

*"சுட்டி நீளும் ஆயிரம் விரல்களைப்*
*புருவம் நெரித்து நிதானமாய் எதிர்ப்பேன்*
*தலையை வணங்கிப் பணியுங்காளையாய்க்*
*குழந்தைகட்குப் பணிபல செய்வேன்"*

- லுஷுன் -

## மக்கள் கலை-இலக்கியத்திற்கான யெனான் கலை-இலக்கியக் கருத்தரங்கில்

# மாஓ சேதுங்

## ஆற்றிய உரைகளின் முக்கியத்துவம்

**- சி. சிவசேகரம் -**

மாஓவின் நோக்கில், சமுதாயத்தில் மனித இருப்பின் எந்தவொரு அம்சத்துக்கும் விலக்கின்றி வர்க்கப் பண்பு உண்டு. இவ்வாறு, வர்க்க சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சமும் வரக்கப் போராட்டத்தை அவசியமாகப் பிரதிபலிக்கிறது. அரச அதிகாரத்தைப் கைப்பற்றும் நோக்கில் வர்க்க முரண்பாட்டைத் தீர்க்க ஒருவர் கைக்கொள்ளும் அணுகுமுறை சமூக வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் பிரதிபலிக்கிறது. இவ்வாறு, புரட்சிகரப் போராட்டத்திற்குச் செல்லுபடியாகும் நிலைப்பாட்டை ஏற்று நிற்பது, ஐக்கிய முன்னணி, வெகுசனப் பாதை என்பன பாட்டாளி வர்க்க இலக்கியத்தையும் கலையையும் முன்னெடுக்க முக்கியமானவை. இலக்கியத்திலும் கலையிலும் வெகுசனப்பாதை என்ற கருத்தாக்கத்தை எப்படி விருத்தி செய்து முன்னெடுப்பது என்பதே எம்மை எதிர் நோக்குங் கேள்வியாகும். இங்கு, முதலில் வெகுசனப்பாதையின் முக்கியத்தை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

வெகுசனப்பாதை என்பது மாஓவின் அரசியற் சிந்தனைக்கு மையமானது. இலக்கியமுங்கலையும் உட்பட வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் செயலூக்கத்துடன் பங்கு பற்றுமாறு அவர் மக்களை ஊக்குவித்தார். இலக்கியத்திலும் கலையிலும் வெகுசனப் பாதையை முன்னெடுக்க, மக்கள் முதலில் உற்சாகம் பெற வேண்டும். எனவே, மக்களுக்காகப் படைப்பது முதலாவது காலடி. தனிநபர்வாதத்தை எதிர்ப்பதும் கூட்டாகச் செயற்படுவதும் புரட்சிகர இலக்கியத்துக்கும் கலைக்கும் பயனுள்ளவை. தமது படைப்புக்களைத் தமது தனிப்பட்ட சாதனைகளாக இல்லாமல், சமூகத்துக்குத் தமது பங்களிப்பாகக் காண்பதற்கு எழுத்தாளர்களும் கலைஞர்களும் பழக வேண்டும். முற்போக்கானதும் வெகுசனங்கட்கு நன்மையானதும் எங்கிருந்து வந்தாலும், அதைக் கொண்டாடும் ஆற்றல் கூட்டாகப் பணியாற்றுவதன் மூலம் இயலுமாகிறது.

எல்லாக் கலைவடிவங்களிலும், அரங்கே கூட்டுப் பணிக்கும் வெகுசனப் பங்குபற்றுதலுக்கும் அதிக வாய்ப்பளிக்கிறது. இவ்விடயத்திற் சர்வதேச மட்டத்தில், பேர்ற்றோல்ற் ப்றெஹ்ற், ஒகஸ்ற்றோ போல், பாதல் சர்க்கார் ஆகியோர் உட்படப் பலருங் காட்டிய திசைவழியே மிகவும் சாதிக்கப்பட்டுள்ளது.

புரட்சிக்கு முந்திய காலகட்டத்தில் மக்கள் இலக்கியமும் கலையும் மக்களிடமிருந்து பெறுவதையும் மக்களுக்காகப் படைப்பதையுங் கொண்டது. இக்காலகட்டத்தில் கூட்டான பணிகளும் தனிமனித முக்கியத்துவத்திலிருந்து சற்றே பெரிய குழுக்களின் முக்கியத்துவத்தை நோக்கிய பெயர்ச்சியும் நடக்கின்றன. எழுத்தாளர்களுடனும் கலைஞர்களுடனும் ஆக்கங்கள் பற்றி வெகுசனங்கள் கலந்துரையாடுவதும் வெகுசனங்களுக்கும் ஆக்க இலக்கியவாதிகட்கும் கலைஞர்கட்குமிடையிலான கலந்தாலோசனைகளும் என்றவாறு பலவிதமாக மக்கள் பங்குபற்றுதலாக இது விரிவுபடுத்தப்படலாம். விமர்சனக் கருத்துக்களையெல்லாம் நிபுணர்களிடம் விடுவதற்கு மாறாக, விமர்சனஞ் செய்யுமாறு வெகுசனங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

மக்களுக்காகப் படைப்பதும் கூட்டாகத் தயாரிப்பதும் படைப்புக்களை வெகுசனங்களின் விமர்சன மதிப்பீட்டுக்காக முன்வைப்பதும் மக்கள் இலக்கியத்தையும் கலையையும் நோக்கிய ஆக்கமான நகர்வுகள். எனினும் அவை 'மக்களுக்கான' இலக்கியமும் கலையுமாகும். சிறிதளவுக்கு மக்களது இலக்கியமும் கலையுமாகும். எனினும் கலைஞருக்கும் வெகுசனங்களுக்கு மிடையே ஒரு இடைவெளி இருக்கும். கலைஞர் தயாரிப்பவராகவும் வெகுசனங்கள் நுகர்வோராயும் இருப்பர்.

சனத்தொகையில் ஒரு சிறு பகுதியினரே கலைத்துவப்படைப்பாற்றல் கொண்டிருக்கக் காரணம் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்ட சிலர் என்பதல்ல. மாறாக ஏகப்பெரும்பான்மையானோரின் ஆக்கத் திறமை விடுவிக்கப்படவில்லை என்பதே காரணம். வெகுசனங்களது இந்தப் பிரமாண்டமான படைப்பாற்றல் விடுக்கப்படுவதற்கு நீண்ட காலச் சமூக மாற்றம் தேவை. மாக்ஸிய-லெனினியவாதிகள் காண விழையுங் கம்யூனிச சமூகத்திலேயே அது நிறைவு பெறும். அதற்கிடையே பாட்டாளி வர்க்கத் தலைமையிலான சோஷலிச மாற்றம் தனிமனித முயற்சியைவிட மேலாகக் கூட்டுமுயற்சிகள் மீது அழுத்தத்தை இயலுமாக்கும். சோஷலிச எழுத்தாளர்களும் ஓவியர்களும் கூட்டான எழுத்து, ஓவிய முயற்சிகளை வெற்றிகரமாக முயன்றுள்ளனர் என்பது இங்கு கூறத்தக்கது. கூட்டுப்பணி என்பது தனி மனிதரை நசுக்குகிற நோக்குடையதல்ல. மாறாக முதலாளியத் தனிமனிதவாதப் போக்குகளை வென்று தனி மனிதருக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவை ஆக்கமாக மீள வரையறுக்கப்படுவதாகும்.

சுயநலமே நியதி எனவும் விருத்தியின் இயக்கச் சக்தி எனவும் ஏற்குமாறு மனித சமூகம் பக்குவப்படுத்தப்படுவது உண்மை. கடந்த மூன்று தசாப்த கால உலகமயமாக்கலின்போது இது முக்கியமான உண்மை. அதை எதிர்ப்பது சோஷலிசவாதிகளது கடமை. ஏகாதிபத்தியத்துக்கும் உலகமயமாக்கலுக்கும் எதிரான சண்டை ஒவ்வொரு முனையிலும் நடக்க வேண்டும். வெகுசனப் பாதையை விட முன்னே செல்லும் வழியேதுமில்லை. அரசியல், சித்தாந்தத் தலைமைகள் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதிகளினின்று வரும் அதேவேளை, வெகுசனங்களின் பங்கை வலுப்படுத்துவது அத்தியாவசியம். வேறெந்த வகையையும் விடச் சிறப்பாகப் போராட்டத்தின் மூலமே மக்கள் அதிகம் கற்கின்றனர். இலக்கியத்திலும் கலையிலும் அதையொத்த ஒரு அணுகுமுறை இயலுமானதும் தேவையானதுமாகும்.

மக்களின் ஆக்கத் திறனை வெளிக்கொண்டுவர சோஷலிஸ மாற்றத்தின் பின்னைய கட்டங்கள் வரை காத்திருக்க வேண்டியதில்லை. இந்த ஆக்கத் திறனின் விடுவிக்கக்கூடிய ஒவ்வொரு அம்சமும், புரட்சிகர இலக்கியமும் கலையும் மேலும் வலுவான வெகுசனப் பண்பையடையுமாறு, விடுவிக்கப்பட வேண்டும். இப்போது முதலாளிய நலிவின் ஆதிக்கத்துக்குட்பட்டுள்ள இலக்கியமும் கலையும் என்ற போர் முனையில் போர் வீரர்களாக வெகுசனங்களை மாற்றுமாறு புரட்சிகர எழுத்தாளர்களும் கலைஞர்களும் வெகுசனப் பாதையைப் பாவிப்பது அவர்கள் முன்னாலுள்ள சவாலாகும். அரசியற் போராட்டத்துக்காக மாஓ வன்மையாகப் பரிந்துரைத்த வெகுசனப் பாதையை, யெனானில் மாஓ தனது யெனான் உரைகளிற் கூறிய தேர்வு முறைகளுடன் வெகுசனப் பாதையை இணைப்பதன் மூலம் வெகுசனப் பாதை ஆக்கமான முறையில் இலக்கியத்துக்கும் கலைக்கும் பிரயோகிக்கப்படலாம்.

**முற்றும்.**

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தமிழகத் தலைமைகள் பற்றிய தவறான கண்ணோட்டம்

## ஈழத்தமிழர்களிடமிருந்து அகல வேண்டும்.

இந்திய அரசு பற்றிய மயக்கம் தமிழ் மக்களிடையே இல்லாவிட்டாலும், இந்தியா பற்றிய நம்பிக்கையை உருவாக்குவதற்கு மிகவும் கடுமையான முயற்சிகள் தமிழ்ப் பாராளுமன்றத் தலைமைகளால் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. தங்களுக்குள் எவ்வளவு தூரம் முரண்பட்டாலும் "இந்தியா தமிழ் மக்களுக்கு என்றுமே துரோகம் செய்யாது" என்ற வாசகத்தைக் கிளிப்பிள்ளைகள் போல ஒப்பிப்பதற்கு மட்டும் தவறுவதில்லை. இவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதற்குப் பல விளக்கங்கள் இருந்தாலும் 'செஞ்சோற்றுக்கடன்' அவற்றில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. தங்கள் குடும்பங்களை இன்னமும் தமிழகத்திலே வைத்திருக்கிறவர்களைத் தமிழ் மக்களின் நலன்கட்குக் காவலர்களாக வைத்திருக்கும் அவலம் தொடரும் வரை இந்தியத் தூதரகமே இவர்களது இரண்டாவது தலைமையாக இருப்பது தவிர்க்க இயலாதது தான்.

இந்த மயக்கத்தை விட ஆபத்தான ஒரு மயக்கம் தமிழ் மக்களிடையே உள்ளது. இதை ஊட்டி வளர்ப்பதில் நமது ஊடகங்களுக்குப் பெரியதொரு பங்கு உண்டு. இலங்கைத் தமிழர் பிரச்சினை 1983ம் ஆண்டின் இனவாத வன்முறையை அடுத்துத் தமிழகத்தில் உருவான அனுதாப அலை காரணமாகவே ஈழ விடுதலை பற்றிய பல்வேறு நிலைப் பாடுகள் தமிழகத்தில் மேற்கொள்ளப் பட்டன.

தீவிர இந்துத்துவ வலதுசாரிச் சக்திகள் எப்போதும் தமிழ்த் தேசியத்தின் எதிரிகளாகவே இருந்து வந்துள்ளார்கள். காங்கிரஸ், அகில இந்திய அரசியற்கட்சி என்பதுடன் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நலன்களை வலியுறுத்துகிற கட்சியுமாகும். எனவே ஈழத் தமிழர் பற்றிய நிலைப்பாடு இந்தியாவின் 'தேசிய' நலன்களை மனத்திற்கொண்டே எடுக்கப்பட்டு வந்தது.

திராவிட இயக்கத்திலிருந்து கிளைத்த தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., ஆகிய கட்சிகளும் திராவிட இயக்கப் பாரம்பரியத்திலிருந்து தோன்றிச் சாதிய அரசியல் மீது கட்டியெழுப்பப்பட்ட பா.ம.க.வும் இன்னும் தலித்திய கட்சிகள் எனப்படுகிற கட்சிகளும் தமிழ்த் தேசியவாதப் பாதிப்புக்கு உட்பட்ட கட்சிகள் தாம். ஆயினும் இந்தத் தமிழ்த் தேசியவாதம் குறிப்பிட்ட வர்க்க நலன்களைத் தாண்டிச் செல்லக்கூடிய ஒன்றாக இருந்ததில்லை. பாராளுமன்ற அரசியலின் தேவைகள் சில அரசியல் சுலோகங்களை அவசியமாக்கினாலும் உண்மையான அரசியல் நடைமுறை அதிகார வர்க்க நலன்களையொட்டியே அமைகிறது.

திராவிட இயக்கத்தின் இன உணர்வு, மொழிப்பற்று, பார்ப்பனிய எதிர்ப்பு, பகுத்தறிவுவாதம் போன்றவை தேர்தல் அரசியலுக்கு ஏற்றபடி பயன்பட்டனவே ஒழிய திராவிட இயக்கத்திலிருந்து பாராளுமன்ற அரசியலுக்கு வந்த எந்தவொரு கட்சியும் இந்தி- இந்து அரசியல் வாதிகளுடனும் பார்ப்பனியத்துடனும் சமரசம் செய்யத் தயங்கியதில்லை. தி.மு.க. பகுத்தறிவுவாதம் அண்ணாதுரை உயிரோடு இருந்தபோதே புதைகுழிக்கு அனுப்பப்பட்டு விட்டது.

அண்ணாதுரை உயிரோடு இருந்த போது ஏற்பட்ட பிளவு திராவிடநாடு கோரிக்கையை நிராகரித்து முழுமையான மாநில சுயாட்சியை வற்புறுத்த வேண்டும் என்று வாதிட்ட, ஈ.வெ.கி. சம்பத் தலைமையால் உருவாக்கப்பட்டது. பின்னர் சம்பத்தும் அவருடன் சேர்ந்து வெளியேறிய கண்ணதாசன் உட்பட்ட பலரும் காங்கிரஸில் சங்கமமாயினர். எந்தக் கொள்கைத் துரோகத்துக்காக சம்பத் தி.மு.க.வை விட்டு விலக வேண்டி வந்ததோ அதே துரோகம் அண்ணாதுரையால் செய்யப்பட்டது. 1962ம் ஆண்டு நேரு

**- நரசிம்மா -**

ஆட்சி பிரிவினைத் தடைச்சட்டத்தைப் புகுத்தியபோது, அதை எதிர்த்துப் போராடிப் பாராளுமன்ற, சட்டமன்றப் பதவிகளைத் துறப்பதற்கு மாறாக, திராவிட நாடு என்ற கோரிக்கையையே துறந்த பெருமை தி.மு.க.வினது.

"வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது", "அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு" என்பனவெல்லாம் வெற்றுவார்த்தைகளாகிக் காற்றுடன் கலந்தன. தி.மு.க. அரசியல் பிரதேசவாத அரசியலாக வலுப்பெற்றதன் விளைவாகத் தமிழகச் சட்டமன்றத்தில் 1967ல் அதிகாரத்தைப்பிடித்தது. அதன் பின்பு தி.மு.க.வில் ஏற்பட்ட பிளவுகள் யாவுமே தனிமனித அதிகாரப் போட்டியையும் பல்வேறு அதிகாரக் குழுக்களின் மோதலையுமே மையப்படுத்தின.

எந்தெந்த வர்க்கங்களிடையே முறையே தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., ஆகியன செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதை வைத்து அவற்றின் வர்க்க அடிப்படையைத் தீர்மானிப்பது கடினம். ஒரு கட்சியிலிருந்து இன்னொன்றுக்கு ஒருவரால் தாவ முடிகிறது என்பதைக் கவனித்தால் இக் கட்சிகளிடையே கொள்கையளவில் அடிப்படையான வேறுபாடு இல்லை என அறியலாம். ஆயினும் தந்திரோபாயமாக அவை வேறுபட்ட நிலைப்பாடுகளை மேற்கொள்ளலாம். இதை விளங்கிக் கொண்டால் ஈழத் தமிழர் பற்றித் தமிழக அரசியற் கட்சிகளது, குறிப்பாக தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., ப.ம.க., இன்னும் தலித்தியக் கட்சிகளது நிலைப்பாட்டை விளங்கிக் கொள்வது எளிதாகும்.

1980களில் இந்தியப் படைகள் இலங்கைக்கு அனுப்பப்படும்வரை இலங்கைத் தமிழரின் பிரச்சினை தமிழக அரசியலில் ஒரு முக்கிய பங்கு வகித்தது. தமிழ் இன உணர்வை அடையாளப்படுத்துகிற ஒரு விடயமாக தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் முன்னிறுத்தப்பட்டது. யாருமே தமிழினத் துரோகிகளாக வெளிவெளியாகத் தம்மை அடையாளங்காண விரும்பாத நிலையில் தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் ஆளுக்கு ஒரு விடுதலை இயக்கத்தை யாவது தத்து எடுக்க விரும்பியதில் வியப்பில்லை. எனினும் ஈழப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை தமிழீழ விடுதலை இயக்கங்கள் மிகையாகவே மதிப்பிட்டிருந்தன. இதன் விளைவாகத் தமிழகத்தில் அவற்றின் அத்துமீறல்கள் பற்றி இங்கு விபரிக்க இடம் போதாது. எனினும் ஈழத்தமிழர் பற்றிய அனுதாப உணர்வை மழுங்கடிப்பதற்கு அவர்கள் ஆற்றிய பணி பெரிது.

எவ்வாறாயினும், இலங்கைத் தமிழர் பிரச்சினையை மையமாக வைத்துத் தமிழகத்தின் எந்த அரசியல் கட்சியும் அரசியல் நடத்துமளவுக்குத் தமிழகத்து மக்களுக்கு வேறு பிரச்சினைகளே இல்லை என்று நம்பியவர்கள் இருந்தார்கள். அந்தப் பாரம்பரியமே இன்னமும் தமிழ் இயக்கம் பற்றிய மயக்கங்களுக்கு ஆதாரமாக உள்ளது.

இன்றுங்கூட, கருணாநிதி ஈழ விடுதலைக்கு ஆதரவு தருவார் என்று நம்புகிறவர்கள் இருக்கிறார்கள். எம்.ஜி. ராமச்சந்திரன் உயிரோடு இருந்திருந்தால் அ.தி.மு.க. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டிருக்கும் என்று வாதிடுவோர் இருக்கிறார்கள். எல்லாருக்கும் மேலாக வை. கோபாலசாமி மீதும் அவர் காரணமாக ம.தி.மு.க. மீதும் நம்பிக்கையுடையோர் உள்ளனர். ஆனால் விடுதலைப் புலிகட்கு ஆதரவாகப் பேசியதற்காகக் கருணாநிதியால் தி.மு.க.விலிருந்து விரட்டப்பட்டவர் என்பதற்கும் மேலாகவும் ஜெயலலிதாவால் பொடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப் பட்டவர் என்பதற்கும் அப்பால் கோபாலசாமி ஈழத்தமிழ் மக்களுக்காகச் சாதித்தது என்ன?

கருணாநிதியோ ஜெயலலிதாவோ கோபாலசாமியைக் கடுமையாக நடத்தக் காரணம் "விடுதலைப் புலிகட்கு ஆதரவான' அவரது நிலைப்பாடல்ல. தங்களது அரசியல் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கும் கோபாலசாமிக்கும் இருந்த 'நெருக்கம்' பயன்பட்டதேயொழிய, விடுதலைப் புலிகட்கு மாறானவராக கோபாலசாமி இருந்திருந்தாலும் கருணாநிதி அவரை தி.மு.க.வுக்குள் வளர விட்டிருக்கமாட்டார். ஜெயலலிதாவைப் பொறுத்தவரை, அவருடைய அதிகாரத்துக்குக் குறுக்காக நிற்கிற எவரும் அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கலாம்.

தி.மு.க., ம.தி.மு.க. ஆதரவுடன் மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த போது பல ஈழத் தமிழ்த் தேசியவாதிகள் உள்ளூர மகிழ்ந்தனர். ஜோர்ஜ் பெர்னான்டெஸ், சிவசேனா தலைவர் பால் தக்கரே, கோபாலசாமி போன்றவர்கள் எல்லாரும் இருக்கும் போது ஈழத் தமிழருக்கு ஆதரவாகவே இந்திய அரசாங்கம் நடக்கும் என்று பலர் நம்பினார்கள். விடுதலைப் புலிகள் மீதான தடை விரைவில் நீங்கலாம் என்ற ஊகம் பலவாறாக ஈழத் தமிழ் ஏடுகளில் வெளியானது.

ஆனால் நடந்ததென்ன? விடுதலைப் புலிகள் மீதான தடை திரும்பத் திரும்ப நீடிக்கப்பட்டு வந்தது. 2000 மே முற்பகுதியில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைப் பிடிக்கக்கூடும் என்ற சூழ்நிலையில் இந்தியக் குறுக்கீடு நிகழுமா என்ற கேள்வி எழுந்தபோது,

தொடர்ச்சி 12ம் பக்கம்

### தேசிய இனப்பிரச்ச..

3ம் பக்க தொடர்ச்சி

லெனின் ரஷ்யப் புரட்சி பற்றிப் பேசுகையில் முதலாளிய முறையின் முதலாவது உடைவு முதலாளியச் சங்கிலியின் மிகப்பலவீனமான கண்ணியான ரஷ்யாவிலே நிகழும் என்று சொன்னதை இரண்டாம் உலகப் போரின் பின்பு கிழக்கு ஐரோப்பாவில் கடந்த புரட்சிகர மாற்றங்களுடன் சேர்த்துக் குழப்பிக் கொண்டார். சோஷலிஸத்தின் வலிமையை மிகையாகவும் முதலாளியத்தினைக் குறைவாகவும் மதிப்பிட்டதாலேயே உலகின் போக்குப் பற்றிய சரியான பார்வை கிட்டவில்லை என்றும் வரலாற்றின் வளர்ச்சி நேர்கோட்டில் அமைவதில்லை என்றும் பேசிய அவரால் சோவியத் யூனியனில் எங்கே எப்போது தவறு நேர்ந்தது என்று சொல்ல இயலவில்லை.

க்குருஷ்ச்சொவ் என்கிற பேர் ஒரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. சோவியத் யூனியனில் ஸ்தாலினின் மறைவுக்குப் பின்பு ஏற்பட்ட திசை மாற்றத்தைச் சுட்டிக்காட்டுவதில் அவரது தயக்கம் விளங்கிக் கொள்ள இயலாதிருந்தது. சோவியத் யூனியனின் சிதைவிற்கு கொர்ப்சசொவ் தலைமை மீது பழியைப் போடுகிற அவரால் கொர்ப்சசொவ், யெல்ற்ஸின் போன்றவர்கள் எப்படி அதிகாரத்துக்கு வர முடியுமாயிற்று எனவோ சோவியத் யூனியனுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு மிடையிலான உறவு ஏன் சமாதான சகஜீவனத்திலிருந்து சரணாகதி சகஜீவனமாகியது எனவோ அவரால் விளக்க முடியவில்லை.

சீனாபற்றிப் பேசும் போது சீனப்புரட்சியின் முன்பும் அதன் பின்பான கால் நூற்றாண்டுக்கும் மேற்பட்ட சோஷலிஸ வரலாறும் பற்றி அவர் எதையுமே கூறவில்லை. சீனப் பண்பாட்டுப் புரட்சியை அரசியல் குழப்பம் என்னும் அதன் பின்பு மேற்கொள்ளப்பட்ட கொள்கைகளைத் தெளிவு என்றும் அவர் அடையாளங்காணுகின்றார். மா ஓசேதுங் சொன்ன ஒரு சொல்லைக் கூட மேற்கோள்காட்டாமல் டெங்ஷியாவோபிங் கூறியவற்றைப் பக்க நீளத்துக்கு மேற்கோள் காட்டி இன்றைய சீனாவின் போக்கை முற்றாக நியாயப்படுத்துகின்றார்.

சீனாவில் வருமான ஏற்றத்தாழ்வு, வேலையின்மை, ஊழல் போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளதை ஏற்றாலும் அதையெல்லாம் சீனக் கம்யூனிஸ்ற்கட்சி சமாளித்துவிடும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். சீனா இப்போது எந்த திசையில் போகிறது என்று தெரியாத அப்பாவி ஒருவரா யெச்சூரி? சி.பி.எம் தலைவர்கள் நிச்சயமாக முட்டாள்களல்ல. சீனாவைப் பற்றி அவர்கள் சொல்வது சோஷலிஸம் பற்றிய அவர்களது திரிபுவாதச் சீரழிவுக் கொள்கையின் ஒரு வெளிப்பாடலல்லாமல் வேறல்ல. சோஷலிஸமே எதிர்காலம் என்று தன் உரையை முடித்த யெச்சூரி உலகமயமாதலுக்கு எதிரான இயக்கங்களையும் லத்தின் அமெரிக்காவில் இடதுசாரிக் கட்சிகள் வலுப்பெறுவதையும் முன்வைத்தார், மிகவும் பொதுப்பட்ட முறையில் யுத்த எதிர்ப்பு, உலகமயமாதலுக்கு எதிர்ப்பு என்பனவற்றை ஒரு வலுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாக வளர்த்தெடுப்பதாலேயே சோஷலிஸத்தின் திசையில் கம்யூனிஸ்ற்றுக்களால் முன்னேறலாம் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த உரையில் அவர் சொன்னது மிகக்குறைவு. சொல்லாமல் தவிர்த்தவை நிறையவுண்டு. ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் எவ்வாறு செயற்படும் என்றோ உலகளாவிய ஒரு போராட்டம் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள ஒடுக்குமுறைகட்கு எவ்வாறு முகங்கொடுக்குமென்றோ அவர் பேச விரும்பவில்லை. ஏனெனில் அவரது கட்சி இன்று இந்தியாவினுள் நடக்கும் தேசிய இன ஒடுக்குமுறைகள் பற்றியோ சாதி ஒடுக்குமுறை பற்றியோ தெளிவான மாக்ஸிய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. இந்தியாவின் மேலாதிக்கக் கொள்கையைக் கண்டிப்பதற்கு மாறாக இந்திய மேலாதிக்கத்திற்குச் சாதகமாக நடந்து கொள்ளும் ஒவ்வொரு அயல் நாட்டுத் தலைமையையும் அங்கீகரிக்கிறது.

அச்சிட்ட உரைக்குப் புறம்பாக, இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுபற்றிப்பேசும் போது, அவர் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கத்தவறியது முன்குறிப்பிட்ட விடயங்களுடன் மிக உடன்பாடானதே.

சி.பி.எம் தொழிற்சங்க வியாபாரம் நடத்துகிற ஒருகட்சியேயொழிய தொழிலாளி வார்க்கக் கட்சியல்ல. அதன் தலைமை இன்று சீர்திருத்த வாதிகளைவிட சீரழிந்த வர்க்க சமரச வாதிகளிடம் முழுமையாகக்கை மாறிவிட்டது. பாராளுமன்றத் தேர்தல் கணக்குக்களை மட்டுமே பார்க்கிற சி.பி.எம் இந்தியாவை எதிர் நோக்கும் இந்துத்துவ ஃபாஸிஸம் போன்ற உள் நெருக்கடிகட்கும் ஏகாதிபத்திய உலகமாயமாக்கல் எனும் புற நெருக்கடிக்கும் எதிராக மக்களை அணிதிரட்டவோ வெகுசனப் போரட்டங்களை நடத்தவோ மாட்டாது. தான் ஆட்சி செலுத்துகின்ற மாநிலங்களில் அயல் மூலதனத்திற்குச் செங்கம்பளம் விரித்து வரவேற்கிற ஒரு கட்சியிடம் எதை எதிர்பார்க்க முடியும்?

யெச்சூரியின் வரவு சி.பி.எம் பற்றியநமது ஐயங்களை உறுதிப்படுத்தியுள்ளது. அவரை ஒரு மாக்ஸிய வாதி என்று சித்தரிப்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மாக்ஸியம் பற்றிய நம்பிக்கையைக் குலைக்கவே உதவும். அவ்வகையில் அவரை வரவழைத்த திரிபுவாதக் கட்சியினரும் வேறு உதிரிகளும் தமது வரலாற்றுப் பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளனர்.

**- திருமுகன் -**

### அமெரிக்காவும் போப்பாண்டவரும்

அடாவடித்தனத்திற்கும் அக்கிரமத்துக்கும் பெயர் பெற்ற அமெரிக்கா ஈராக்கில் அட்டூழியம் செய்து கொண்டிருக்கையில் மனிதாபிமானம்,சமூக நீதி,உலக அமைதி என்பன பற்றி அக்கறையுள்ள கத்தோலிக்க மக்கள் வெட்கித்தலைகுனியக் கூடிய நிகழ்வொன்று கடந்த 04ம் திகதி வத்திகா நகரில் இடம் பெற்றுள்ளது. கத்தோலிக்க இதழான 20-06-04 ம் திகதிய "பாதுகாவலன்" பத்திரிகைச் செய்தியின்படி அமெரிக்க சனாதிபதியின் சுதந்திர விருதெனப்படுமொன்று போப் யோன் போலுக்கு 04-06-04ல் புஷ்ஷினால் கொடுக்கப்பட்டுள்ளது. யப்பான் மீது இரண்டு அணுக்குண்டுகளை வீசி லட்சக்கணக்கானோரைக் கொன்றொழித்த அப்போதைய அமெரிக்க சனாதிபதி றெரிட்ரூமனால் இவ்விருது ஏற்படுத்தப்பட்டதாம். அப்பத்திரிகை மன வேதனைக்கும் வெட்கத்திற்கும் இடம் தருவதான மேலும் சில தகவல்களையும் தந்துள்ளது. அப்போதைய போப் 23ம் போல் இறந்தபின் 1963ல் இவ்விருது அவருக்குக் கொடுபட்டதாம் 2000ம் ஆண்டிலும் தற்போதைய போப்புக்கு அமெரிக்க காங்கிரசின் தங்கப் பதக்கமொன்று கொடுக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியன் வலுவான நிலையில் பிளவின்றி இருந்த போது மூன்றாம் உலக நாடுகளுக்கு ஓரளவுக் கேனும் பக்க பலமாக இருந்தது. அமெரிக்காவின் வாலும் கணிசமான அளவுக்குச் சுருக்கப்பட்டிருந்தது. போப் இளவயதாக இருந்த போது அவரது பிறந்த நாடான போலந்தில் ரஷ்யாவினால் ஏற்பட்ட கசப்பான அநுபவங்களுக்குப் பழிவாங்கும் முயற்சியாக அமெரிக்க உளவு நிறுவனத்துடன் ஒத்துழைத்து கொர்பச்சேவின் இயலாமையைப்பயன்படுத்தி ரஷ்யாவைப் பல வீனப்படுத்தினார் என்ற கருத்தும் உண்டு. இவ்விடயத்தில் போப் 3ம் உலக நாடுகளின் நலன்களை முற்றாகப் புறந்தள்ளிவிட்டார் என்றே கூற வேண்டும். அத்துடன் அமெரிக்காவையும் வத்திக்கானையும் பற்றிய முரண்பாடான தகவல்களுமுண்டு. அடிப்படைவாதக் கிறிஸ்தவக் குழுக்களைப் பயன்படுத்தி உலகளாவிய ரீதியில் போப் தலைமைதாங்கும் கத்தோலிக்க மதத்தைப் பலவீனப் படுத்தும் முயற்சியிலும் அமெரிக்கா ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் உண்டு சில தகவல்களின் படி வத்திகானின் தங்க இருப்பு அமெரிக்க வங்கிகளில் பாதுகாப்படுகிறதாகவும்

கொழும்பு -15 **வெட்கமடையும் கத்தோலிக்கன்.**

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 11 ஒக்டோபர் 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 73


அண்மையில் புதிய ஜனநாயக கட்சி கொழும்பில் நடாத்திய பகிரங்க அரசியல் கருத்தரங்கில் தலைமைத் தோழர்கள் உரையாற்றுகின்றனர்

# வடக்கு கிழக்கில் புனரமைப்பு புனர்வாழ்வு இல்லை. கொலைகளும் அவல வாழ்வுமே தொடர்கின்றன!

புரிந்துணர்வு ஒப்பந்தமும் யுத்த நிறுத்தமும் வந்து இரண்டரை வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால் யுத்தத்தினால் அழிவுற்ற வடக்கு கிழக்கும் அல்லற்பட்டு அவலவாழ்வு வாழ்ந்த மக்களினது வாழ்வும் அப்படியே தொடர்கிறது. ஏ9 வீதியும் ஏனைய சில பாதைகளும் திறந்து விடப்பட்டதும் பொருட்கள் எடுத்தச் செல்வதில் இருந்த கட்டுப்பாடுகளில் தளர்வுகளுமே இடம் பெற்றன. ஆனால் மக்களது அடிப்படை வாழ்வுப் பிரச்சினைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. வெளிநாட்டு பணவருவாயைப் பெறும் குடும்பங்களைத் தவிர்ந்த ஏகப்பெரும்பான்மையான வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வு பல்வேறு நெருக்கடிகள், சவால்கள், இல்லாமை இயலாமை என்றவாறே நகர்ந்து செல்கின்றன.

அரசு சாரா நிறுவனங்கள் செய்து வரும் மட்டுப்படுத்தப்பட்ட புனரமைப்பு ஆங்காங்கே இடம் பெறுகின்றன. அவ்வாறே அரசாங்கம் தனது அதிகாரத்தையும் நிர்வாகத்தையும் இறுக்கிக் கொள்ளும் வகையிலான புனரமைப்பை மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்து வருகின்றது. அதேவேளை புனரமைக்கப்படவேண்டி மக்களின் அன்றாடத் தேவைக்கான பொதுக் கட்டிடங்கள் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள் யுத்த கால அழிவுக் கோலங்களுடனேயே காட்சி தருகின்றன. மிகவேகமாகக் கட்டப்பட்டு வரும் கோவில்களையும் அவற்றின் பெரும் திருவிழாக் களையும் அங்கு கூடும் மக்களையும் பார்த்து வடக்கு கிழக்குப் பழைய நிலைக்கு வந்து விட்டது எனக் காட்டுவதற்கு அரசாங்கமும் அதன் ஆதரவு சக்திகளும் ஊடகங்கள் சிலவும் முயற்சிக்கின்றன.

வடக்கு கிழக்கில் ராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரிலான எல்லைப் பகுதிகளுக்குள் வாழ்ந்து வந்த மக்கள் அங்கிருந்து விரட்டப்பட்டு பதினைந்து வருடங் களாகியும் இன்று வரை திரும்ப முடியவில்லை. அவர்களது வீடுகள் விளைநிலங்கள் தொழில் துறைகள் யாவும் அழிந்த நிலையில் அகதிகள் என்பதற்குப் பதிலாக இடம் பெயர்ந் தோர் என்ற கௌரவப் பெயரில் முகாம்களிலும் தனியார் வீடுகளிலும் வசதிகள் அற்ற சூழலும் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் கூட ஒழுகின்றியும் வெட்டிக் குறைக்கப்படக் கூடிய ஆபத்திலும் இருந்து வருகின்றன. மீளக்குடியமர்வும் புனர்வாழ்வும் புனரமைப்பும் உரிய திட்டமிட்ட வகையில் நடைமுறைக்கு வராத வரை வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வு அவலவாழ்வாகவே தொடர முடியும். இந் நிலையில் வடக்கு கிழக்கில் இனம் காட்டாத அல்லது உரிமை கோரப்படாத கொலைகள் தொடர்கின்றன. அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஆயுதக் குழுக்களும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி வரும் சூழலில் கொலைகள் தொடர்கின்றன. ஆங்காங்கே இரத்தப்பெருக்கால் மண் நனைந்த வண்ணமே உள்ளது. கிழக்கில் இச்கொலை நிகழ்வுகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. எனவே வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருந்து வருகின்றது என்ற போதிலும் ஒரு வகையான சத்தமற்ற யுத்தம் தொடர்வதையே காணமுடிகின்றது.

எனவே இவை யாவற்றுக்கும் ஒரு முடிவு ஏற்பட பேச்சுவார்த்தை உடன் தொடங்கப்படல் வேண்டும். புனரமைப்பு புனர்வாழ்வு அபிவிருத்தி என்பனவற்றுக்கும் கொலைகள் தாக்குதல்கள் அற்ற சூழலுக்கும் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு இன்று அவசியமாகும். விடுதலைப் புலிகளுட னான பேச்சுவார்த்தையும் புரிந் துணர்வுடன் கூடிய இணக்கப் பாடுமே அதனைச் சாத்தியமாக்கக் கூடியதாகும். இதனைவிட வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்வை மீட்க வேறு மார்க்கம் இருக்க முடியாது.

# மனித உரிமைகள் ஆணைக்குழு மீதான தாக்குதல்

## யாழ்-பொலிஸாரின் அடாவடித்தனம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண. மாவட்ட பிரதிநிதிகள் ஐ.நா. சபையின் மனிதஉரிமைகள் ஆலோசகர் ஆகியோர் யாழ்ப்பாண பொலிஸாரி னால் தாக்கப் பட்டமை காட்டு மிராண்டித்தனமான பொலிஸ் அராஜகமாகும். அத்தாக்குதலை புதிய பூமி வன்மையாக கண்டிப்ப துடன். அத்தாக்குதலை நடத்திய பொலிஸாரை சேவையிலிருந்து இடைநிறுத்தி. கைதுசெய்து சட்டத் தின் முன்நிறுத்தி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வற்புறுத்துகிறது.

தாக்குதலுக்குள்ளான இலங்கை மனித உரிமைகள் ஆனைக்குழு வின் யாழ் மாவட்ட இணைப்பாளர் றுவான் சந்திரசேகர விசாரனை அதிகாரி எம்.பி.சற்பெரோஸ், ஐ.நா மனித உரிமை ஆலோசகர் பற்றிக் ஆகியோரின் துணிச்சலான கடமை உணர்வை பாராட்டுவதுடன் அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை யும் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்ப்பாண மேல் நிதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரை பொலிஸார் துப்பாக்கியால் சுட்டு கைதுசெய்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் வைத்து சித்திர வதைக்குள்ளாக்கியுள்ளனர். அது பற்றிய முறைப்பாட்டின் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்-மாவட்ட பிரதிநிதிகள் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு சென்று நிலைமை யை அறிய முற்பட்டபோதே பொலிசா ரால் தாக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகளை உறுதி செய் வதில் சட்டப்படி உயர்நீதிமன்றத்திற்கு இருக்கும் அதிகாரமும் அந்தஸ்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இருக்கிறது. அதற்கு எதிராக செயற்பட்டவர் களை சும்மா விட்டுவைக்கக் கூடாது.

அத்துடன் யுத்தமில்லாத சூழ்நிலை யில் யாழ்ப்பாணத்தில் பொலிஸார் இவ்வாறு நடந்து கொண்டது இதுதான் முதற்தடைவை அல்ல. இவ்வாறான நடவடிக்கைகளை தடுத்துநிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சட்டத்தைப் பாது காப்பதற் கென்றே அமர்த்தப்பட்ட காக்கிச் சட்டைகளினால் அராஜக மும் அமைதியீனமும் தலைவிரித் தாடுவது தவிர்க்க முடியாததாகி விடும். மனித உரிமைக் குழுவினருக் கே பொலீஸ் நிலையத்தில் இந்தநிலை என்றால் சாதாரண மக்களுக்கு எத்தகைய கதி நடந்து வருகின்றது என்பதை ஊகித்துக் கொள்ள முடியும்.

இத்தாக்குதல் பற்றி புதிய ஜனநாயக கட்சியும் ஏனைய அமைப்புகளும் வன்மையான கண்டனத்தை தெரிவித்து, உடன் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியையும் பொலிஸ்மா அதிபரையும் கேட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

### இ.தொ.கா....

1ம் பக்க தொடர்ச்சி

ஆனால் எவ்வேளையும் காட்டிக் கொடுக்கும் எண்ணத்தைக் கொண்ட இ.தொ.கா.வின் எதிர்ப்பை பற்றியே முதலாளித்துவ ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுவந்தனர். மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் நடவடிக்கைகளை இருட்டடிப்பு செய்தும் வருகின்றன.

மே.கொ., திட்டத்திற்கு எதிரான மக்களின் போராட்டம் என்பது இ.தொ.கா அரசியல் லாபமடைவதற் கானவிடயமல்ல. மாறக மக்களின் இருப்புடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். பதவிகளுக்காகவும் கமிஷன்களுக் காகவும் அப்போராட்டத்தை காட்டிக் கொடுப்பதை பலியிடப்படுவதை அனுமதிக்க முடியாது.

### நியாயமான... 1ம் பக்க தொடர்ச்சி

எனவே நாட்டின் நாலாதிசைகளிலும் தொழிலாளர்கள் ஊழியர்கள் சம்பள உயர்வு உட்பட தத்தமது கோரிக்கைகளை முன்வைத்து போராடவேண்டிய கட்டயத்திற்கு உள்ளாகி வருகின்றனர். அவர்களது கோரிக்கைகளும் போராட்டங்களும் முற்றிலும் நியாமானவையாகும்.அவற்றை முறியடிக்க இறுதியில் பொலீஸ் ராணுவ அடக்குமுறையைப் பயன்படுத்திக் கொள்ளவே அரசாங்கம் முயற்சி செய்யும். சட்டம் ஒழுங்கு அமைதி என்ற பெயரிலும் பொதுமக்களின் தேவை சேவை நலன்களைப் பாதுகாப்பதாகக் கூறி வேலை நிறுத்தப் போராட்டங்கள் முறியடிக்கப்படும் நிலையே தோன்றும். ஆனால் தொழிலாளர்களின் போராட்டங்களை எத்தகைய அடக்குமுறையாலும் தோற்கடிக்க முடியாது என்பதே நடைமுறை உண்மையாகும். இச்சந்தாப் பத்திலேயே தொழிலாளார் ஆதரவு வேடமணிந்த கட்சிகளின் உண்மை முகங்களை மக்கள் காண நேரிடும்.

### பேச்சுவார்த்....

1ம் பக்க தொடர்ச்சி

ஒன்றையும் நடத்த முடியாத கையறு நிலையிலேயே இருந்தும் வருகிறார் ஜனாதிபதி. எனவே தான் தன்னையும் தனது அரசாங் கத்தையும் சமாதானப் பேச்சு வார்த்தைக்கான பிரியர்களா கவும் வெளி உலகுக்கு காட்டி புலிகளை யுத்தத்திற்கு நிற்பவர் களாவும் சித்தரித்து அவர் களை முடங்கச் செய்வதற் கான சத்தமற்ற தந்திரோ பாயம் ஒன்றையே ஜனாதி பதியும் அவரது கொள்கை வகுப்பா ளர்களும் பின் பற்றி வருகிறார்கள். அதன் வெளிப்பாடுகளில் ஒன்றே காலத்தை இழுத்தடித்துச் செல்லும் உத்தியாகும். ஆனால் இது வாளில் நடப்பது போன்ற ஒன்றாகும். இதனால் எந்த நேரத்திலும் யுத்தத்தை வெடிக்க வைப்பதில் தான் சென்றடைய முடியும்.

ஜனாதிபதி இங்வாறு பிரதான பிரச்சி னையான தேசிய இனப்பிரச்சினை யில் இழுத்தடிப்பைச் செய்து வரும் அதேவேளை மறுபுறத்தில் பொருட் களின் விலை அதிகரிப்புகள் கட்டண உயர்வுகள் மிக வேகமாக வானை நோக்கிச் சென்று கொண்டிருக் கின்றன. இந்த வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு தனியே உலகச் சந்தையில் ஏற்பட்ட எண்ணெய் உயர்வால் மட்டும் வந்த ஒன்றல்ல. கடந்த இருபத்தைந்து வருடங்களா கக் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வந்த தவறான பெருளாதாரக் கொள்கைகளின் எதிர் விளைவு களாகும். ஏற்கனவே அரிசியினது விலை உயர்வடைந்தமைக்கும் தற்போது மேலும் அதிகரித்துச் செல்வதற்கும் காரணம் தான் என்ன? தன்னிறைவு உற்பத்தி செய்யக் கூடிய ஒரு விவசாய நாட்டில் வாழ்ந்து கொண்டு இன்று அந்நிய நாடுகளில் இருந்துவரும் கப்பல்களுக்காக காத்துக்டகிக்கும் நிலைக்கு நெல் உற்பத்தியை நாசமாக்கியவர்கள் யார்? இன்று யூ.என்.பி.யும் ரணில் விக்கிரமசிங் காவும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புப் பற்றித் துள்ளிக் குதித்து மக்களுக்காக அழுவது போன்று நடிக்கிறார்கள். ஆனால் அவர்களின் கடந்த காலப் பொருளாதாரக் கொள்கையின் விளைவையும் சேர்த்துத் தான் இன்று மக்கள் விலைகள் உயர்வையும் கட்டண அதிகரிப்பையும் தாங்கமுடியாத சுமைகளாக சுமந்து வருகின்றனர்.

யூ.என்.பி.யும் - ரணிலும் இன்று வீதியில் இறங்கி நிற்பது மக்களுக்காக அல்ல. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறவதற்காக வேயாகும். எனவே ஆளும் வர்க்கத் தினருக்கு அதிகாரப் போட்டியே முக்கியம். நாட்டையும் மக்களையும் பற்றியல்ல என்பதே உண்மை நிலையாகும்.

அதேவேளை ஜே.வி.பி.யின் வார்த்தை ஜால முழக்கங்களைக் கேட்டு நம்பி வாக்களித்த மக்கள் மிக விரைவாகவே அதன் சுயரூபத் தையும் இயலாத்தனத்தையும் கண்டு வருகின்றனர். மக்கள் முன் செல்வதற்கு ஜே.வி.பி .பின்நிற்கிறது. எதனை மக்களுக்கு கூறுவது எனத் தெரியாது திணறுகிறது. எனவே அவர்களுக்கு உள்ள ஒரே ஆயுதம் புலி எதிர்ப்பு வீராவேசப் பேச்சும் பேரினவாத முன்னெடுப்பு மட்டுமேயாகும்.

ஆறு மாதத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி செய்வதறியாது திகைத்து நிற்கிறது. அதனைப் பயன்படுத்தி அடுத்த அதிகாரக் கதிரைகளுக்கு வர யூஎன்.பி நிற்கிறது. ஆனால் ஏகப் பொரும்பான்மையான மக்கள் ஒரு புறத்தில் யுத்தம் வெடித்து விடுமோ என்றும் மறுபுறத்தில் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத அவலத்திலும் நாட்களைக் கழித்து வருகின்றனர். இதுவே இன்றைய யதார்த்த நிலையாகும்.

### தமிழகத்

11ம் பக்க தொடர்ச்சி

கருணாநிதியின் நழுவல் போக்குக் கும் கோபாலசாமி யின் நழுவல் போக் குக்குமிடையே அதிகம் வேறுபாடு இருக்கவில்லை. விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத் தைக் கைப்பற்றியிருந் தால் பலாலி இராணுவ முகாம லிருந்த படையின ரைக் காப்பாற்று வதற்காக இந்தியா 'மனிதாபிமான' நோக்கில் குறுக்கிட லாம் என்பதை இவர்களால் மறுக்க இயலவில்லை.

இலங்கைத் தமிழர்கள் கவனிக்கத் தவறக்கூடாத விடயங்கள் பல உண்டு. இந்திய அரசாங்கம் நிறை வேற்றிய சனநாயக விரோதச் சட்டங் களுக்கு தி.மு.க.வும் ம.தி.மு.க.வும் உடந்தையாகவே இருந்தன. தேசிய இன ஒடுக்கு முறை காஷ்மீரம் முதல் கிழக்கு இந்திய மாநிலங்கள் வரை கட்டவிழ்த்து விடப்பட்டபோது விடுதலைப் போராளிகளுக்கு எதிரான நிலைப்பாட்டையே ஈழத் தமிழ் விடுதலைப் போராட்டத்தின் நம்பிக்கைச் சுடர்கள் எடுத்தன. இந்தியாவின் பிராந்திய மேலாதிக் கத்தை நோக்கமாகக் கொண்ட இந்திய அயற்கொள்கையை இவர்கள் விமர்சனமின்றி ஏற்கிறார்கள். உண்மை ஏதெனில் அவ்விடயத்தில் இவர்களால் எதுவுமே செய்ய இயலாது!

இந்தியாவின் அண்மைய அரசியல் மாற்றத்தின் பின்பு ம.தி.மு.க. தலைவர் பிரதமர் மன்மோகன் சிங்குடன் நடத்திய பேச்சுவார்த்தை களில் விடுதலைப் புலிகள் மீதான தடை பற்றி வற்புறுத்திப் பேசுவார் என எதிர்பார்த்தவர்களுக்கு மிகுந்த ஏமாற்றமே காத்திருந்தது. இலங்கைத் தமிழர் விடயம் பற்றி கோபாலசாமி அதிகம் பேசவுமில்லை மன்மோகன் சிங் எவ்வகையிலும் பிடிகொடுக்கவுமில்லை. ஆனாலும் மன்மோகன் சிங் காட்டிய முகபாவங்களிலிருந்து ஈழத் தமிழருக்குச் சாதகமான இந்திய அரசாங்க நிலைப்பாட்டை எதிர்பார்ப்ப தாக கோபாலசாமி மழுப்பியதை நமது ஏடுகள் பெரிதுபடுத்தி வெளியிட்டுள்ளன. யார் யாரை ஏமாற்றப்பார்க்கிறோம்? நமது ஏடுகள் பதில் சொல்லுமா?

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.